13696.

# ஸ்ரீ ஞானனந்த சேவா சமாஜம்

# SRI GNANANANDA SEVA SAMAJAM

13696



270.6
ஞானான
SL/PR

சிறப்பு மலர் — 1978

ஸ்ரீ ஞானனந்த சேவா சமாஜத்தின்

நற்பணிக்கு

எமது வாழ்த்துக்கள்!

# RATNAM'S

146, 2nd, CROSS STREET.

COLOMBO—11.

T'P 2040

உ 30.6
ஞானா.
13696



உ

# சத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள்
# ஜெயந்தி விழா

## 18–I–78 ம் உ புதன்கிழமை

கொழும்பு-4 புதிய கதிரேசன் மண்டபத்தில்
நடைபெற்றதன் சார்பாக இம் மலர் மலர்ந்தது.

இம் மலரை மலர ஆதரவு தந்த
கட்டுரை ஆசிரியர்களுக்கும்,
விளம்பரம், பொருள் தந்துதவிய வணிக பெருமக்களுக்கும்
மற்றும் ஆதரவு தந்த அன்பர்கள் அடியார்களுக்கும்,

## ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகளின்

பரிபூரண திருவருளும் ஆசியும் என்றென்றும் உண்டு.

—ஸ்ரீ சுவாமி ஹரிதாஸ்கிரி.



கொழும்புத் தமிழ்ச் சங்கம்

பரிவும் பணிவும்

உ

ஓம்

சத்குரு ஸ்ரீ ஞானானந்தாய நம!

# ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம்

4 சம்னர் பிலேஸ் கொழும்பு, ஸ்ரீ லங்கா.

---

ஸ்தாபக போஷகர்:

## H. H. ஸ்ரீ சுவாமி ஹரிதாஸ கிரி அவர்கள்

| | |
|---|---|
| தலைவர் : | ஸ்ரீ K. P. காளியப்பபிள்ளை |
| உபதலைவர் : | ஸ்ரீ T. K. வாசுவாணி |
| காரியதரிசி : | ஸ்ரீ M. P. நடேசன் |
| பொருளாளர் : | ஸ்ரீ R. சீனிவாசகம் |

### நிர்வாக அங்கத்தவர்கள் :

ஸ்ரீ N. அம்பலவாணர்
ஸ்ரீ A. K. யோகேந்திரன்
ஸ்ரீ S. ரத்தினம்
ஸ்ரீ S. பெரியசாமி
ஸ்ரீ M. தாய்மான்
ஸ்ரீ P. கிருஸ்ணசாமி

ஸ்ரீமதி S. கனகசபை
ஸ்ரீமதி ஹைமாவதி சோமசேகரம்
ஸ்ரீ M. திருப்பதி
ஸ்ரீ A. T. மூர்த்தி
ஸ்ரீ M. வீரப்பபிள்ளை

### சமாஜத்தின் நோக்கம் :

- தெய்வீக பிரச்சாரங்கள்
- மாணவர்கள், இளைஞர்களை ஊக்குவித்தல்
- மருத்துவ, உதவி ஆற்றல்
- அநாதை ஆசிரமமைத்தல்
- இதர சமூக, தெய்வீக, ஆன்மீகத் தொண்டுகள்

## ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகளின்

# அருள் மொழிகள்

நீ கடவுளை உணர வேண்டுமா?

அன்பாயிரு. உண்மையே சொல்

அறிவாளியாயிரு. ஆண்மையோடிரு

| | | |
|---|---|---|
| சுறுசுறுப்பாயிரு | ஆனால் | படபடப்பாயிராதே |
| பொறுமையாயிரு | ,, | சோம்பலாயிராதே |
| சிக்கனமாயிரு | ,, | கருமியாயிராதே |
| அன்பாயிரு | ,, | அடிமையாயிராதே |
| இரக்கங்காட்டு | ,, | ஏமாந்துபோகாதே |
| கொடையாளியாயிரு | ,, | ஓட்டாண்டியாய்விடாதே |
| வீரனாயிரு | ,, | போக்கிரியாயிராதே |
| இல்லறத்தை நடத்து | ,, | காமவெறியனாயிராதே |
| பற்றற்றிரு | ,, | காட்டுக்குப் போய்விடாதே |
| நல்லோரை நாடு | ,, | அல்லோரை வெறுக்காதே |

---

ஓம் மங்களம் ஓங்கார மங்களம்
ஓம் நமசிவாய குருவே மங்களம்

ந மங்களம் நகார மங்களம்
நாமரூப நீனே யாதே குரவே மங்களம் (ஓம்)

ம மங்களம் மகார மங்களம்
மஹாதேவ நீனே யாதே குரவே மங்களம் (ஓம்)

சி மங்களம் சிகார மங்களம்
சித்த புத்த நீனேயாதே குரவே மங்களம் (ஓம்)

வா மங்களம் வகார மங்களம்
வாமரூப நீனேயாதே குரவே மங்களம் (ஓம்)

ய மங்களம் யகார மங்களம்
எல்லா ரூப நீனேயாதே குரவே மங்களம் (ஓம்)

# ஞானமலை

கி. வா. ஜ.

மூவர் மொழிவிளக் கேற்றி முகுந்தனைப்
பாவிற் பரவிப் பணிந்த இடம்—கோவலென்னும்
நல்லபதி; அங்கே நவையிலா வீரட்டர்
வல்லஅருள் தந்தினிது வாழ்கின்றார்—எல்லவரும்
ஏத்தும் ரகோத்தமர் ஈடில் திருக்கோயில்
மாத்துவர்கள் கூடி மகிழும்இடம்—ஆத்திகர்கள்
மும்மதத்தார் வந்திந்த மூர்த்திகளைத் தாம்பணிந்து
விம்மிதங்கொண் டானந்தம் வீறுகின்றார்—அம்ம அங்கே
பெண்ணை நதியோடும்; பேணும் வரலாற்றில்
நண்ணிப் பிறக்கும் நதியதுவே;—விண்ணவரும்
போற்றுமிந்தப் பொன்னகரில் புண்ணியர்கள் ஏத்தெடுப்ப
நாற்றிசையும் கீர்த்தி நனிவளர—மாற்றரிய
தங்கமாய் ஞானத் தவமுனியாய் யோகியர்
சங்கம் பரவும் தனிச்சுடராய்—பங்கமிலாப்
பத்தி பரப்புகின்ற பானுவாய் ஞானமெனும்
சித்தி வழங்கும் திருவுருவாய்—எத்திசையும்
வந்து பணியும் மகானாய் விளங்குமன்பர்
சிந்தையினில் இன்று சிறந்திருக்கும்—அந்தணனாய்
ஞானானந் தப்பேர் நவின்றோர் பவங்கெடுக்கத்
தானானந் தச்சலதி சார்ந்தவனாய்—மேனாள்
பிறந்தகுடம் காலமுதற் பெற்றியெவ ருங்கண்
டறிந்தறியா வண்ணம் அவிர்ந்தான்—கறந்தபால்
போலப் பளிங்கினியல் போலக் குழந்தையெனும்
சீல முடைய திருவுடையன்—பாலணுகும்
அன்பர் மனப்புண்கள் ஆறுதற்கு நல்லுரைகள்
என்பவற்றை யேமருந்தா ஈந்தருள்வோன்—இன்பமென்ப
துள்ள அமைதியில் ஊற்றெழுவ தென்றுசொல்லி
மெள்ளத் திருத்தொண்டர் மேவுங்கால்—கள்ளமிலாப்
பார்வையால் சொல்லால் பரிந்தே இடும்உணவால்
நேரறிய சாந்தி நிறைவிப்போன்—தீர்வரிய
சச்சிதா னந்தத் தனிப்பொருளை இவ்வுருவாய்
நச்சுபவர்க்கின் பத்தை நல்குதற்கு இச்சைகொண்டு
வந்த தெனச்சொல்லும் மாட்சியுடை யோன்நாமம்
சிந்தித்து வந்தித்துத் தெய்வவுரு—பந்தமறச்
சானிப்போம்; வாழ்த்துவோம்; சரணார விந்தமென
மானிப் போம் பத்தி மலிந்து.

# ஸ்ரீ சற்குரு மகிமை

ந. பிச்சுமணி ஐயர்

அடியென்றால் பாதம். திருவடியென்றால் பெருமை பொருந்திய பாதம். எத்தகைய பெருமை.? பணிகின்றவர்களது பாதக மலங்களைப் போக்கக் கூடிய, விரும்பியதை வாங்கக்கூடிய, இம்மைக்கும் மறுமைக்கும் உரியதை அளிக்கக்கூடிய, பிறவாப்பேற்றை நல்கும் திறமுடைய பாதம் திருவடியெனப்படும். இவையனைத்தையும் ஒருங்கே வழங்குவது சற்குரு திருவடிதான்.

தலைப்பட்ட சற்குருவின் சந்நிதி யிலல்லால்
வலைப்பட்ட மானதுவேயாம்.

குரவனற் பார்வை தன்னாற் குலைந்திடும் பாவமெல்லாம்
குரவனற் கையிற் றீண்ட குளிர்ந்தது முத்தாப நீங்கும்
குரவனன் மனத்தா னோக்கக் கோடு நற்குணங்களுண்டாம்
குரவனல் வாக்கினாலே குருகிடா தவித்தை நீங்கும்.

குரு மொழியே மலையிலக்கு மற்ற மொழியெல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வ தொக்குங் கண்டாய்.

அருளினா லன்றி யகத்தறிவில்லை
அருளின் மல மறுக்கலாம்.

குரவனே பிரம்மன் மாயோன் குணமுறும் உருத்திரன் மெய்க்
குரவனே மகேச்வரன் சீர் கொளுஞ் சதா சிவனா மாவன்
குரவனே சத்சித்தின்பக் கூடத்தப் பிரம மந்தக்
குரவனோர் மிகுந்த பாதங் கொண்டார் வீடே.

இப்பாடல்கள் யாவும் குருசாந்தி, குருதரிசனம், குருமொழி, குருஅருள், குருபாதம் ஆகியவற்றின் பெருமைகளை நன்கு உணர்த்துகின்றன.

அழலது கண்ட மெழுகது போலவும்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியும் — என்று

மாணிக்கவாசகர் கூறியபடி குருவைப்பணிந்து போற்றி பக்தி செய்யவேண்டும். இதற்குச் சேவையே அடிப்படை. குருவினிடம் பரிபூரண சரணாகதியடைந்து 'நான்' எனும் சிந்தையற்று "பயனெதிர் நோக்காது பணிசெய்தல் நின் கடன்" என்ற கீதையின் கருத்துப்படி சேவை செய்யவேண்டும். சேவை செய்யும்போது (உயிரினும் சிறந்த) மானத்தை இழக்கச் சந்தர்ப்பமேற்பட்டால் அதற்கும் தயாராக இருக்கவேண்டும். மற்ற இடங்களில் உயிரைக் கொடுத்தேனும் மானத்தைக் காக்கவேண்டும். குரு சந்நிதியில் மானத்தை இழந்தேனும் சேவை செய்யவேண்டும். உடல், பொருள், ஆவி அத்தனையும் குருவுக்கே என்ற பரிபூர்ண சரணாகதி அப்பொழுதுதான் புலனாகும். பின் வரும் வரலாறுகள் இக்கருத்தை ஓரளவு உணர்த்துவதைக் காண்போம்.

புத்தர் தம்மிடம் பணிபுரிய வந்த சீடர்களில் ஒருவனை பின்வருமாறு வினவினார். நீ இங்கு சேவை செய்ய விரும்புகிறாயே, மக்கள் உன்னைப் பரிகசித்தாலும் நிந்தித்தாலும் என்ன செய்வாய்? என்றார். இவர்கள் நல்லவர்கள் கைநீட்டாமல் பேச்சளவோடு நின்றார்களே என்று மகிழ்ச்சிகொள்வேன், என்றான். அவர்கள் உன்னை அடிக்கவும் அடிக்கிறார்கள்: அப்பொழுது என்ன செய்வாய்? என்றார். ஆயுதங்கொண்டு தாக்காமல் வெறுங்கை அடியோடு நிறுத்திக் கொள்ளுகிறார்களே என்று மகிழ்வேன் என்றான். உன்னை ஆயுதங்கொண்டே அடிக்கிறார்கள். அப்பொழுது என்ன செய்வாய்? பிறவித்தளையிலிருந்து விடுபட ஒவ்வொருவரும் எவ்வளவோ பாடு படுகிறார்கள். சுலபமாக இப்படி முக்திக்குப்போக வழி செய்கிறார்களே என்று போற்றுவேன். என்றான்.

நீ கோழையா? வலிமையற்றவனா? ஏன் இப்படி அவர்களிடம் பொறுமையாக பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டார் புத்தர். பிரபோ! நான் தங்களைப் பரிபூரண சரணா

கதியடைந்து சேவை செய்ய வந்துள்ளேன். இவர்களோடு எதிர்த்து நின்றால காலம் வீணாகும். சேவையே பெரிதென எண்ணுகிறேன். என் முன் தீவினைப் பயன் இங்கு சேவை செய்ய விடாது இவர்கள் மூலம் தடை செய்கிறது என எண்ணுகிறேன். தங்கள் கிருபையால் சேவையில் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கையுள்ளது என்றான். அவனது தளராத உறுதியையும், ஆர்வத்தையும் கண்ட புத்தர் சேவை செய்ய அனுமதித்தார்.

மிதிலையைச் சத்துருக்கள் திடீரெனத் தாக்கினர். எதிர்பாராத தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் தோற்றார் ஜனகர். காட்டிற்குச் சென்று அலைந்தார். பசி அதிகரித்தது. பிச்சை எடுத்தார்: அரிசி கிடைத்தது. மண்கலயம் பெற்று மரத்தடியில் சமைத்தார். நியம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தார். இரண்டு காளைகள் சண்டை போட்டுக்கொண்டு அவ்விடம் ஓடிவந்தன. ஜனகர் எழுந்திருப்பதற்குள் அன்னமிருந்த கலயத்தை இடறி விட்டுச் சென்றன. காளையின் கால்பட்டதும் கலயம் உடைந்தது. தரையெங்கும் அன்னம் சிதறியது. மண்ணோடு கலந்த அன்னத்தையும் ஓடி மறையும் காளைகளையும் மாறி மாறிப் பார்த்தார். கடந்த கால ராஜ போகங்களையும் தற்போதைய நிலையையும் எண்ணிப்பெருமினார். இதுதான் வாழ்க்கையா? இனி எப்படி வாழ்வது? தெய்வமே! இப்படியுமா உன் சோதனை? என்று கத்திவிட்டார். விழித்தார். ஆச்சர்யம் தாங்கவில்லை. என்ன! இவ்வளவும் கனவா? மனம் ஆராய்ச்சியில் இறங்கியது.

கனவில் கண்ட வறுமையின் பயங்கர நிலையையும் நனவில் அனுபவித்துக் கொண்டிருக்கும் சுக போகங்களையும் அவரது உள்ளம் பல தடவை ஒப்பிட்டுப் பார்த்தது. எது உண்மை வாழ்க்கை? சரியான பதில் கிடைக்கவில்லை. குழப்பத்துடன் சபைக்கு வந்தார். அவைப் புலவர்களை நோக்கி “அது உண்மையா அல்லது இது உண்மையா” என்றார். பலர் பலமுறை விளக்கம் கேட்டும் இதற்கு மேல் ஒன்றும் கூறவில்லை ஜனகன். புலவர்கள் அரசனது வினாவுக்கு விடைகூற முடியாமல் குழப்பத்தோடு திரும்பினர். நாட்கள் கடந்தன; சரியான பதில் கிடைக்காதலால் அரசன் பெரிதும் வருந்தினான்.

கஹோடரின் புதல்வர் அஷ்டவக்ரர் என்ற பிரமசாரி மிதிலைக்கு வந்தார். அரசனது ஐயம் பற்றி கேள்வியுற்று அவைக்கு வந்தார். விகாரமான இவரது உருவத்தைக் கண்ட அவைப் புலவர்களும், மற்றவர்களும் இவரா ஐயத்தைப் போக்குபவர் என்று சிரித்தனர். அரசன் வந்தவரை வரவேற்று ஆசனம் கொடுத்து அமரச் செய்தான். அஷ்டவக்ரர் அரசனையும் அவைப் புலவர்களையும் ஒருமுறை நன்கு பார்த்துவிட்டு மன்னனை நோக்கிப் பயங்கரச் சிரிப்பு சிரித்தார். சிரிப்பைக் கண்ட அனைவரும் ஸ்தம்பித்தனர். அவையில் அமைதி நிலவியது. “தங்களது விகார உருவத்தைக்கண்டு புலவர்கள் சிரித்ததில் ஓரளவு கருத்துண்டு; தாங்கள் சிரித்ததன் காரணம் யாதோ?” என்றான் அரசன். “என் வெளி உருவத்தைக் கண்டு என் யோக்யதையை நிர்ணயிக்கும் இந்த மூடர்களை வைத்துக் கொண்டு நீர் எப்படித்தான் ராஜ்ய பரிபாலனம் செய்கிறீரோ? அதை நினைத்தே சிரித்தேன்” என்றார். அனைவரும் வெட்கத்தால் தலை குனிந்தனர். பின் அரசன் அஷ்டவக்ரரிடம் “அது உண்மையா அல்லது இது உண்மையா?” என்ற தமது சந்தேகத்தைக் கேட்டான். அஷ்டவக்ரர் ஒரு கணம் யோசித்துவிட்டு “அது எப்படியோ? அப்படியே தான் இதுவும்” என்றார். புரியவில்லையே என்றான் மன்னன். “நீ எதையாவது மறைத்துச் சொல்லாம்; கேள்வியை விளக்கிச் சொல்” என்றார். தான் கண்ட பயங்கரக் கனவை விவரமாகச் சொன்னான் மன்னன். அந்தக் கனவு வாழ்க்கையை உண்மை என்று நம்புவதா அல்லது இந்த நடைமுறை வாழ்க்கையை நம்புவதா என்றான். அஷ்டவக்ரர் தமது பதிலை ஒப்பிட்டுப் பார்க்கும்படி சொன்னார். அது எப்படியோ அப்படியே தான் இதுவும்; இரண்டும் அழிவுள்ளவை: கனவு எப்படி மாயையோ அதாவது உண்மை இல்லையோ அப்படியே தான் இந்த வாழ்க்கையும். கனவின் நிலையாமை வெகு சீக்கிரம் தெரிந்துவிடும்: இது புலப்பட காலதாமதமாகும். இவ்வுலகத்தின் அழிவுடைமையை அறிவுறுத்தவே கனவு உலகத்தையும் படைத்துள்ளான் இறைவன்.

மன்னன் அஷ்டவக்ரரின் கால்களில் வீழ்ந்து வணங்கினான். தாங்கள் மகாஞானி: தாங்கள் தான் எனக்குக் குரு: பிரமஞானம் உண்டாக உபதேசம் வேண்டுமென்றான். காணிக்கை என்ன கொடுப்பாய் என்றான். அருகிலிருந்த அமைச்சனிடம் சைகை செய்தான் மன்னன். செல்வங்கள் குவிந்தன; மலைபோல் குவிந்த செல்வத்தைக் கண்ட அஷ்டவக்ரர், அல்ப செல்வத்திற்கு நான் ஆசைப்படவில்லை, உண்மை அன்பிருந்தால் உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணி என்றார்.

ஓர் ஏழைப் பிராமணன் தன் மகனின் உபநயனத்திற்காக யாசகம் வேண்டி அவ்வமயம் வந்தான். மன்னனைக் கண்டான்; பணிந்தான். உபநயனம் நடத்த யாசகம் கேட்டான். மன்னன் பதில் பேசவில்லை, எதிரே குவிந்திருக்கும் செல்வங்களையும், பேசாமல் இருக்கும் மன்னனையும் பார்த்து ஆத்திரம் வந்தது பிராமணனுக்கு: மன்னனைப் பலவாறாகத் தூஷித்தான். அருகில் இருந்த அமைச்சர்களும் மற்றவர்களும் யாசகனைத் தண்டிக்க விரும்பி மன்னனது ஆணையை எதிர்நோக்கினர். எதிரே குவிந்துள்ள செல்வங்

களிலிருந்து ஓரளவு கொடுக்கலாமா என்று ஒரு நிமிடம் நினைத்தான் மன்னன். நிந்தையையோ, புகழையோ கவனிக்க, தருமம் செய்ய இனி நமக்கு எது உரிமை, எல்லாம் குருவைச் சார்ந்தது என்று மனத்தைத் தேற்றிக் கொண்டு பேசாமல் இருந்தான்.

அஷ்டவக்ரர் மன்னனை நோக்கி இதோ! குவிந்துள்ள செல்வம் உன்னுடையதுதானே: வேண்டுமானல் கொடுக்கலாம் என்றார். எனது என்று இவ்வுலகில் எதுவும் இல்லை. எல்லாம் தங்களுடையது என்றான் மன்னன். இனி நீ பிரமஞானம் பெற, தகுதியுடைய சீடனாக வரலாம் என்று ஏற்றுக்கொண்டார்.

பணிவோடும் விடா முயற்சியோடும் சேவை, நிந்தையையும் புகழையும் கருதாத பரிபூரண சரணாகதி ஆகிய இரண்டும் குரு அருள் பெற அவசியம் என்பதை இவ்வரலாறுகள் உணர்த்துகின்றன.

ஓரெழுத் தொரு பொருள் சிதையச் செப்பினோர்
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கொருகம்
பாரிடைக் கருமியாய்ப் படிவர் மண்ணிலே,

— திருமந்திரம்

சற்குருவை நிந்தித்தவர்கள் ஊர் சுற்றும் நாயாகப் பிறந்து ஓர் யுகம் திரிந்து பின் பூமியில் புழுவாய்ப் பிறப்பர் என்பது கருத்து. குருவினிடம் பணிவோடும் பக்தியோடும் இருக்கவேண்டும் என்று சொல்லியுள்ளார் திருமூலர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகச் சென்று வழிபட்ட பின் அன்றே சற்குரு கிடைப்பார் என எண்ணலாம். அது தேவையில்லை.

நெஞ்சே! வருந்தாதே நீங்கும் துயரெல்லாம்
அஞ்சாதே வெற்றி அடைந்திடுவாய் — மிஞ்சுபுகழ்
ஞானனந்தர் அருள் பாலிக்க வந்து விட்டார்
இன்பமே என்றும் இனி.

தமிழகம் செய்த தவப்பயனாக தவராஜன் ஸ்ரீலஸ்ரீ சற்குரு ஞானானந்த சுவாமிகள், அதுல்ய நாதேஸ்வரர் ஆலயம், திரு விக்ரம தேவஸ்தானம், ரகோத்தமர் சமாதி (ப்ருந்தாவனம்) முதலிய தலங்களுக்கு அருகாமையில் ஞானானந்த தபோவனம் என்ற தலத்தை ஏற்படுத்தி, அத்யாத்ம வித்தியாலயம் என்ற ஆலயத்தைக்கட்டி, ஞானத்தை வாரி வழங்கும் மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து உடனிருந்து வழிபடும் முறையைக் காட்டி வருவோர் அனைவரையும் ஆட்கொண்டு, அனைவரும் நன்றாகவும் ஒன்றாகவும் வாழவும் பிறந்த தன் பயனைப் பெறவும் அருள்புரிந்து வருகிறார். சர்க்கரையின் இனிப்புப் பற்றி எழுத்துக்களால் விளக்க முடியாதது போல் குருநாதனின் சிறப்பு, தரிசன மகிமை பற்றி எழுதி விளக்க இயலாது.

எதுக்களாலும், எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்கல் உறுவீர் மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே.

—சம்பந்தர்.

நம் இறைவனைக், காரண காரிய வகைகளைக் கொண்டும், எடுத்துக்காட்டும் மொழிகளாலும் சோதிக்க வேண்டா. அவன் ஒளி வடிவினன், நீங்கள் அவனை உம் மனத்தில் தியானம் செய்து வாழுங்கள்: உங்கள் துயரம் தீரும், விரைவில் அவனைப் பற்றுங்கள்; என்பது இப்பாடலின் பொருள். வணங்க வேண்டியது தவிர மற்றைய ஆராய்ச்சிகள் நமக்குத் தேவையில்லை என்று அழகாக, ஆணித்தரமாக உணர்த்துகிறார் சம்பந்தர்.

அரிதினும் மிக அரிதான சற்குரு நமக்குக் கிடைத்துள்ளார். பக்தி, சேவை, உறுதி முதலியவைகளைக் கொண்டு அவரது திருவடியில் பணிந்து பயன் பெறுவோம்.

அண்ணல் ஞானனந்தன் அம்புயத்தாள் நம்பியவர்
எண்ண மெலாம் ஈடேறுமே.

நாடி ஞானனந்தன் அடி முடியிற்
சூடி வருந்துன்ப மெல்லாம் துடை.

ஆறு கடலை நோக்கிச் செல்வதைப் போல, காந்த ஊசி எப்பொழுதும் வட திசையையே காட்டுவதைப் போல, தாமரை சூரியனை நோக்குவதைப் போல நம் மனத்தை சற்குரு பாத கமலங்களில் நிறுத்த முயல்வோம்.

உள்ளத்தின் மாசுநீக்கி உய்விக்கும் மூர்த்தி உன்னை
உள்ளத்தில் கொள்ள வென்றால் எள்ளளவும் நில்லாது
பள்ளத்தில் வீழும் என்பால் பரிந்து நின் கருணையாய
வெள்ளத்தில் தேக்கி யென்னைக் காக்கநீ கருதுவாயோ.

தேவரும் மூவரும் மற்றேவரும் ஈயவொண்ணா
மாபெரும் முக்திப் பேற்றை ஸத்குரு ஒருவனே தான்
ஈவனென் றெடுத்துரைத்த எம் குருதேவே எந்தன்
பாவமே போக்கி என்னைப் பரத்தினில் சேர்ப்பாய் கொல்லோ

என்று மனமுருகிப் பிரார்த்தனை செய்து இயன்றளவு சேவை செய்து குருவின் சரணத்தைப் பற்ற முயல்வோம், "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்றபடி அதற்கும் குருவின் திருவடிகளில் பிரார்த்திப்போம்.

---

# தமிழ் வாழ் பழநி

திரு. புத்தனேரி ரா. நடராசன்

இருகவிச் சுவையுண இயற்றமிழ் இலக்கண முணர்ந்தவன்
தருகனி இலையெனத் தனியனாய்ப் பழநியி லுறைந்தவன்
ஒருகனி 'நீயென' உமையவள் அழைத்திட உவந்தவன்
வருகனி தமிழென வரமருள் குருபரன் முருகனே.

(வேறு)

கண்ணிருக்குந் திருமுகத்தான் கவினிருக்கும்
திருத்தோளான் களவுகற் பெனவிரு
பெண்ணிருக்கும் இருபுறத்தான் பிடித்திருக்கும்
திருவேலான் பெற்றிருக்கும் வரமளித்தே
பண்ணிருக்கும் பைந்தமிழைப் பயின்றிருக்கும்
திருவாயான் பரிசுப்பழம் கிடைத்திலதால்
விண்ணிருக்கும் பெற்றோரை வெறுத்துவந்து
திருப்பழநி மலையமர்ந்தான் வெற்றிவேலன்.

பொன்னங் கொடிபோல் நுடங்குமிடைப்
பொன்னா டரசி விளையாடும்
பொதினி மலைவாழ் புரவலனே!
தென்னம் பழம்வீழ் திருத்தணிகை
செல்வ நம்பித் திருமகளாள்
தினைமா மலர்த்தேன் தினமுவந்து
தின்னு மெனமா தின்றவனே
தீதில் களவும் கனிகற்பும்
திகழ்முத் தமிழால் தெரிந்தவனே
தன்னந் தனியே தண்டூன்றித்
தண்ணந் தமிழைச் சுவைத்தின்னும்
தமிழ்வாழ் பழநி வளர்பவனே!

# "குஹ தத்துவம்"

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

சிவன் கோயிலில் சிவனார் சந்நிதியைப் பக்தர்கள் அணுகும் பொழுது சிவனுக்கு வலப்பக்கத்தில் கணபதியும், இடப்பக்கத்தில் முருகனும் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருப்பதைக் காண்பார்கள். இதே அமைப்பு அம்பிகையினுடைய சந்நிதியிலும் இருக்கிறது. இதில் பெரிய கோட்பாடு ஒன்று அமைந்திருக்கிறது. சிவகுமாரன் என்னும் சொல் கணபதிக்கும் பொருந்தும், சுப்பிரமணியத்துக்கும் பொருந்தும். அதே பாங்கில் உமையாள் மைந்தன் என்கிற சொல்லும் இரு சகோதரர்களுக்கும் பொதுவானது. இருவரும் அம்மைக்கும், அப்பனுக்கும் புதல்வர்கள்.

இனி, அகிலாண்டங்களிலுள்ள ஜீவகோடிகள் அனைத்தும் அம்மைக்கும் அப்பனுக்கும் செல்வர்கள், செல்விகள் ஆகிறார்கள். உண்மை அங்ஙனம் இருக்க, இவர்கள் இருவர் மட்டும் ஏன் அம்மை அப்பனுக்குரிய செல்வர்கள் என்று பிரித்தெடுத்துப் பகரப்பெறுகிறார்கள்? அதில் கருத்து ஒன்று உண்டு. மற்ற செல்வர்களுக்கும், செல்விகளுக்கும் இவர்கள் இருவரும் முன்மாதிரி ஆகிறார்கள். அம்மை அப்பனைச் சென்றடைய விரும்புகிற ஜீவர்கள் அனைவரும் கணபதியைப் போன்றும் கார்த்திகேயனைப் போன்றும் பரிபாகம் அடைய வேண்டும். பரிணாமத்தில் இன்னும் கீழ் நிலையில் இருக்கிற ஜீவர்கள் தங்களுக்கு ஆதி மூலமாகிய சிவசக்திக்கு மிகத்தொலைவில் இருக்கிறார்கள். மேல் நிலைக்குப் பரிணமித்துப் பக்குவம் அடைதற்கு ஏற்ப அவர்கள் அம்மை அப்பனுக்குப் பக்கத்தில் வருகிறார்கள். மானுட நிலைக்குப் பக்குவமாய் இருக்கிற ஜீவர்கள் தெய்வத்துக்கு மிக அண்மையில் வந்திருக்கிறார்கள். அவர்கள் சிவசக்தியை நோக்கிப் போகிற பயணத்தில் பெரும் பகுதி பூர்த்தியாய் இருக்கிறது. கடைசிப் பகுதியை அவர்கள் மங்களகரமாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கேற்றபடித் தங்களைப் பக்குவப்படுத்துவதும் அவர்களுடைய கடமையாகிறது. கணபதியைப் போன்றும் குமரனைப் போன்றும் தங்களை அமைத்துக் கொண்டாலொழிய அவர்கள் சிவசக்தியை அடையமாட்டார்கள்.

கணேசன் அறிவு சொரூபம். கார்த்திகேயன் ஆற்றல் சொரூபம். கடவுளை அடைய விரும்புகிறவர்கள் அறிவில் மேலோங்கி வர வேண்டும். ஆற்றல் மிகப் படைத்தவர்களாக வேண்டும். பெற்றுள்ள அறிவைச் செயலுக்குக் கொண்டுவராவிட்டால் அவ் அறிவினால் அடையும் பயன் ஒன்றுமில்லை. பூமியைச் சாகுபடி பண்ணினால் உணவுப் பொருள் வகைகளை உற்பத்தி பண்ணலாம் என்னும் அறிவு மனிதனுக்கு வந்திருக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். வெறும் இவ்வறிவினால் மனிதன் அடையும் நலன் ஒன்றுமில்லை. இந்த நல்லறிவு செயலாக வடிவெடுக்க வேண்டும். அப்பொழுது தான் அறிவு பூர்த்தியாகிறது. சாகுபடியைச் செம்மையாகச் செய்வதே அதைப் பற்றிய ஞானத்தைப் பெற்றதின் அறிகுறியாம். சாகுபடியைச் செம்மையாகச் செய்து தானியங்களை விளைவிக்க வேண்டும். அவைகளை முறையாக அறுவடை செய்ய வேண்டும், உணவு சமைத்தல் வேண்டும். அதை மக்களுக்கிடையில் வழங்குதல் வேண்டும். மக்கள் அதை உண்டு பசியைத் துடைத்தல் வேண்டும். உடலை உறுதிப்படுத்தல் வேண்டும். இத்தனை செயல்களும் நடைபெறுகிற பொழுதே சாகுபடியைப் பற்றிய நல்லறிவு பலன் கொடுத்ததாகும்.

அறிவுக்கும் ஆற்றலுக்கும் உள்ள தாரதம்மியத்தைப் பற்றிய புராண வரலாறு ஒன்றுள்ளது. அதாவது, கைலையங்கிரியிலே அம்மையும் அப்பனும் இனிது வீற்றிருக்கின்றனர். கணேசன், கார்த்திகேயன் ஆகியமைந்தர் இருவரும் இனிது விளையாடிக் கொண்டிருக்கின்றனர். நாரத மகரிஷி கனி ஒன்றைக் கொண்டு வந்து பார்வதி பரமேஸ்வரன் முன்னிலையில் படைத்து வீழ்ந்து வணங்குகிறார். சிறுவர் இருவரும் அக்கனியைப் பெறுதற்கு ஓடிவருகின்றனர். இருவருள் இக்கனியை யாருக்குக் கொடுக்கலாம்? என்னும் கேள்வியை நாரதர் கிளப்புகிறார். இருவருக்கும் இடையில் பந்தயம் விடலாம் என்று அவர் பகர்கிறார் அகிலாண்டங்களையும் அளந்து பார்த்துவிட்டு முதலில் வருகிறவனுக்கு இக்கனியைக் கொடுக்கலாமென்று மகரிஷி முடிவு கட்டுகிறார். பந்தயமும் விடுகிறார். முருகன் ஏறுமயில் ஏறி அண்டங்களை அளக்க அதிவேகமாகப் போய் மறைகிறான். மூத்தவனுக்கோ அத்தகைய ஆற்றல் இல்லை. வெறும் அறிவு சொரூபம். எண்ணிப் பார்க்கிறான். எலி வாகனனாக அம்மை அப்பனை வலம் வருகிறான். கை நீட்டிக் கனியைக் கேட்கிறான். அகிலாண்டங்களையும் அளந்தாய் விட்டதா? என்னும் கேள்வி பிறக்கிறது. சிவசக்திக்குப் புறம்பாக அண்டங்கள் எங்கே இருக்கின்றன? என்னும் ஆக்ஷேபம் ஆனைமுகத்தவனிடமிருந்து வருகிறது. அறிவுத் தெய்வமாகிய அவன் கூற்றில் அர்த்தம் உளது. கனியை அவனுக்குக் கொடுக்க அம்மையப்பர் முன் வருகின்றனர். அதற்குள்ளாக இளையவன் அண்டங்கள் அனைத்தையும் அளந்தெடுத்து அவைகளின் உட்பொருளை அறிந்து கொண்டவனாக விரைந்து வருகிறான். மூத்தவனுடைய அறிவு பெரியதென்றால் இளையவனுடைய ஆற்றல் சாமான்யமானதன்று. அறிவுக்கு நிகராகவே அது இருக்கிறது. கனியை யாருக்கு வழங்குவது என்னும் வினாவுக்கு விடை கண்டு பிடிப்பது மிகவும் கஷ்டம். அறிவுக்கு நிகரானது

ஆற்றல். அறிவையும் ஆற்றலையும் நன்கு பயன்படுத்துகிறவர்களே அம்மை அப்பனை அடைய வல்லவர்களாகின்றனர். இக்கோட்பாட்டை மக்களுக்குப் புகட்டுவதற்காகவே கணபதியும் கார்த்திகேயனும் அம்மை அப்பனுக்கு இருமருங்கிலும் எழுந்தருளியிருக்கின்றனர்.

இளையவன் ஆற்றல் தெய்வம் மட்டும் அல்லன். அவன் ஞான பண்டிதன். ஆதலால் அவன் தூக்கி வினை செய்கிறான். பரத்தை அடைய விரும்புகிற ஞான சாதகர்கள் எல்லார்க்கும் அவன் முன்மாதிரி. ஆதலால் கலியுகவரதன் என்னும் பெயர் பெற்றவனாக அவன் இலங்குகிறான். ஜீவாத்மாக்களிடம் இருக்கும் கூறுகளெல்லாம் அவனுடைய சொரூபமாக வடிவெடுக்கின்றன. அது எப்படி என்று பார்ப்போம். அறுமுகக் கடவுளாக அவன் இலங்குகிறான். உடல் எடுத்துள்ள உயிர் ஒன்றுக்கு ஆறுமுகம் தேவையில்லை. அப்படியிருக்க அவனுக்கு மட்டும் ஆறுமுகம் இருப்பானேன்? பண்பட்டுள்ள ஜீவன் ஒருவன் தன்னுடைய ஐந்து இந்திரியங்களையும், ஆறுவது இந்திரியமாகிய அகக்கண்ணையும் உச்சநிலைக்குக் கொண்டு வந்திருக்கிறான். ஒவ்வொரு இந்திரியமும் தன்னளவில் பரிபூரண நிலையை எட்டியதாகும். ஓர் இந்திரியமே எல்லா இந்திரியங்களின் செயல்களைப் புரிய வல்லதாகிறது. அந்த அளவில் ஒவ்வொரு இந்திரியமும் ஒரு தலைக்கு நிகராகிறது. அப்படி ஆறு தலை படைத்திருக்கிற பொழுது அறிவுத்திறன் அகண்டாகாரமாக விரிவடைகிறது. அவனால் அறியப்பட்டது எது? அறியப்படாதது எது? என்னும் கேள்வி எழ இடமில்லை. முற்றும் உணர்ந்த முழுமுதற் பொருளாக அவன் இருக்கிறான். அதைச் சொல்லால் விளக்க முடியாது. ஆறுமுகம் என்னும் வடிவமே அதை நன்கு விளக்குகிறது. இனி, மானுட சரீரத்தில் ஷட்சக்கரம் என்று சொல்லப்படும் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகள் முறையே மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரம், அனாகதம், விசுத்தம், ஆக்ஞை எனப் பெயர் பெறுகின்றன. இந்த ஆறு ஆதாரங்களுக்கும் அதிஷ்டான தெய்வமாக இருப்பவன் கந்தன். அந்த யோக தத்துவத்தை விளக்குதற்கு அவன் ஆறுமுகக் கடவுளாகிறான். புறவுலகில் அவனுடைய இருப்பிடம் ஆறு படை வீடுகளாக வடிவெடுக்கிறது. ஆக ஒவ்வொரு முகமும் ஒரு ஞான பூமிக்கு எடுத்துக்காட்டாக அமைந்து இருக்கிறது. இறைவன் ஷட்குண சம்பன்னன் எனப்போற்றப்படுகிறான். ஆறுவித தெய்வீக சம்பத்து என அவைகள் பொருள்படுகின்றன. ஞானம், வைராக்கியம், வீரியம், ஐஸ்வர்யம், ஸ்ரீ, கீர்த்தி ஆகிய இவை ஆறும் பரமனிடத்தே பரிபூரண நிலையை எட்டியிருக்கின்றன முருகனிடம் இவை ஆறும் நிறைந்திருப்பதால் அவன் சண்முகக் கடவுளாகிறான்.

அன்னை பராசக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி, ஸ்வரூபிணி என்று போற்றப் பெறுகிறாள். அத்தகைய பார்வதி தேவியின் புதல்வனாகிய முருகக் கடவுள் இச்சா சக்தியை வள்ளியின் வடிவத்தில் தம்பால் வைத்திருக்கிறான். ஞான சக்தியை கதிர்வேல் வடிவத்தில் கையில் ஏந்தியிருக்கிறான். கிரியா சக்தியை, தேவ குஞ்சரியாகத் தம்பால் வைத்திருக்கிறான். ஆக, அன்னையிடம் உள்ள மூவிதச் சக்திகளும் மைந்தனிடத்திலும் நிறை நிலையில் அமைந்து இருக்கின்றன.

இரண்டு கரங்களைக் கொண்டு சாதாரண மனிதன் செயற்கரிய காரியங்களைச் செய்கிறான். ஆறுமுகக் கடவுளோ தன்னுடைய முகங்களுக்கொப்பப் பன்னிரு கரங்களை உடையவனாக இருக்கிறான். ஒவ்வொரு கரத்திலும் ஒவ்வொரு தெய்வீக ஆயுதம் அமைந்திருக்கிறது. ஆதலால் அவனால் ஆற்ற முடியாத செயல் ஏதுமில்லை. பிரபஞ்சமெங்கும் நிகழ்ந்து வருகிற தெய்வீகச் செயல்கள் அனைத்தும் அவனுடைய செயல்களாம். ஒவ்வொரு ஜீவனும் படைத்துள்ள ஆற்றலைப் பரமனுடைய வழிபாட்டுக்கென்றே பயன்படுத்தும் பொழுது அது கந்த வேளுக்குரிய சிறந்த வழிபாடாகிறது.

சேனாதிபதி என்னும் பெயர் படைத்தவனாகச் சக்தியின் செல்வன் இருக்கிறான். சேனாதிபதியின் திறமைக்கேற்பச் சேனை போரில் வெற்றி பெறுகிறது. பக்தர்கள் எல்லோரும் அஞ்ஞானத்தோடு போராடி அதைத் தகர்த்துவிட்டு, ஆண்டவனை அடைய முயலுகிறார்கள். அந்த அஞ்ஞான சொரூபமாக இருப்பவன் சூரபத்மன். ஆற்றல் மிகப் படைத்துள்ள அந்த அரக்கனைத் தகர்த்துத் தள்ளக் கந்தனுக்கே சாத்தியமாகிறது. ஆதலால் அவன் யாண்டும் தலைசிறந்த சேனாபதியாகத் திகழ்கிறான்.

இவை யாவுக்கும் மேலாகக் குமரக் கடவுள் குகன் என்று போற்றப்பெறுகிறான். குகையில் வசிப்பவன் குகன். குகைகள் அனைத்திலும் தலைசிறந்ததாய் இருப்பது ஜீவாத்மாவின் உள்ளம் என்னும் குகை. அனந்தகோடி ஜீவாத்மாக்களின் உள்ளங்களிலே இலங்குவதால் அவன் குகன் என்னும் நாமம் படைத்துள்ளான். அந்தந்த ஜீவன் உள்ளத்தில் வீற்றிருந்து கொண்டு அவர்கள் எல்லோரையும் அவன் பண்படுத்தி வருகிறான். அவனுடைய மகிமையை அறிந்து கொள்ளுதற்கு ஏற்ப அவன் பால் பக்தி பெருகிறது. பக்தி ஓங்குதற்கேற்பப் பக்தன் பரமனுக்கே உரியவனாகிறான்; இத்தகைய அரிய பெரிய செயலை ஆறுமுகக் கடவுள் யாண்டும் இயற்றி வருவதால் மக்கள் அவன் பால் கவர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஊசி காந்தத்தின்பால் கவர்ந்திழுக்கப்படுவது போன்று ஜீவாத்மாக்கள் கதிர்வேலவன் பால் கவர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

வாழ்க கதிர்வேலன்! வாழ்க குகன்!!
வாழ்க குகன் அடியார்கள்!

# ஞானானந்தகிரி சுவாமிகள்

இக்கட்டுரையில் சுவாமிகளை நேரில் கண்டு தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்ற கி. வா. ஜ. தமது அனுபவத்தைக் கூறுகிறார்.

**நெ**ய்யும் பாலும் ஔவையார் பாடிய தற்காகப் பாரி மகளிர் திருமணத்தில் ஓடிய ஆறு ஒன்று தமிழ்நாட்டில் இருக்கிறது. அது தான் தென்பெண்ணையாறு. அதன் கரையில் ஒரு சாலையும் ஓடுகிறது. திருக்கோவலூர் அந்தச் சாலையின் இடையில் இருக்கிறது, அதில் கார்களும் மற்ற வாகனங்களும் ஓடு கின்றன. மனிதர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார் கள், அவர்கள் மனமும் ஓடிக்கொண்டிக் கின்றன.

ஆனால் இந்தச் சாலையில் ஒரு பக்கம் பெண்ணையாறு, மற்றொரு பக்கம் ஞானானந் தத் தபோவனம் என்ற புண்ணியத்தலம் அமைந்த ஓர் இடம் இருக்கிறது. அங்கே போனால் ஓட்டத்தினிடையே எல்லாம் நிற் கின்றன. அந்தத் தபோவனத்துக்குள்ளே போய்விட்டால் நம்முடைய மனமே நின்று போகிறது.

தவத்தினர் நிறைந்த வனம் அது. வனம் என்பதற்கேற்ற பசுமையான சூழ்நிலை. தழைத்து அடர்ந்த மாமரங்கள். இவற்றினி டையே நடைபோட்டு உலவும் கற்பக விருட் சம் ஒன்று இருக்கிறது. இந்தத் தவ வனத் துக்குச் சென்றவர்கள் இந்தக் கற்பகத்தைக் கண்ணாரக் காணலாம். கண்டவர்கள் இதன் நிழலில் இருக்கலாம். இலை பெறலாம்; மலர் பெறலாம், கனியும் பெறலாம். அது அவரவர்கள் நல்வினைப் பயனைப் பொறுத்தது.

ஆம்! ஸ்ரீமத் ஞானானந்தகிரி சுவாமிகள் என்ற அமுத சாகரத்தை, கற்பகத்தை, காமதேனுவை, ஞானமலையை, சாந்தப் பூம்பொழிலை இங்கே தரிசித்தவர்கள், வெறு மையாக வந்தபடியே போகமாட்டார்கள்; போகவும் முடியாது. அவர்களுடைய மனத் திலே ஏதேனும் ஒரு சிறிய அமைதி அலையை யேனும் சுமந்துகொண்டு செல்வார்கள். ஏதோ ஒரு லாபத்தைப் பெற்றதுபோன்ற மனத்திருப்தி ஏற்பட்டிருக்கும்.

காரணம் என்ன? சுவாமிகள் ஒரு காந் தம். இரும்பானாலும் காந்தத்தோடு உரசு வதனால் காந்த சக்தியைப் பெறும். இங்கே உள்ள காந்தமாமணியைக் கண்டாலே போதும்; மனம் என்ற வல்லிரும்பு நெகிழ் வதை அநுபவிக்கலாம்.

புன்முறுவல் பூத்த முகம், எங்கோ உள்ளே எதையோ பார்த்துக்கொண்டயிருக் கும் திருவிழிகள், இன்ன பிராயம் என்று அளவிட வொண்ணாத் திருமேனி, கொச்சை மொழியில்லாத பேச்சு, இடையே தேவா என்று வரும் இன்ப ஒலி, வரம் வேண்டுவோர் தம் குறையைச் சொல்லச் சொல்லக் கேட்டு வேண்டுவோம்' என்று அஞ்சல் காட்டும், திருவாக்கு, சில சமயங்களில் குலுங்கக் குலுங் கச் சிரிக்கும் குழந்தைத் தன்மை—இத்தனை யும் சேர்ந்த மூர்த்தி இந்த ஞானகுரு.

வருவாரிடம், "நெடுந்தூரத்திலிருந்து வந்த இளைப்பு மிகுதியாக இருக்குமே! பசிக் குமே! போய் ஆகாரம் பண்ணி வரலாமே!" என்றும், "சிறிது ஏதாவது தாகத்துக்கு அருந்தி வரலாமே"என்றும் கூறும் தாயன்பை இந்த மூர்த்தியிடம் பார்க்கலாம்.

தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல், அநுபூதி, அலங்காரம், சித்தர் பாடல் எல்லாம் இந்த முனி புங்கவர் பேச் சில் இழையோடும். வடமொழிச் சுலோகங் கள், உபநிடத வாக்கியங்கள் துள்ளி வரும். ஹிந்தியும் மணக்கும்.

இன்னும் இந்தப் பெருமானுடைய ஆயுளைக் கணித்தவர் இல்லை. இன்னும் இவர் களுடைய வரலாற்றை முழுமையாகத் தெரிந் தவர் இல்லை. கன்னடம் பேசும் நாட்டிலே மங்களபுரியிலே அவதாரம் செய்து, கங்கைக் கரை சென்று ஜோதிர் மடத்துச் சங்கரா சாரிய சுவாமிகளிடம் உபதேசம் பெற்ற ஜோதிமாமுனிவர் இவர். இமயத்தில் தவம் புரிந்து மலாயா, பர்மா, இலங்கை, இந்தியா முழுவதும் திருவடி படர நடந்து உலவின தவச் சிங்கம் இவர். தம்மை மறந்த உணர் வில் எத்தனையோ காலம் லயித்திருந்தமை யால், தூக்கத்திற் கண்ட கனவு நாளடை விலே மறந்துபோனதுபோலத் தம்முடைய வாழ்க்கையையே கோவையாக மனத்தில் நிறுத்திக்கொள்ளாத மாண்பினர் இந்த ஞானமுத வாரிதி.

ஒவ்வொரு விதமாக இப் பெருமானைக் கண்டு போற்றுகின்றனர். சித்தியில் வல்லவர் என்று செப்புவார் ஒரு சாரார்; சித்த மருத்துவத்தில் கை வந்தவர் என்று கூறுவர் ஒரு சாரார். சடைக்காடு வளர்ந்து அதன் கீழ்த்தவஞ்செய்த திருக்கோலத்தில் இந்த ஆனந்த அநுபூதி வள்ளலைக் கண்டவர்கள் இருக்கிறார்கள்.

அமைதியே வடிவாய், சாந்தமே உரை யாய், கிழமன்று பழம் என்று சொல்லும் கனிவாய், இளநடை போடும் குழந்தையாய், வேலை வாங்கும் மேஸ்திரியாய், சோறு போடும் தாயாய், கவலை தீர்க்கும் தந்தை யாய், நெருங்கினவர்க்கு ஞானம் வழங்கும் தவநிதியாய், தம்முடைய சந்நிதியில் வந் தாலே ஐயம் போக்கும் மவுன உபதேச மாகுருவாய் விளங்கும் இவர்களைத் தரிசிப் பது புண்ணியம்; இவர்கள் பேசக் கேட்பது தவம்; இவர்கள் அருளுக்கு ஆளாவது அநுபூதி.

# சுயநலம் வாழ்க

பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை

கொழும்புத் ...
வரை ...
பதிவு இல: 1...
அறக்கட்டளை ...
...
தொடர் இல: 7

திருவள்ளுவ தேவரிடம் மிக்க மதிப்புள்ள ஒருவன் 'தேவரிடம் ஒரு நல்ல வாக்குப் பெற்றுலோ' என்று ஆசைப்பட்டான். இதனைக் குறிப்பாலுணர்ந்த வள்ளுவ தேவர், 'நீ சுயநலத்தில் கண்ணுங் கருத்துமாயிரு' என்று உபதேசித்தருளினுர். அவன் திகைத்தான். 'சமூக நலம் முக்கியம் என்கின்றுர்களே' என்று மனத்துக்குள் முணு முணுத்தான். அவன் நிலையை உணர்ந்த வள்ளுவர்பெருமான்.

'அப்பனே,

நீ உன் மேல் அன்பாயிரு' என்று கூறியருளினுர். இது இரண்டாவது உபதேசம். அவனுக்குப் பித்தங் கொதித்தது. 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்று எங்கோ படித்ததை எண்ணி ஏங்கிஞன்.

வள்ளுவ தேவர் சிரித்துக்கொண்டே

''தன்னைத்தான் காதலனுயின் எனைத்
தொன்றும் துன்னற்க தீவினைப்பால்''

என்ற குறட் பாடலைக் கொடுத்து, அதைப் படித்துச் சிந்திக்கும்படி கட்டளையிட்டருளினுர்.

* * *

அவன், திருக்குறள் வல்ல வித்துவானொருவரிடம் போய் வள்ளுவர் கொடுத்த பாடலை விசாரஞ் செய்வானுயினுன்.

வித்துவானின் விளக்கம்.

''தன்னைத்தான் காதலன்'' என்ற தொடரை எடுத்துக் கொள்ளுவோம். காதல் என்பதன் பொருள் அன்பு. ஒருவன் தன்பால் அன்புடையனுதல் வேண்டும். அப்படிப்பட்டவன், தன் நன்மையிற் கண்ணுங் கருத்துமாயிருப்பான். தன் நன்மை தான் தலையங்கத்திற் 'சுய நலம்' என்று குறிப்பிடப்பட்டது. அது தான் மூல வேரான அடிப்படைத் தர்மம். அதன் மகிமை, 'எனைத்தொன்றும் துன்னற்க தீவினைப் பால்' என்ற தொடரால் விளக்கமாம்.

சுயநலமி மற்றெரு உயிருக்கு எத்துணைச் சிறியதொரு துன்பமும் உண்டாக நடவான் என்ற வாறு. நடப்பானுயின் நடந்த அவனுக்குத்தான் மகா நட்டம்.

கந்தனுக்குப் பூதன் கொடூர துன்பங்கள் செய்கிறுன் என்று வைத்துக் கொள்ளுவோம். சாதாரண சனங்கள் கந்தனுக்கு இரங்குவார்கள். அறிவாளி பூதன்போக்குக்குத்தான் பெரிதும் இரங்குவான்.

இன்ப துன்பங்களை ஊட்டுவோன் இறைவன். கந்தன் அநுபவித்த துன்பம், பூதன் வாயிலாக ஊட்டப்பட்டது. பூதன் வெறுங் கருவி. இதனைக் கந்தன் உணர்ந்து உய்தி பெற முடியும். பூதன் பால் உண்டான ஆத்திரக் கனலும் அவிந்து விடும்.

* * *

பூதன், ''நான் வெறுங் கருவிதானே, என் மூலம் கடவுள் கந்தனுக்கு நல்ல பாடம் நடத்தியிருக்கிறுர்'' என்று சொல்லித் தப்ப முடியாது.

ஊட்டுவோன், 'இவ்வாறு செய்' என்று பூதனுக்கு உத்தரவிட்டானு? என்பது பெரிய கேள்வி. உத்தரவின்றிச் செய்வது உய்தியில் குற்றம்.

ஒரு சம்பந்தர் 'சமண் சித்தரை அழிக்கத் திருவுள்ளமே' என்று உத்தரவு கேட்டார்.

ஸ்ரீ ராமன் மறைவிலிருந்து பாணந் தொடுத்தான். அது வாலியின் மார்பை ஊடுருவியது. மகா பெலசாலியான வாலி, பாணத்தைக் கைகளாற்பற்றி இழுத்துக் கொண்டே, 'இராமனுமா இது செய்தான்' என்று கனன்று, பாணம் வந்த திக்கை நோக்கினுன்.

''கண்ணுற்றுன் வாலி நீலக் கருமுகில்
கமலம் பூத்து மண்ணுற்று வரிவில் லேந்தி
வருவதே போலும் மாலை''

இராமன், ஸ்ரீமந் நாராயணனுய்க் காட்சியளித்தான். மௌனியாய் சரணடைந்தான் வாலி. உத்தரவுஇராமன் மூலம் நடந்தது.

கந்தனை வருத்தி வாழ எண்ணும் பூதன் இராமனுமல்லன்; சம்பந்தருமல்லன். பூதன், இறைவன் உத்தரவு என்று ஒன்று உண்டு என்றறிவதற்கே எத்தனை கோடி சன்மம் எடுக்க வேண்டும்! ஐயோ, அவனை விழுங்கும் எரிவாய் நரகு கோட்டாவி ஒரு போதும் விடாதே.

துன்புற்றோர் நிலையினும் துன்புறுத்துவோரின் நிலையே பரிதாபத்துக்குரியது.

மேற்காட்டியவாறு விளக்கம் செய்த வித்துவான், மூல தர்மமான சுயநலத்தின் இன்றியமையாமையை மேலும் வலியுறுத்தும் முகமாக, 'பரநலம்' 'அன்பு' என்பன பற்றியும் சிறிதே விளக்கம் செய்வாராயினர்.

பரநலம் மேலே சமூக நலம் எனப்பட்டது. இதனைச் சுயநலம கைவந்தவர்களே மேற்கொள்ள முடியும். 'உனக்கு நன்மை செய்யத் தெரியுமா? என்பது அறிவாளிகளின் கேள்வி.

ஒரு சமயம் பால ராமனுக்கு எது நன்மை என்று அறியாது, தசரதச் சக்கரவர்த்தி தடுமாற்றம் உற்று, விசுவாமித்திரரின் கோபாக்கினிக்கு ஆளாகும் நிலை நேர்ந்ததை இராமாயணத்திற் படிக்கிறோம்:

பெரும் பாலும் பரநலம் பேசுவோன் குளிக்கப் போய்ச் சேறு பூசுவதையும், குருடு குருட்டுக்கு வழிகாட்டிக் குழியில் மாள்வதையுமே கண்டு கொண்டிருக்கிறோம்.

சுயநலம் கைவந்தோரே மேற்கொள்ளத் தக்கது பரநலம் என்பது மேலே சொல்லப்பட்டது.

சில சந்தர்ப்பத்தில் சுயநலம் கைவந்தோன் தன்னையிழந்தும் பரநலம் பேணுவதுண்டு அவனைத் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்று பாராட்டுவார்கள் புலவர்கள். ஆனால், அவனே உண்மையில் 'தனக்குரியாளன்' என்பதையும் அப்புலவர்கள் நன்கு அறிவார்கள்.

* * *

பிறர்க்குரியாளன், பிறர் தன்னுலடையும் நலத்திலும் பார்க்க, எத்துணையோ மடங்கு நலத்தை அப்புண்ணிய விசேடத்தால் தான் அடைந்து, தன் நன்மையை மேன்மேல் வளர்த்துக் கொள்ளுகின்றான்.

ஆகவே பர நலம் பேணல் தன் நலம் பேணி அதனை அதிகரித்தலேயாம். இது நிற்க.

இனி 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்பதற்கு வருவோம். இது எட்டாத கொம்பில் தேன்.

நமக்குத் தொடர்புடையாரிடத்தன்றி ஏனைய இடத்தில் அது துளிப்பதில்லை.

தந்தை தாய் தமர் தாரம் என்ற இவர்கள் தொடர்பு நிலையற்றது. இறைவன் தொடர்பே நிலையாய தொடர்பு. அவன் பரம பிதா. எல்லா உயிர்க்கும் ஏக பிதா. அவன் தொடர்பு சிந்திக்குமாயின் எவ்வுயிர்க்கும் அன்பாதல் தானே சித்திக்கும். அந்நிலையில் அவன் சிவன் முத்தனும்.

சிவன் முத்தன் 'எல்லா உயிர்களையும் தன்னிடத்தும், தன்னை எல்லா உயிர்களிலும் காண்பன்' என்கின்றது உபநிடதம். இந்நிலை முடிந்த நிலை; முத்தி நிலை.

அன்பே சிவம்

* * *

ஒரு தருவை எடுத்துக் கொள்வோம். அதன் உச்சம் முத்தி நிலை, மூல வேர் சுயநலம் மத்திய பகுதி பரநலம், மூல வேரே முழுமையான மரத்தின் ஆதாரம், அத்திபாரம்.

* * *

என்றிங்ஙனம் பிரசங்க மாரி மொழிந்தார், திருக்குறள் வல்ல வித்துவான்.

கேட்டோன் கண்ணீர்மாரி பெருகப் பெருக, 'தன்னைத்தான் காதலன்.........என்ற பாடலைச் செபித்தவாறு, வள்ளுவர் பெருமானின் தெய்வத் திருவடிகளைத் தியானிப்பானாயினன்.

சுய நலம் வாழ்க.

## வரவேணும் மயில் மீதிலே

பல்லவி

வரவேணும் மயில் மீதிலே
வந்தருள் புரிய வேணுமே முருகா (வர)

அநுபல்லவி

தரவேணும் நின் சேவையே
தமியேனுக்காக மனம் இரங்கி அருள்புரிய (வர)

சரணம்

புரம் எரித்தவன் அன்று புன்னகை செய்ததினால்
கரம் பன்னிரண்டு கொண்டு சரவணத்தில் உதித்தாய்
நெறி தவறிய சூரன் சிரம் அறுத்தெறிந்தோனே
ஹரி மருகா திரு கரிமுகன் சோதரனே (வர)

# எம் குருதேவர்

ஸ்வாமி ஹரிதாஸ்

ஆன்மிகத் துறையில் பற்று உள்ளவர்களுக்கு ஆண்டவனைக் காணவேண்டும் என்ற அவா இருப்பது ஸகஜம். ஆய கலைகள் அறுபத்து நான்கிலும் கற்று உணர்ந்த வல்லவர்கள் ஆயினும் ஸ்ரீ ஸத்குரு நாதனின் அருள் இல்லையேல் இறைவனை நேராகக் கண்டாலும் அறிந்து கொள்ள முடியாது. இதையே, "பன்னரும் வேதங்கள் படித்து உணர்ந்தாலும் குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை" என்று ஒரு மகாகவி பாடி உள்ளார். ஆகையால் திருவருளை வேண்டுபவன் குருவருளையே நாடவேண்டும். பிறந்த குழந்தைக்குத் தன் தகப்பனார் இன்னார் என்று தெரியாது. பெற்ற தாய் தான், "இவர் தாம் உன் அப்பா." என்று காட்டிக் கொடுக்கிறாள். அது போல் அனைவருக்கும் தந்தையான ஆதி பகவனை அன்னையாம் குருநாதனே உணர்த்துகிறான்.

நாம் ஏதோ ஒரு குறிப்பிட்ட ஊருக்குச் செல்ல வேண்டும் என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த ஊருக்குப போக நமக்கோ வழி தெரியாது என்றும் வைத்துக் கொள்வோம். ஏற்கனவே அந்த ஊருக்குச் சென்று பார்த்தவனைப் போய்க் கண்டு விசாரித்தால் வழி தெரியாத நமக்கு அவன் சரியான வழியைக் காட்டுவான். முன்பின் தெரியாதவர்களைப் போய்க் கேட்டால் என்ன பிரயோஜனம்? அது போல் இறைவனைக் காண வேண்டும் என்று அவாக் கொண்டவர்கள் வழி தெரியாமல் இருக்கும் போது ஏற்கனவே இறைவனைக் கண்டு இன்புற்று இருக்கும் மகான்களை அண்டி அவர்களையே குருநாதர்களாகக் கொண்டு சுலபமாகக் கரை ஏறலாம். இதை ஆலோசித்தே, "குருபிரம்மா, குரு விஷ்ணு, குருவே சிவன், அவனே பிரம்மம்" என்று போற்றுகிறார்கள்.

அத்வைதத்தை நிலைநாட்ட வந்த ஆதி சங்கராசாரியர் பகவத் பாதர் என்று அழைக்கப்படுகிறார். அதற்குச் சர்வேசுவரனுடைய பாதமானவர் என்று பொருள் கொள்ளுவோமானால், ஆதியாம் குரு சங்கராசாரியரைத் தொழுதால் அது ஆண்டவனின் பாதங்களில் செய்த வணக்கமாகும். குருவைப் பிடித்தால் திருவைப் பிடித்ததற்கு ஒப்பாகும். ஆகையால் நாளடைவில் குருநாதன் தான் பிரம்மம் என்ற உண்மை புலப்படும்.

உருவாகி, உளதாகி, அருவாகி, இலதாகி என்றெல்லாம் வர்ணிக்கப்படும் அந்தச் சர்வேசுவரன் ஸ்ரீ தட்சிணா மூர்த்தியாகவும், ஆதி சங்கரராகவும் இந்த அவனியிலே அவதரித்துப் பாமரர்களாகிய நம்மை உய்விக்கக் குருவாக வந்தனன்; தட்சிணா மூர்த்தியாக அவன் பேசாமலும் ஆதி சங்கரராகப் பேசியும் ஞானத்தைப் போதித்தான். இவ்விரு செய்கைகளையும் ஒருங்கே கொண்டு ஓர் ஒருவம் மீண்டும் எடுக்க எண்ணி, மாயையாம் உலகில் பிறந்து மன்றாடும் நம்மை உய்விக்க, ஞானத்தைப் போதித்த தட்சிணா மூர்த்தியும் ஆனந்தத்திற்கு வழிகாட்டிய ஆதிசங்கரரும் இன்று நம்மிடையே ஓர் உருவில் பேசியும், பேசாதும் ஞான ஆனந்தத்தை அளிக்க ஸ்ரீ ஞானானந்த ஸத்குரு மூர்த்தியாக அவதரித்து நம்மை எல்லாம் ஆட்கொண்டருளினர். அவரருள் பெற அவரையே நாடுவோம். அவர் தாள் பணிந்து அவரையே சேருவோம்.

---

# கண்ணன் சொன்னதென்ன கீதையிலே

**கண்மணிகள்**

கண்ணன் சொன்னதென்ன கீதையிலே
அதைக் கருத்திற் கொள்வாய் உந்தன் வாழ்க்கையிலே!!

அண்ணன் தம்பி சுற்றம் என்பதெல்லாம்
உந்தன் அறிவிற் குழப்பம் தரும் பாசம் என்பான்!!

அவன் பெயரைச் சொல்லி கடமையைச் செய்
அதன் விளைவுகள் அவனுக்கே அர்ப்பணம் செய்!!

எவன் எதைச் செய்தாலும் அவன் அறிவான்
அந்த எண்ணத்தின் தரம் கண்டு பலன் தருவான்!!

கோவிந்த ராதே கோவிந்த ராதே கோவிந்த ராதே கோவிந்த ராதே!!

# அருட் சுவை

(கி. ஆ. பெ. விசுவநாதம்)

1

சுவை பலவகை. அதில் அருட் சுவை ஒரு தனி வகை. அது இறைவனையும் இறைவனது அருளையும் சுவைப்பதாகும்.

"மாற்றறியாத செழும் பசும் பொன்னே, மாணிக்கமே" என இராமலிங்க அடிகளும் "அரும் பொன்னே, மணியே" எனத் தாயுமான அடிகளும் இறைவனை, அவனது அருளை, ஒளி மயமாகக் கண்டு கண்களால் சுவைத்திருக்கிறார்கள்.

"ஏழிசையாய் இசைப் பயனாய்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனை இசை மயமாகக் கண்டு காதால் சுவைத்து மகிழ்ந்திருக்கிறார்கள். "பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி" எனத் தாயுமான அடிகள் கூறி இறைவனை மலராகக் கருதி மணத்தை மூக்கால் சுவைத்திருக்கிறார்கள்.

"உண்ணாரமுதே ஆற்றின்ப வெள்ளமே" என மணிவாசகர் இறைவனது அருளை உண்ணும் பொருளாக்கி நாவினால் சுவைத்திருக்கிறார்கள்.

"கண்டேன், கனிந்தேன், கலந்தேன்" என இராமலிங்க அடிகள் இறைவனது உடலால் கலந்து சுவைத்திருக்கிறார்கள்.

மேலே கண்ட ஐவரும் மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐம்பொறிகளாலும் தனித் தனியே இறைவனது அருளைச் சுவைத்திருப்பது கண்டு மகிழ்கிறோம்.

2.

திருநாவுக்கரசரைச் சமணர்கள் (சுண்ணாம்புக் காளவாயில்) நீற்றறையில் போட்டுப் பூட்டிவிட்டார்கள். அவரது எலும்பும் சாம்பலாகியிருக்கும் என எண்ணிக் கதவைத் திறந்து பார்த்த போது அவர் உயிரோடு வெளிவந்தார்.

உங்கள் உடம்பு நீற்றறையில் எரியாதிருந்தது எப்படி எனக் கேட்டவர்க்கு அவர் எனது உடலையும், உள்ளத்தையும் ஈசன் திருவடி நிழலில் வைத்து விட்டேன். அதனால் நெருப்பு என்னை எரிக்கவில்லை. எனக் கூறினார். அப்பாடல் இது:—

"மாசில் வீணையும், மாலை மதியமும்
வீசு தென்றலும், வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை, பொய்கையும்
போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே."

இதனால் இறைவனது திருவடி நிழல் எவ்வளவு குளிர்ச்சியானது என்பதும் அது நெருப்பையும் அணைக்கும் ஆற்றல் படைத்தது என்பதும் நன்றாக விளங்குகிறது.

இதற்கு மேல் இக் கவிதையில் உள்ள புதை பொருள் ஒன்றையும் கண்டு மகிழுங்கள்.

"மாசில் வீணை" காதுக்கு இன்பம். "மாலை மதியம்" கண்ணுக்கு இன்பம். "வீசு தென்றல்" மூக்கிற்கு இன்பம். "வீங்கு இளவேனில்" உடலுக்கு இன்பம். "பொய்கையின் நீர்" நாவிற்கு இன்பம் என நாவுக்கரசர் தன்னுடைய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளாலும் இறைவனது அருட்சுவையைச் சுவைத்திருப்பதாகக் கூறாமல் கூறியிருப்பது நம்மை மகிழவைக்கிறது.

3

மணிவாசகர், தாயுமானவர், சுந்தரர், இராமலிங்க அடிகள் ஆகிய நால்வரும் தங்களின் ஒரு பொறிக்கு மட்டும். ஒரு பொருளைக் கண்டு சுவைத்தனர் எனவும், நாவுக்கரசர் தன் ஐந்து பொறிகளுக்கும் 5 வெவ்வேறான பொருள்களைக் கண்டார் எனவும் கண்டோம். நம் 5 பொறிகளுக்கும் 5 பொருள்களைக் காணாமல் ஒரே பொருளைக் காணமுடியுமா? ஓவியம் கண்ணுக்கு இன்பம். மூக்கிற்கு?......மலர் மூக்கிற்கு இன்பம் நாவிற்கு?......வீணை காதுக்கு இன்பம். வாய்க்கு?......ஆனால் பலாப்பழம் கண்ணுக்கும் அழகு. மூக்கிற்கும் மணம். நாவிற்கும் இன்பம் தருகிறது. காதுக்கு என்ன தரும்?......ஆகவே நம்மால் நம் 5 பொறிகளுக்கும் ஒரே பொருளைக் காணமுடியவில்லை.

4

ஆனால் வள்ளுவர் மலைத்தக்க மாண்புடையளாக, வாழ்க்கைத் துணைவியாக இல்லறம் நடத்த வந்த பெண்ணை ஆண் மகனுடைய ஐம்பொறிகளாலும் சுவைக்கப் கூடிய ஒரு பொருளாகக் கண்டுபிடித்துக் கூறிவிட்டார். அது.

"கண்டு கேட்டு, உண்டு உயிர்த்து
உற்றறியும்
ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே
உள." என்பது

இதையே கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புலனும் "திண்டோளான் கண்ணே உள என வாழ்க்கைத் துணைவிக்கு, வாழ்க்கைத் துணைவனைக் காட்டியதாகவும் கருதலாம்.

இந்த அளவோடு வள்ளுவர் விட்டுவிடவில்லை. இத்தகைய ஆணையும் பெண்ணையும் நிறுத்தி இவ்விருவர்களின் ஐம்பொறிகளுக்கும் இன்பம் தரக்கூடிய மூன்றுவது ஒரு பொருளையும் கண்டுபிடித்துக் காட்டியிருப்பது நம் உள்ளத்தை யெல்லாம் மகிழ்விக்கிறது. அது எது?

"பெற்ற குழந்தையை ஈன்ற பொழுது கண்டு உவத்தலால் கண்ணுக்கு இன்பம். உச்சி மோந்து மகிழ்வதால் மூக்கிற்கு இன்பம் அவர் தம் சிறு கை அளாவிய கூழ் வாய்க்கு இன்பம். மக்கள் மெய் தீண்டல் உடலுக்கு இன்பம். மற்றும் அவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு என மக்கட் செல்வத்தை ஆணுக்கும் பெண்ணுக்கும் ஐம்பொறிகளால் சுவைக்கக்கூடிய மூன்றுவது பொருளாகக் காட்டியிருப்பது நம்மை வியப்படையச் செய்கிறது.

நாம் எவ்வளவோ முயன்றும் நம்முடைய ஐம்பொறிகளாலும் சுவைக்கக்கூடிய ஒரு பொருளைக் காணமுடியவில்லை. ஆனல் வள்ளுவரோ. ஒன்று இரண்டு அல்ல மூன்று பொருள்களைக் காட்டியிருக்கிறார். அவர் புலவர். அது கவிதை, எனினும் அது வாழ்வின்பம். சிற்றின்பம்.

5

ஆனல் இராமலிங்க அடிகளோ கோடையிலே எனத்தொடங்கும் பாடலில் இவற்றிற்கெல்லாம் மேலாகத் தான் சுவைத்த அருட் சுவையைக் கூறியிருப்பது எண்ணி எண்ணி வியக்கக்கூடியது. "கோடையிலே இளைப்பாறிக்கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவாக இறைவனது திருவருளைச் சுவைத்திருக்கிறார். "குளிர்தரு" காதுக்குக் குளிர்ச்சி. "தருவின் நிழலிற் கனிந்த கனி" கண்ணுக்கு அழகு. "ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீர்" நாவிற்குச் சுவை. "உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்தமண மலர்" மூக்கிற்கு மணம். "மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்று" உடலுக்குச் சுகம். என்பது, எப்படி வள்ளலாருடைய பாடலும் அவர் ஐம்பொறிகளாலும் சுவைத்த அருட் சுவையும்? இதற்கும் மேலாகத் தன் உடலும் உயிரும் கூட இறையருளைச் சுவைத்திருப்பதாகக் காட்டுவது நம்மைத் திடுக்கிடச் செய்கிறது. அதை அவர் வாக்கினலேயே கேளுங்கள்.

> "தேன்கலந்து, பால்கலந்து செழுங்கனித்
> தீஞ்சுவை கலந்து
> என் ஊன் கலந்து, உயிர் கலந்து
> உவட்டாமல் இனிப்பதுமே."

எப்படி இராமலிங்க அடிகளின் சதையும், உயிரும் கூட இறையருளைச் சுவைத்த சுவை.

6

மேலே உள்ள பாடல் முடியவில்லை "மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே "என்பது வரை தன் பொறிகளால் சுவைத்த அவர் அதற்குமேல் பேரின்ப வெள்ளத்தைப் பருகி" பூங்காற்றின் வினை சுகமே" எனவும் சுகத்திலுறும் பயனே எனவும் இறையருளைச் சுவைதந்து பேரின்பப் பெருவாழ்வை நமக்கு விளக்கி நம்மைச் சிந்தனையில் ஆழ்த்திவிடுகிறார். இதிலிருந்து இறைவனது அருட்சுவைக்கு இராமலிங்க அடிகள் தருகின்ற மறுபெயர் "சுகத்திலும் பயன்" என்று தெரிகிறது.

சுகத்திலும் பயன் என்பது மூன்று சொற்களைக் கொண்ட ஒரு சொற்றொடர். மூன்று சொற்களும், மூன்று செய்திகளைத் தருகின்றன. சுகம், ஒன்று, சுகத்திலுறுவது மற்றொன்று, அதன் பயன் இன்னும் ஒன்று. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானல் ஒன்று பொருள். மற்றொன்று நிகழ்ச்சி. இன்னொன்று அதன் நினைவு என்று கூறலாம்.

எடுத்துக் காட்டாக நெருப்புக்குச்சி ஒரு பொருள். அது உராய்வது அதன் நிகழ்ச்சி. அதன் நினைவு ஒளி. தெய்வ சபை ஒரு பொருள் அதிலுள்ள திரைகள் விலகுவது நிகழ்ச்சி. பயன் சோதி தரிசனம் எனக் கூறலாம்.

இதிலிருந்து இறைவனது அருட் சுவையை அருளாளராக இராமலிங்க வள்ளல் தன் ஐம்பொறிகளுக்கும் இன்பம் தருகின்ற ஒரு சுகப் பொருளாக மட்டும் கருதாமல் அதனையும் கடந்து சுகத்தின் நிகழ்ச்சிகளையும் தாண்டி இறுதியில் அதன் பயனகவே இறையருளைக் கண்டு இன்பம் துய்த்து கலந்து விட்டார் என்றே கருத வேண்டியிருக்கிறது. இதனைக் கண்டேன், கனிந்தேன், கலந்தேன் என்ற அவரது சொற்களும் மெய்ப்பிக்கின்றன. கண்டது கண்கள். கனிந்தது உள்ளம் கலந்தது உடல். இதுவே பேரின்பம்.

7

வள்ளல் கண்டு கனிந்து, கலந்த சுகத்திலுறும் பயனை அருட் சுவையை பேரின்பத்தை நாமும் அடைய வேண்டாமா? அடைய முயற்சிக்க வேண்டாமா? முயற்சி திருவினையாக்கும் என்பது வள்ளுவர் வாக்கு. முயற்சிக்கும் முன்னே நாம் சிறிதாவது சிந்தனை செய்ய வேண்டும். நாம்தான் எதையுமே சிந்திப்பதில்லையே! இறையருளைப் பெற எப்படிச் சிந்திப்பது? நம்முடைய இந்த இழி நிலையை எண்ணி.

> "சிந்தித்தறியேன் அரைக்கணமும்,
> தரிசித்தறியேன் ஒருநாளும்
> வந்தித்தறியேன் ஒருபொழுதும்,
> வழுத்தியறியேன் சுவைவிலும்"

என ஒரு ஞானி வருந்திப் புலம்புகிறார்.

8

இல் வாழ்வில் இன்பம் துய்க்க வழிகாட்டிய வள்ளுவர் பேரின்பப் பெருவாழ்வை

அடையவும் வழிகாட்டுகிறார். அது முதலில் ஞானசிரியனைப்பற்று அடுத்து அவன் பற்றியிருக்கிற இறைப்பற்றைப்பற்று. அப்போது இவ்வுலகப்பற்று எளிதில் விடும் என்பது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றைப்பற்றுக
பற்று விடற்கு," என்பதே அவர்
கூறிய குறள்.

9

இதிலிருந்து இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள நாம் இறையருளைப்பெற, அருட் சுவையைச் சுவைக்க, பேரின்பத்தை அடைய வேண்டுமானால் நம் மனத்திலுள்ள அழுக்குகளை முதலில் போக்கிக் கொள்ள வேண்டும். மன அழுக்கைப் போக்குவதற்கு உரிய ஒரே வழி ஞானசிரியனை அடைந்து அவரது அறிவுரைகளை, அறவுரைகளைக் கேட்டு வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது விளங்குகின்றது. இத்தகைய நல்ல வாய்ப்பு இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஸ்ரீ-சுவாமி ஹரிதாஸ் அவர்களின் வருகையால் வாய்த்திருக்கிறது. இந்த வாய்ப்பைத் தமிழ் மக்கள் பயன்படுத்திப் பயன் அடைவது நல்லது.

---

# ஓம் நமோ நாராயணாய

1. ஓம்நமோ நாராயணாய ஓம்நமோ நாராயணாய
ஓம்நமோ நாராயணாய ஓம்நமோ நமோ

2. ஸகலலோக சாக்ஷியாகி ஸகலவேத ஸாரமாகி
ஸகலயோக ஸித்தியாகி நின்ற மூர்த்தியே
ஸகல தத்துவங்களாகிப் பரப ஞான வித்தையாகி
ஸகலசப்தவடிவமாகி வந்த மூர்த்தியே,

3. அகுணஸகுண நிலையிலாகி அசரசரவி பாகமாகி
அதிலுமாகி இதிலுமாகி அமையும் மூர்த்தியே
அணுவுளே அகண்டமாட அணுவினை லனைத்தும்ஆட
அபரநாத வடிவிலாடும் அகுண மூர்த்தியே.

4. எனதுநானெனச் செருக்கிமமதை உற்றலைந்தஎன்னை
இனியனாக்கி இணையவைத்த இன்ப மூர்த்தியே
எனதுளத்திலுனது நாமம் எழுதி வைத்து நடனமாடி
ஏகமாய் எனைக்கலந்த யோகமூர்த்தியே.

5. படிஎலாங்கடந்த சுத்த பிரம்மவஸ்துவாய் இருந்தும்
பஜனையால் மகிழ்ந்து தோன்றும் கருணை மூர்த்தியே
ஒருகணத்துள் எனதுளத்தை உருக வைத்த உனது நாமம்
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நமோ.

6. அளவிலாமல் எழு விசார அலையடித்த மருளகற்றி
அமைதிபெற் றடங்கவைத்த அன்பு மூர்த்தியே
ஒருகணத்துள் எனதுளத்தை உருக வைத்த உனது நாமம்
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நமோ.

# ஹரி நாமம்

1. ஆதிஅயனெடு தேவர் முறையிட ஆசி தருவது ஹரிநாமம்
ஆவிபிரிவுறும் வேளைவிரைவினில் ஆள வருவது ஹரிநாமம்
ஓதும் அடியவர் நாவில் அமுதென ஊறிநிறைவது ஹரிநாமம்
ஓலமிடு கஜராஜன் விடுபட ஓடி அருள்வது ஹரிநாமம்
வேதமுடியிலும் வேள்விமுடிவிலும் மேவிஉரைவது ஹரிநாமம்
வீசும்அலைகடல் சேஷன்நிழல்செய நீடுதுயில்வது ஹரிநாமம்
நாதஜயஜகந்நாத நாமமெனநாளும் அவனடி பணிவோமே
நாமபஜனையில் நாமமகிமையால் நாதனவனருள் பெறுவோமே

2. பூதகண பரிவாரபரசிவ பூஜைபெறுவது ஹரிநாமம்
பூமிபுவனமும் ஏகபதமளவாக வளர்வது ஹரிநாமம்
தாதை தொடுமிட மேதுமவனுளன் தேவன் எனும் மகனுரைபோலே
தாகநரம்ருக கோர வடிவோடு தூணிலெழுவது ஹரிநாமம்
காதலோடு கவி பாடுமடியவர் காண வருவது ஹரிநாமம்
காலநிலை கருதாது துதிசெயத் தாவி வருவது ஹரிநாமம்
ஏதுவிலகினும் ஏதுதொடரினும் ஈசனவனருள் நினைவொன்றே
ஏறியநுபவமீறி அனைவரும் ஏகபஜனையில் மகிழ்வோமே.

# தோத்திரப்பிரியன்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

"ஆதியந்தமாயினாய் ஆல வாயில்
அண்ணலே
சோதி யந்த மாயினாய் சோதி
யுள்ளோர் சோதியாய்,
கீதம் வந்த வாய்மையாற் கிளர்
தருக்கி னார்க்கலால்
ஓதி வந்த வாய்மையால் உணர்ந்
துரைக்கலாகுமே"

இறைவழிபாட்டில் சிறந்த இரு பகுதிகளாக அமைந்தவை தோத்திரமும், தியானமுமாகும். அவற்றுள் தோத்திரமென்பது பிற இடங்களில் சென்று அலைந்து அல்லல் உறும் மனத்தை ஒருமுகப் படுத்தி இறைவன் பால் செலுத்த உதவுவதாகும். மக்களை அருளுலகில் ஈடுபடவைக்கும சக்தி தோத்திரங்களுக்குண்டு கண்ணீரை உகுக்கச் செய்து உள்ளத்தை உருக்கி பக்திப் பரவசத்தில் ஆழ்த்திவிடுவதும் தோத்திரங்களே. தியானமென்பது இறைவன் வேறு நாம் வேறு என்ற நிலையில்லாமல் அவனோடு ஒன்றித்து நிற்க வைக்கும் நிலையாகும். அந்த அனுபவத்தை அகத்திலே காணலாம். அது அகவுலகில் சஞ்சரிக்க உதவியாக அமையும். ஆனால் முதற்கண் இன்றியமையாது வேண்டப்படுவது தோத்திரமே. ஏனென்றால் புறத்திலே அமைதியை ஏற்படுத்தித்தான் அக அமைதிக்கு வழிகாணலாம். தோத்திரங்கள் பாட்டாக அமைந்து இசையோடு சேரும்பொழுது உருக்கத்தைத் தருகின்றன. உள்ளத்தை இன்புறுத்துவது இனிய ஓசையே. இசை என்று கூறும் பொழுதும் இறைவனையும் எம்மையும் இசைவிக்கின்ற ஒரு சக்தி உண்டு என்பதை அச்சொல்லே காட்டுகின்றது. கேட்போர்களையும், பாடுவோர்களையும் பரமனிடத்து இசைவித்து நிற்பது பாட்டேயாகும். இசைத்தமிழாற் பாடிப் பரவுகின்றவரே இறைவனை நன்கு உணரலாம் என்பது அருளாளர் கருத்து. "அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே" என்றார் அப்பர் சுவாமிகள்.

'பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன் மருவுமிடம்' என்பது ஞானசம்பந்தர் தேவாரமாகும்.

வேதங்களில் சாமவேதம் இசையோடு பாடப்படுவதால் அதுவே இறைவனுக்கு மிகவும் உவப்பானது என்று குறிப்பிடப்படுகின்றது. வேதத்திலும் பல பகுதிகள் இருப்பினும் தோத்திரங்களாக அமைந்த பகுதிகளையே சிறப்புடை வேதமாக ஓதுவார்கள். இறைவனே தன் திருவாயால் வேதங்களை ஓதிக் கொண்டும் தன் திருச்செவியால் இசையை அனுபவித்துக் கொண்டும் இருக்கின்றான் என்பது புராண விளக்கம். அவனுடைய வடிவமே தோத்திரமாக விளங்குகின்றதென்பர். பண்டைக் காலத்திலும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் தேவபாணி என்ற பெயரில் வழங்கப்பட்டமையும் யாவராலும் அறியப்பட்ட செய்தியாகும் இற்றைவரை தமிழில் எழுந்த பக்திப் பாசுரங்களும் திருமுறைகளும் எண்ணில் அடங்கா. இறைவனே தோத்திரப் பிரியனாக இருந்து அடியார்கள் மூலம் இவற்றை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட நேரத்தில் ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. திருவெண்ணெய் நல்லூரிலே கோயில் கொண்டு எழுந்தருளிய பெருமான் அசரீரி வாக்காகச் சுந்தரருக்கு மொழிந்த அதனைச் சேக்கிழார் சுவாமிகள் பின்வருமாறு காட்டுகிறார்.

"மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன்
எனும் நாமம்
பெற்றனை நமக்கு மன்பில் பெருகிய
சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால்
மண்மேல் நம்மை
சொற்றமிழ் பாடு என்றார் தூமறை
பாடும் வாயார்."

அதாவது தாம் விரும்பும் அர்ச்சனை பாட்டே, என்பதை உலகுக்குக் காட்டியருளினார். அடியார்கள் பல தலங்களுக்கும் சென்று பாடிப்பாடி இறைவன் புகழைப் பரவச் செய்தமை பெரிய புராணத்தில் காட்டப்பட்டுள்ளது. இறைவனுக்கு மிக விருப்பமானது பாமாலையே என்பதைத் தாயுமான சுவாமிகளும் "பன்மாலைத்திரள இருக்க பாமாலைக்கே பட்சம் பரமனுக்கே" என்று பாடியுள்ளார். பண் சுமந்த பாட்டுகளுக்காக இறைவன் மண் சுமந்தான் என்பதும், தூது சென்றான் என்பதும், விறகு சுமந்தான் என்பதும், பிரம்படி பட்டான் என்பதும் திருமுறைச் சான்றுகளாகும். ஓரிடத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் மிக நகைச்சுவையாக இறைவன் புகழ்ச்சி விருப்பன் என்பதைக் காட்டுகின்றார். இதற்கு அவர் தரும் சான்று மேலும் சுவையானது. அதாவது மாணிக்கவாசகர் சிவபெருமானைப் புகழ்ந்து

பாடிய பாடல்களை எழுதிப் பாதுகாக்க வேண்டும் என்ற விருப்பம் சிவபெருமானுக்கு ஏற்பட்டது. இதனால் தானே ஏடும் எழுத்தாணியும் கொண்டு மாணிக்க வாசகரிடம் சென்று அவர் பாடிய பாடல்களையெல்லாம் சொல்லும்படி கேட்டு, ஒன்றும் விடாமல் எப்படியோ எழுதினான். ஏனென்றால் ஒரு நாட்டின் அமைச்சர் தன்னைப் புகழ்ந்து பாடிய பாடல் என்பதனாலேயே அவை பெருமைக்கு உரியனவாகையால் புகழ்ச்சி விருப்பனாகிய இறைவன் அதனை எழுதிக்கொண்டான் என்று காட்டுகின்றார் புலவர். என்றாலும் புகழ்ச்சி விருப்பன் என்று கூறுதலும் தகாது ஏனெனில் அவன் விருப்பு வெறுப்பற்றவன் என்பதையும் காட்டுகின்றார். இப்பாடல் நால்வர் நான்மணி மாலையில் அமைந்துள்ளது.

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ,
மனம் நின் றுருக்கும் மதுர வாசக,
கலங்குறு புலன் நெறி விலங்குறு வீர,
திங்கள் வார் சடைத் தெய்வ நாயகன்
ஒரு கலையேனும் உணரான்; அஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள்; காணிற்
கண்களோ ஒன்று காலையிற் காணும்;
மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும்;
பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்;
ஆயினும், தன்னை நீ புகழ்ந் துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன், அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்,
இகழ்ச்சி அறியா என்பணி வானே.

இத்தகைய நிகழ்ச்சிகளில் இருந்து இறைவன் ''தோத்திரப் பிரியன்'' என்பதும் பாடுவார் பழி தீர்ப்பான் என்பதும் நாமறிந்த உண்மையாகும்.

கொழும்பு ஸ்ரீ ஞானானந்த சேவா சமாசத்தின் சார்பிலே ஆண்டாண்டு தோறும் தைமாதக் கிருத்திகையில் நடைபெறும் குருபூசை விழாவும் இந்த அடிப்படையில் நடத்தப்பட்டு வருவதாகும். அருட்பாடல்களின் சக்தி சமுதாயத்தில் துயரைப போக்கி இறைவன் திருவடி இன்பத்தில் திளைக்கவைக்கும் இத்தகைய நிகழ்ச்சிகள் பல இவ்விழாவில் இடம் பெறுவது தவப்பேறாகும். இந்த வாய்ப்பைக் கொழும்புவாழ் மக்களன்றி அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இறுதியில் தாயுமான சுவாமிகளின் ஓர் பாடலைக் குறிப்பிட்டு நிறைவு செய்யலாம்.

பன்மாலைத் திரளிருக்கத்
தமையுணர்ந்தோர்
பாமாலைக்கே நீதான் பட்சமென்று
நன்மாலை யாவெடுத்துச் சொன்னார்
நல்லோர்
நலமறிந்து கல்லாத நானுஞ்
சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனேன் எந்நாளும் துதித்து
நிற்பேன்
என்மாலை யறிந்திங்கே வாவா என்றே
எனைக்கலப்பாய் திருக்கருணை
எம்பிரானே.

# ஸ்ரீ ஸத்குரு ஞானானந்த தசகம்

என் மனத்துதித்தவனே! தபோ
வனத்திருப்பவனே!—என்
உளத்திலுனை ஒரு கணத்தில் நினைத்தால்
அனைத்தும் தருபவனே!

சினத்தை வென்றவனே! அறமெனும்
தனத்தில் நின்றவனே இந்த
ஜகத்தின் ஆண்டவனே இகபர
சுகத்தைத் தருபவனே.

கிடைத்தற் கரியோனே! சித்திலிங்க
மடத்தில் உறைவோனே எந்த
இடத்தும் இருப்போனே! பல ஸங்
கடத்தை அறுப்போனே;

அப்பனுக்கு உபதேசம் செய்த ஞான
சுப்பனும் நீ தானே!
முப்பிடி அவலை முயன்று புசித்த கண்
ணப்பனும் நீ தானே!

ஒப்பிலா மாமணியே! நீ
இப்பவே வந்தருள்வாய் உன்னை
எப்பவும் போற்றிடுவேன் என்
அப்பனே ஆண்டிடவா!

விரித்த சடையுடன் கரித்தோல் உரித்துச்
சிரித்து நின்றவன் நீ பின் திரி
புரத்தை எரித்தாறு முகத்தை அளித்து என்
உள்ளத்தைப் பறித்தவனும் நீ;

என் மனத்தே புகுந்திடுவாய் உன்னிரு
பதத்தை யுகந்திடுவாய் அகமெனும்
மதத்தை ஓட்டிடுவாய் அம்பிகை
பதத்தைக் காட்டிடுவாய்;

சித்த மிரங்காதா என்
பித்தமும தெளியாதா
உத்தம குருநாதா ஆண்டிடும்
அத்தனே அருள் நீ தா

எந் நாட்டவரும் போற்ற
இந்நாட்டினி லவதரித்தாய் என் மன
ஆட்டமதை நிறுத்தி மெய்ஞ்ஞான
நாட்டமுறச் செய்வாய்

கிருத்திகையில் உதித்தவா என்னைத்
திருத்தி அமைக்க வந்தவா மங்கள
புரிதனில் தோன்றியவா பணியும்
ஹரிதாஸனுக்கருள் செய்யவா.

# THE BEACON-LIGHT AT THE THAPOVANAM

(*V. Sivasupramaniam*

Rtd Judge of The Supreme Court)

From the dawn of civilization great spiritual Teachers have appeared from time to time who, by example and by precept, have helped mankind to its destined goal of Self-realisation. Though such Teachers have appeared both in the East and in the West, it is a remarkable feature that the large majority of them appeared in India. The spiritual flame lit by the Vedic Sages has been kept undimmed by many a Teacher from age to age. Thus India has become the home of spirituality in the world. Among such Teachers was the Sage at the Thapovanam near Tirukoilur in the South of India. The impact of Sri Gnanananda Giri Swami's influence has been felt far and wide not only in many parts of India but abroad as well. The Ashram he established on the banks of the Pennai River near Tirukoilur became and still continues to be a haven of refuge to many a weary traveller wending his way on the narrow, rugged path towards his spiritual goal. It is an abode of peace in the midst of a troublous world. The Divine presence of the Swami, his lustrous eyes and magnificent frame, aglow with spiritual light, his honeyed words and childlike simplicity brought instant calm to the seeker's mind. In words suited to each one's attainment he showed the path to those who sought refuge in him.

A visit to the Thapovanam will convince anyone that the dynamic influence of the Swami is still a living force. His presence, though not in his physical form, can be strongly felt. He will always be a beacon-light at the Thapovanam guiding all, seeking their way to safety.

The Thapovanam which the Swami began with a hut has now develpoed almost into a township. Numerous buildings have been constructed most of them under the personal supervision of the Swami, to accomodate the thousands of pilgrims who flock to this spiritual abode. In the centre of the Ashram stand temples dedicated to Ishvara, Ambikai, Ganesh and Murugan—separate from them stands a temple dedicated to Sri Krishna, while in another section are accomodated the Navagrahas. Opposite these temples, in a special hall is a life like image of the Swami., with that characteristic serene smile of his, lighting his face.

The morning prayers commence at 4 a.m. with the chanting of the Vedas and the singing of devotional hymns followed by poojahs at all the temples including the shrine of the Swami. Love and devotion characterise the large numbers of devotees who come from far and near and participate in the various activities of the Ashram.

One matter that aroused the curiosity of persons who visited the Ashram was the age of the Swami. To a Jivanmuktha age is an irrelevant factor. He sheds his mortal frame when he decides to do so. No one knows the exact age of the Swami when he attained Maha Samadhi a few years ago. Verifiable facts, however, showed that he was at least about 170 years at that time. He had, in the course of his travels on foot visiting places of pilgrimage, met and enjoyed the Company of many Saints and sages including Shri Ramakrishna Paramahamsa, Swami Vivekananda, Sri Arobindo, Ramalinga Swamigal and Ramana Maharshi.

The Swami selected as his chief disciple Swami Haridas, affectionately known to all as Guruji. Born of Royal lineage, Guruji came under the magnetic spell of the Swami at a very early age. Renouncing all worldly ambitions and desires, he drank deep of the spiritual fount of the Swami. Although he was not a Sannyasin at the time of the attainment of Maha Samadhi by the Swami he has now received Sannyasa Deeksha under the name of Swami Haridass Giri and has become the spiritual successor of the Swami. The spiritual radiance of the Thapovanam is maintained by him in its fullest splendour and the numerous pilgrims who still flock there find solace in his katha kalakshepams, religious discourses and Bhajans. He has established several centres both in India and abroad in the name of the Swami which serve as organisations for the development

of religious life and social service. He has in recent times, sucessfully carried the message of the Swami across to the West as well. The Sri Gnanananda Seva Samajam founded by him in Sri Lanka a few years ago has an ambitious programme of religious and social work before it. The funds collected so far towards the compaletion of the projects have been the result of his own efforts. The active support, financial and otherwise of every devotee in this country is required before the Samajam's programme can be carried into fulfilment. One hopes that this support will be forthcoming without delay.

May the Beacon-light at the Thapovanam serve as the guide to all the Gnanananda centres for the spread of spiritual life and harmony in this world.

---

# கருணையின் வடிவம்

வானமளாவும் மாமாமரமே...என்னை,
வாவென்றழைக்கும் தபோவனமே—(குரு)
நாதனின் நாமம் ஞானனந்தமே (அங்கே)
நாடிச் சென்றால் ப்ரம்மானந்தமே

தேனூறும் பெண்ணை ஆறோரமே – எங்கள்
தேவனிருக்கும் தபோவனமே—திரு
கோவிலூர் குடிகொண்ட கோபாலனே—திரு
ஏழுமலை கொண்ட கோவிந்தனே (அங்கே)
காவி உடைகொண்டு வந்துளானே,

பழனித் திருச்செந்தூர் போகவேண்டா (அங்கே)
பன்னிரு கையனைத் தேடவேண்டாம்—நம்
பக்கம் அமர்ந்திருக்கும் ஞானனந்தன்
பங்கேறுமையனே சந்தேகம் வேண்டாம்

சங்கர பீடத்தில் வந்தவராம் அவர்
சாதுக்கள் சங்கத்தில் பெரியவராம்
சங்கடங்கள் நீங்க வேண்டுவோம் என்றே
சன்மார்க்க போதனை செய்பவராம்.

தேவா தேவா என்ற சொல் இனிக்கும் அங்கே
தேவரும் காண இன்பம் தொனிக்கும்
சாவாத வரம் அதிலே பிறக்கும்—மனம்
சாந்தியடைய ஓம் என்றொலிக்கும்

கண்ணனும் கந்தனும் கலந்து விட்டான் அங்கே
கருணையின் வடிவமாய்த் தோன்றி நிற்கும் நமது
அண்ணல் ஞானனந்தன் ஆற்றல்களை
ஹரிதாஸனால் செப்பிட ஆகிடுமோ.

# சமயம் வளர்த்த சமுதாயம்

(நா. முத்தையா—ஆத்ம ஜோதி)

கட்டுண்ட ஆன்மா மீண்டும் இறைவனை அடைதலுக்கு மதம் என்று பெயர். மதம் இறையுணர்வு பெறுவதற்கான வழியினைக் காண்பிக்கிறது. 'ரிலிஜன்' என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் திரும்பக் கொணர்தல் என்பது தான் பொருள்.

மனிதன் எப்போதும் வெறும் மிருக வாழ்வு வாழ்வதில் திருப்தி அடையமாட்டான். அவன் ஆன்மீகத் துறையில் ஆறுதலையும் அமைதியையும் விரும்புபவன். மனிதனிடத்தே ஆழமாகப் பதிந்துள்ள உட்புற அவாவினை மதம் நிறைவேற்றுகிறது.

இந்து மதத்தை, 'சனாதன தர்மம்' என்றும் 'வைதிகதர்மம்' என்றும் அழைப்பதுண்டு. 'சனாதனதர்மம்' என்றால் சாகாமதம் எனப் பொருள்படும். உலகத்தைப் போன்று இந்து மதமும் மிகப் பழமையானது. அது எல்லா மதங்களுக்கும் தாயாகும். இந்து மதம் சனாதனதர்மம் என்று அழைக்கப்படுதற்குக் காரணம் அது சாகா நிலை பெற்றது மட்டுமல்ல; அம்மதம் ஆண்டவனின் திருவருள் பெற்ற காரணத்தாலும், மக்களை மரணமிலாப் பெருவாழ்விற்கு அழைத்துச் செல்லத்தக்க ஆற்றல் பெற்றமையாலும் அது அப்பெயர் பெற்றது.

'வைதீகதர்மம்' என்றால் வேதங்களின் மதம் என்று பொருள்படும். வேதங்கள் என்பவை இந்து மதத்தின் அடிமனைக்கான தர்ம சாஸ்திரங்களாகும். முற்கால ரிஷிகள், உள்ளுணர்வால் தோன்றிய ஆன்மீக அநுபவங்களை உபநிடதங்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள். வடமொழியில் மதம் என்ற சொல்லுக்கு இழுத்துச் செல்வது என்பது பொருள். அதாவது ஆத்மாவை ஆண்டவனிடம் இழுத்துச் செல்வது.

ஒவ்வொரு சமயத்திலும் சமய உண்மைகளை உணர்ந்து தாம் அதன்படி ஒழுகித் தம்மோடு சேர்ந்தவரையும் அது போன்று ஒழுகச் செய்த தொண்டர்கள் தோன்றியிருக்கின்றார்கள். சைவத்திலே நாயன்மார்களும் வைஷ்ணவத்திலே ஆழ்வார்களும் உதாரண புருஷர்கள். எல்லாச் சமயங்களிலும் இங்ஙனந்தோன்றிய அடியார்களை ஒரு சமுதாயமாகக் கூறினர். பெரியோர். அது தான் தொண்டர் குலம் என்பது.

தொண்டர் குலமே தொழுகுலமாகும்.

"குலந்தரும் நாராயணா என்னும் நாமம்" என்று கூறுமிடத்து 'குலந்தரும்' என்ற சொல்லுக்கு விளக்கந்தந்த உரையாசிரியர்கள் தொண்டர் குலத்தை உணர்த்தும் எனக் கூறியுள்ளார்கள். தொண்டர் குலத்தில் சாதிச் சழக்குகளுக்கு இடமில்லை. கல்வித்திமிர், செல்வத்திமிர், சாதித்திமிர் என்ற முக்குறும்பையும் போக்கிவிடுகின்றது. திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்திலே பலவகை மரபினர் தொண்டர்கள் அல்லது சிவனடியார்கள் அல்லது நாயன்மார்கள் என்ற ஒரு சொல்லாலேயே அழைக்கப்படுகின்றார்கள்.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பரா
கில் அவர் கண்டீர் நாம் வணங்குங் கட
வுளாரே" என்ற இலக்கியத்திற்கு இலக்
கணமாகத் திகழ்கின்றார்கள்.

பெரிய புராணத்தில் வரும் சிவனடியார்களுள் மறையோர் பதின்மூவர்; சிவமறையோர் இருவர்; மாமாத்திரர் ஒருவர்; முடிமன்னர் அறுவர்' குறுநில மன்னர் ஐவர், வணிகர் ஐவர்; வேளாளர் பதின்மூவர்; ஆயர் இருவர்; குயவர் ஒருவர்; பாணர் ஒருவர்; பரதவர் ஒருவர்; வேடர் ஒருவர்; சான்றார் ஒருவர், சாலியர் ஒருவர்; நீசர் ஒருவர்; ஏகாலி ஒருவர்; செக்கார் ஒருவர்; மரபு தெரியாதவர் பதின்மூவர்.

இவர்களில் குருவழிபாட்டால் வீடடைந்தோர் பதினொருவர்; இலிங்க வழிபாட்டால் வீடடைந்தோர் முப்பதின்மர்; சங்கம வழிபாட்டால் வீட்டைந்தோர் பத்தொன்பதின்மர்.

திருவரங்கத்திலே ஓர் உத்தம பக்தர் இருந்தார். பணிவே உருவெடுத்தது போன்ற பாகவதர் இவர். இவரது குரு தமிழகமெங்கும் ஞான ஒலிபரப்பிய பேரறிஞர். குரு திருமலையில் வாழ்ந்து வந்தார். ஒருநாள் திருவரங்கத்திலே இருந்த சீடருக்குத் தொண்டன் எப்படி இருப்பான் என்றொரு சந்தேகம் எழுந்தது. அதைத் தெளிந்து கொள்வதற்காகத் திருமலையில் உள்ள குருவைத் தேடிச் சென்றார் சீடர்.

சீடரின் சந்தேகத்தை அறிந்தார் குரு. அதற்கு அவர் கூறிய விடை இரத்தினச் சுருக்கமாக அமைந்தது.

கொக்குப்போல் இருப்பான்;
கோழிபோல் இருப்பான்;
உப்புப்போல் இருப்பான்;
உம்மைப்போல் இருப்பான்.

என்பது தான் அவர் கூறிய விடையாகும்.

கொக்கு நீர்வளமுள்ள இடத்தில் தான் இருக்கிறது. அது போலத் தொண்டனும் பக்தி வளமுள்ள இடத்தில் தான் காணப்படுவான். கொக்குக்குக் குளம் போலப் பக்தர்களுக்கு இருந்தவை திருத்தலங்களாகும். நல்லாரோடு தோழமை கொள்வதிலும், நல்லாசிரியரைத் தேடிக் காண்பதிலுங் கூட.

"ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாங் கொக்கு" என்று அந்தக் கொக்கின் நிலையில் தானே இருக்கிறார்கள் தொண்டர்கள்.

"ஆசாரக் கள்ளர்போல நாரை திரியுது." என்ற குறவஞ்சி ஆசிரியர் கூற்றும் தொண்டர்க்கு ஓர் எச்சரிக்கையாகப் பயன்படக் கூடியதுதானே. கொக்கு வெள்ளை நிறம் உடையது. 'வெள்ளைக்கிலை கள்ளச் சிந்தை". தொண்டர்களும் கள்ளங் கபடு அறியாத குழந்தை உள்ளத்தோடு இருப்பார்கள். "கள்ளம் போனால் உள்ளது காணும்". குழந்தை உள்ளம் படைத்தவர்களே இறையுண்மை காண்பர். அறிந்தும் அறியாதவர் போல், நீறு பூத்த நெருப்பைப் போலப் பரம சாத்வீகர்களாக இருப்பார்கள் தொண்டர்கள்.

குப்பையைக் கிளறிக் கிளறித் தானிய மணிகளைப் பொறுக்கும் கோழி, குஞ்சுகளுக்கு ஊட்டித் தானும் உண்டு பசி ஆறுகிறது. பக்தர்களும் வேத சாத்திரங்களிலுள்ள சாரமான மணிகளைய பிறருக்கும் வழங்கித் தாங்களும் அனுபவித்து மகிழ்வார்கள். மெய்யடியார்கள் தாம் கண்ட உண்மைகளைப் பிறர்க்கு வழங்குவதில் எவ்வளவு சிரத்தை உள்ளவர்களாக இருந்தார்கள்! இதற்காகவே அவர்கள் பால் போன்ற தமிழில் பண்சுமந்த பாசுரங்களைப் பாடிவைத்திருக்கிறார்கள். பன்னிரு திருமுறைகளும் நாலாயிரத்திவ்வியப்பிரபந்தமும் 'தமிழ் மறை' என்று போற்றப்படுகின்றன. வேதம் தமிழ் செய்தவர்கள் என்கிறோம். வேதமாகிய பாற்கடலைத் தமது நாவினால் கடைந்து திருமுறைகளாகிய அமிர்தத்தை வழங்கினார்கள். "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க" என்று சேக்கிழார் பேசுவார்.

"அருமறை துணிந்த பொருள் முடிபை
இன்சொல்
அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பி
அருளிய சடகோபர் சொற்
பெற்றுயர்ந்தன"

என்பது அழகிய மணவாளதாசரின் அழகிய பொருள் பொதிந்த வாக்கு. தேவகி வயிற்றில் வசித்ததுபோல் பகவான் உபநிஷதங்களிலும் நம்மாழ்வாரின் திருவாய் மொழிப்பாடல்களிலும் வசிப்பதாகச் சொல்கிறார் ஒரு வைஷ்ணவ ஆசிரியர். உபநிஷதங்கள் என்ற பசுக்களைக் கோபாலன், அர்ச்சுனனாகிய கன்றை முன்னிட்டுக் கறந்து, கீதை என்ற பாலமிழ்தமாகக் கொடுத்தருளினான் என்றும் கூறுவர். தானிய மணிகளைப் பொறுக்கிக்குஞ்சுகளுக்கு ஊட்டித் தானும் உண்ட கோழிபோல, வேதசாஸ்திர சாரமான உண்மைகளைத் தமிழருக்குக் கீத அமிழ்தாக அள்ளிவழங்கினார்கள் தெய்வப் புலமைபெற்ற மெய்யடியார்கள்.

தொண்டன் உப்பைப்போல இருப்பான் என்றும் ஆசிரியர் குறிப்பிட்டாரல்லவா "உப்பில்லாப்பண்டம் குப்பையிலே" என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. மனிதசமுதாயத்திற்குத் தொண்டன் உப்பைப்போன்றவன்தானே!

உப்பானது, தான் அழிய மாறிக் கறியமுதிற்குச் சுவை தருகிறது. அப்படியே தொண்டனும் உடல், பொருள், ஆவி அழிய மாறித் தான் செய்யும் உபகாரம் அல்லது கைங்கரியத்திற்குச் சுவை தருகின்றான்.

பிறரை இம்சித்துந் தன்வயிற்றை வளர்க்கவேணும் என்றிருக்குமவன் அதமன்; பிறரும் ஜீவிக்கவேணும், நாமும் ஜீவிக்கவேணும் என்றிருக்குமவன் மத்திமன்; தன்னை அழிய மாறியாகிலும் பிறர் ஜீவிக்க வேணும் என்னுமவன் உத்தமன். உப்பைப்போலத் தொண்டாற்றும் தொண்டனே உத்தம மனிதன்.

உப்புமுனைந்தால் கறியமுதின் சுவை கெட்டுப்போகும். அப்போது கறியமுதைக் கெடுத்துவிட்டது என்று உப்பின்மீது குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் தான் அழிய மாறிக் கறியமுதிற்குச் சுவைதரும் உப்பை யாராவது பாராட்டுவது உண்டா? கறியமுது நன்றாக இருக்கிறது என்றுதானே சொல்லுகிறார்கள். இதுதான் தொண்டனின் நிலையும், என்று கண்டு கொண்டார் திருவரங்கத்திலிருந்து வந்த தொண்டர்.

தொண்டிலே தொண்டன் 'நான்' என்னும் ஆணவத்துடன் முனைந்து நின்றால், தொண்டு சுவை இழந்து, தூய்மை இழந்து கெட்டுப் போகும். அந்த நிலையில் தொண்டனைத்தான் குறை கூறுவார்கள். தொண்டிலே, தொண்டன் மறைந்துபோய்த் தொண்டு, சிறந்து விளங்கும் போது தொண்டனைத் தேடிக் கண்டு பாராட்டுவோரும் இல்லை. தொண்டிலே, தன்னை மறந்த தொண்டனுக்குப் பிறரும் தம்மை மறந்து, தொண்டை மட்டும் பாராட்டும் போதுதான் உள்ளபடியே திருப்தியும் ஏற்படுகிறது.

தொண்டன் எப்படி இருப்பான் என்று கேட்டாரே அவரிடத்திலேயே தொண்டனின் இலக்கணம் நன்கு அமைந்திருந்தது. தானும் ஒரு தொண்டன் என்று தெரியாமல் தொண்டு செய்தாரே அவர் தான் உண்மையான தொண்டர்

இவ்வளவு பெரும் பணியோடு
"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே"
என்ற நிலையில் அத்தொண்டர் வாழ்ந்தார்.
"தன் கடன் அடியேனை யுந்தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே"
என்ற நிலையும் இதுவேதான்.

ஓர் அரசிளங்குமரி காதலன் அளித்த முத்து மாலையைக்காணாது தேடித்திரிந்தாள். படுத்த இடம், குளித்த இடம், உண்ட இடம், உல்லாசமாய்ப் பொழுதுபோக்கிய எல்லா இடமுந் தேடினாள், காணப்படவில்லை. கவலைமிகக் கொண்டாள். கடைசியாகத் தோழி ஒருத்தி வந்தாள். தலைவியே உன் கழுத்தில் இருப்பது என்ன என்று கேட்டாள்? தடவிப்பார்த்தாள் அதுதான் அவள் தேடித்திரிந்த முத்துமாலை. இப்படியேதான் தொண்டரின் இலக்கணத்தைத் தொண்டருக்குச் சுட்டிக்காட்டினார் திருமலை வாசியான பெரியவர்.

கழுத்திலே தொங்கி, நெஞ்சிலே புரண்டு கொண்டிருந்த முத்துமாலையை 'அது எங்கே இருக்கிறதோ' என்று தேடித்திரிந்த அரசிளங்குமரி போலவே, தொண்டரும், தாமே தொண்டர் என்பதை மறந்து, தொண்டன் எங்கே? எப்படி இருப்பான் என்று விசாரித்தார். தொண்டுக் காதலால்ஏற்பட்ட மறதி இது. பிறர் நண்பராக இருந்தாலும் சரி, பகைவர்களாக வளர்ந்தாலும் சரி, அவர்களிடம் அன்பு பூண்டு பணிசெய்து கிடப்பதே உண்மைத் தொண்டனின் இலட்சணமாகும்.

சமயம் வளர்த்த தொண்டர் சமுதாயமே உலகை நன்னிலைப்படுத்த வல்லது. இதனை உணர்ந்தே பெரியவர்கள் "தொண்டரொடு கூட்டுகண்டாய்" என்றும் "அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய்" என்றும் கூறினார்கள் தொண்டர் குலமே தொழுகுலமாதலின் நாமும் அவ்வழி நிற்போமாக!

---

# காஞ்சி காமகோடி சுவாமிகளின்

# தெய்வத்தின் குரலிலிருந்து

தான தர்மம் செய்வது, சந்தியாவந்தனம், யாகம், பூஜை, பரோபகாரம் எல்லாம் நல்லதில் மனசைச் செலுத்தும் பகிரங்க சாதனங்கள். தியானம் என்பதே மிகச்சிறந்த அந்தரங்க நிலை. அதற்கு அநுகூலமாக இருக்கிற மற்ற அந்தரங்க சாதனங்கள் ஐந்து. அவை, அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், செளசம், இந்திரிய நிகர்ஹம் என்பவை. எவருக்கும் ,எவற்றுக்கும் கெடுதலே எண்ணாதபடி மனசை அன்புமயமாகச் செய்து கொள்வது அஹிம்சை. மனம், வாக்கு, காயம் மூன்றையும் உண்மையிலேயே ஈடுபடுத்துவது சத்தியம். அஸ்தேயம் என்றால் "திருடாமல் இருப்பது" என்று அர்த்தம். அதாவது பிறர் பொருட்களில் ஆசையே எழாதபடி வைராக்கியமாக்கிக் கொள்வது. செளசம் என்றால் தூய்மைப்படுத்திக் கொள்வது. ஸ்நானம், மடி, ஆசாரம், ஆகாராதிகளின் சுத்தி எல்லாம் செளசத்தில் அடங்கும். இந்திரிய நிக்ரஹம் என்பது புலன்களை அவற்றின் போக்கில் விடாமல், ஒவ்வொர் இந்திரியத்துக்கும் இவ்வளவுதான் ஆகாரம் கொடுப்பது என்று நிர்ணயமாக வைத்துக் கொள்வது. கண் இதைப் பார்க்கக் கூடாது. காது இதைக் கேட்கக் கூடாது. வாய் இதைத் தின்னக் கூடாது என்று தடுத்து நிறுத்துவதே இந்திரிய நிக்ரஹம். சாதனை செய்வதற்காக மட்டும் சரீரம் வேண்டும். சரீரம் உயிர் வாழுவதற்காக இந்திரியங்களுக்கு எவ்வளவு அதம பட்சம் தீனி கொடுக்க வேண்டுமோ அவ்வளவே கொடுக்க வேண்டும்.

இந்த ஐந்தும் 'சாமானிய தர்மங்கள்' எனப்படும். அதாவது நமது மதத்தைச் சேர்ந்த சகல பிரிவினரும் இவற்றை அநுஷ்டிக்க வேண்டுமென்பது மநுதர்மம்.

# இசையும் சமயமும்

திருமதி. பாலம் லக்ஷ்மணன்

என்பு தோன்றி ஊன் இன்றி இளைத்த யாக்கையராய் ஒருவர் வீதியிலே நடக்கின்றார். தலையிலே விறகுகட்டு. அரையிலே அழுக்கு மூழ்கிய சிதராடை; கையில் ஒரு பழைய யாழொன்றைத் தாங்கியபடி வருகின்றார். ஒரு திண்ணையிலே அமர்கின்றார். யாழை மீட்டிப் பாடுகின்றார் சாதாரிப்பண்ணை. கைவிரல்கள் யாழின் நரம்புகளிலே ஊஞ்சலாடுகின்றன. அந்த நரம்போசையும் இசையெழுப்பும் மிடற்றோசையும் பின்னி இசைகின்றன. உயிரைப் பின்னி இழுக்கின்றதே இந்த ஓசை என்னவென்று கேட்போர் வியப்புறுகின்றனர். 'இழுமென்றொலிக்கும்' அருவியின் ஓசையா, முழவின் ஒலியா, வலம்புரி முழங்குகின்றதா, கொழுது இசைவண்டின் தாரியா, மூங்கிலிலிருந்து மெல்ல மெல்லக் கீழே வந்து விழுகின்ற சிறுதளிரா, தெளிந்து மின்னும் மீனைச் சரக்கென்று வந்து கொத்தும் மீன்கொத்தியின் வேகமா, எதுவென்று தெரியாத வண்ணமாக எல்லாமாக அந்த இசை, உணர்வின் உணர்வைத்தட்டி எழுப்புகின்றது. ஆண்டவனே இசைஞனாக வந்து பாடுகின்றான். அந்த இசையை அனுபவிக்கும் பக்தனின் மனநிலையைப் பக்தர் நினைத்துப் பார்க்கின்றார். "கண்ணிறைநுதலோன் சாமகண்டத்தில் எழுந்த முல்லைப்பண் நிறைந்த தேவகீதம், சராசர உயிரும் பாரும், விண்ணின் திசைகள் எட்டும்" விழுங்கித் தன்மயமாக்கிற்று. கேட்போர் உள்நிறை உயிரையும் மெய்யையும் உருக்கிற்று. அந்த நிலையிலே ஐம்பொறிகளும் செவியாகிவிட்டன. ஐம்புலன்களும் பண்ணோசையாகிவிட்டன; என்று உணர்ச்சி வேகத்தின் வெளிப்பாட்டைக் கவிஞன் வர்ணிக்கின்றான்.

வேறொரு காட்சி; கோகுலத்தில் கண்ணன் குழலூதுகின்றான் கறவைக்கணம் கால் பரப்பிட்டுக் கவிழ்ந்து இறங்கிச் செவியாட்டாமல் கிடக்கின்றன. மான் கணங்கள் மேய்கை மறந்தன. மேய்ந்த புல்லும் கடைவாய் வழியே சோருகின்றது. மான்கள் எழுதுசித்திரங்கள் போல நிற்கின்றன. "மரங்கள் நின்றும் மது தாரைகள் பாயும்; மலர்கள் வீழும்; வளர் கொம்புகள் தாழும்."

சங்கக் காட்சி ஒன்று; குறிஞ்சி நிலத்திலே தினைப் புனம் காக்கின்றாள் ஒரு மங்கை. தெள்ளிய சுனையிலே நீராடி வந்துள்ளாள். பரண் மேல் நின்று காற்றில் தன் கூந்தலை ஆற்றிக் கொண்டிருக்கின்றாள். உள்ளம் நிறைந்த களிப்பு பாட்டாக அவள் வாயில் வெளிப்படுகின்றது. குறிஞ்சிப் பண்ணை இசைக்கின்றாள். தினைப்புனத்தில் கதிர்கள் நன்கு முற்றியிருக்கின்றன. அதை நாடி வந்த யானை அந்த இசையிலே சொக்கி நிற்கின்றது. கதிரும் கொள்ளவில்லை. தன் பசியும் மறந்து அம்மங்கைபாடும் பாட்டிலே மயங்கி நிற்கின்றது அந்த மழகளிறு.

இசையின் பெருமையை விதந்துரைக்கும் காட்சிகள் இவை. இசை இசைவிக்கும் பெருமை பெற்றது. எதை எதனோடு இசைவிக்கின்றது? நம்மையே நம்மோடு இசைவிக்கின்றது; நம்மை இறைவனோடு இசைவிக்கின்றது என்றெல்லாம் இசைக்கு விளக்கம் கொடுத்துக்கொண்டே போகலாம்.

சமயம் என்பது என்ன? சமயத்திற்கு இணைப்பது என்ற பொருளுண்டு. ஆங்கிலத்தில் religio என்று கூறினால் அதற்கு சேர்ப்பது என்று பொருள். சமயம் என்பதற்கு வினையடி சமை என்பது, எனவே பக்குவப்படுத்தல் என்பதும் கருத்தாகின்றது. நம்மை இறைவனோடு இணைக்க, இறைவனது படைப்பாகிய இவ்வுலகத்தோடு இயைந்து வாழ நம்மைச் சமைக்கின்றது சமயம். சத்திய நாட்டத்தை ஏற்படுத்துவது சமயம். நமது அகவாழ்வையும் இணைக்கின்றது; பக்தியை வளர்க்கின்றது; அன்பு நெறியில் நாட்டம் ஏற்படுத்துகின்றது; எல்லாவற்றிலும் இறைவனைக்கண்டு அன்பு செய்யும் பெருநெறியாகச் சமயம் நமது வாழ்வைச் செம்மைப் படுத்துகின்றது.

இச்சமய உணர்வின் முழுவெளிப்பாடும் இசையிலேயே சாத்தியமாக இருக்கின்றது. பாணபத்திரன் என்ற பாடகன் ஆலவாய்ப் பெருமானுடைய கோயிலில் பாடும் பணியே பணியாகக் கொண்டவன். பெருமழை பொழிகின்றது. அதையும் பொருட்படுத்தாது ஆலயத்தை அடைகின்றான். மழையில் நனைந்து சேறாகிவிட்ட கால்களுடன் வந்து நின்றான். அவன் பக்தியே வடிவமானவன். அவனது நிறைந்த அன்பே இசையாக அரும்புகின்றது. என்புருக்கும் அமுத இசை பாடுகின்றான். அவனிருப்பதற்குப் பலகையிட்டு மகிழ்கின்றான் ஆலவாய்ப்பெருமான்.

ஆனாயர் என்ற அடியார் குழலிசையாலேயே இறைவனைப் பக்திபண்ணுகின்றார். கொன்றைமரமொன்று காணுகின்றார். சரக்கொன்றை மரம்; சரம் சரமாக மலர்களைத் தாங்கி நிற்கின்றது. இறைவன் திருமுடியை அணிசெய்யும் கொன்றையங் கண்ணியை அது நினைவூட்டுகின்றது. அக்கொன்றை மரமே

இறைவனாகிவிடுகின்றது. நெகிழ்ந்த அன்பு அவர்தம் வாய்க் குழலில் இசையாக வெளிப்படுகின்றது. 'அன்பூறி மிசைப் பொங்கும் அமுத இசை குழலொலியாக. எவ்வுயிரும் என்பூடு கரைந்துருக்கும்' இசையாக மலர்கின்றது. தூய இசையால் இறைவனை வழிபாடு செய்த பக்தர் ஆனாயர். நாதோபாசனையே அவர்தம் வாழ்க்கை நெறியாக அமைந்தது.

இறைவன் புகழ் பாடுகின்றார் ஒரு ஆதிமனிதர். 'மரணத்தின், பள்ளத்தாக்கில் சாவின் நிழலில் நடக்க வேண்டுமெனினும் நாம் அஞ்சுவது யாதொன்றுமில்லை' ஏன் தெரியுமா? இறைவனே நீ என்னுடன் இருக்கின்றாய் உன் கோலும் தடியும் என்னைக் காக்கும். மக்களே வாருங்கள் எல்லோரும பாடுங்கள் அவன் புகழ்; யாழைக் கொண்டு வாருங்கள்; குழலைக் கொண்டு வாருங்கள். பேரிகை அடிப்போம்; தாளங்கள் கொட்டுவோம்; வெற்றிகீதம் இசைப்போம். உயிருள்ளவெல்லாம் அவன் புகழ் பாடட்டும் என்று மேனாட்டுக்கீதம் ஒன்று-அந்தப்பாட்டு முந்திய விவிலியத்துச்கு காலத்துப் பாட்டு—Psalm என்ற இசையமைப்புடையது அந்தப்பாட்டு முழங்குகின்றது. தெய்வீகப் பாட்டு O Praise the lord என்று தொடங்கும் பாட்டு

Praise him with fanfares on the trumpet
Praise him upon lute and harp
Praise him with the flute and strings
praise him with clash of cymbols
Let everything that has breath praise the lord, O praise the lord என்று முடிகின்றது. தெய்வீகம் நிறைந்த தேவகானமாகக் காதில் விழுகின்ற Psalm இது.

தமிழை இயல் இசை நாடகம் என்று மூன்றாகப் பிரித்து முத்தமிழ் என்று வழங்குவது மிகப் பழைய இலக்கிய மரபாக விளங்குகின்றது. 'சங்கத்தமிழ் மூன்றும் தா' என்று அவ்வைப் பிராட்டி வேண்டுகின்றாள். நம்பியாண்டார் நம்பி 'முத்தமிழாகரன்' என்று ஞானசம்பந்தப் பெருமானைக் குறிக்கின்றார். இயற்றமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் இடையிலே வைத்து இசைத்தமிழ் பேசப்படுகின்றது. இது அவ்விரண்டுக்கும் உயிர் நாடியாக இசை அமைந்திருப்பதைக் காட்டுகின்றது.

இயற்றமிழில் நான்குவிதப் பாவினங்களைச் சொல்லுவார்கள். ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்பனவே அவை. அவற்றுக்கு ஓசையிலக்கணம் வகுக்கப்பட்டிருக்கின்றது. ஆசிரியப்பாவுக்கு மயில் அகவுதல் போன்ற ஓசை; வெண்பாவுக்கு ஒருவர் மொழிய மற்றவர் சொல்லுதல் போன்ற செப்பலோசை; வஞ்சிப்பாவுக்கு தூங்கலோசை; கலிப்பாவுக்குத் துள்ளலோசை என்று கூறுவார்கள். இந்த ஓசைப் பண்புகள் இயற்றமிழ்ப் பாடல்களுக்கு இன்றியமையாதவை; எனவே இசைத்தமிழுக்கும் இயற்றமிழுக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கின்றது என்பது வெளிப்படை. நாடகத் தமிழுக்கு இசையின் அத்தியாவசியம் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இங்ஙனம் இசைத்தமிழ் ஏனைய இரண்டிற்கும் வலிகொடுத்து ஒளிகொடுத்து விளக்கும் பெருமைபெற்றது.

இசைத்தமிழ் என்பது என்ன? பண்ணோடு பாடும் பாடல்கள் தாளத்தோடு பாடும் பாடல்கள், அதாவது இசை முறைகளோடு பாடப்படும் பாடல்கள் இசைத்தமிழ் எனப்படும். மொழிக்கு மூத்தது ஒலி. ஒலிக்கு மூத்தது நாதம். பிரபஞ்ச தத்துவத்துக்கே நாதம் அடிப்படையாக இருக்கின்றது. ஓங்காரம் என்றும் பிரணவப் பொருள் என்றும் குறிப்பிடப்படுவது இந்த நாதமே. இந்த நாதோதயமே அறிவென்ற வெளிச்சத்துக்குக் காரணமாக அமைகின்றது. தேவகீதமாக விளங்குவது நாதம் என்று குமரகுருபரர் பேசுகின்றார். முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதுகின்ற அடியார்க்கு நல்லார் நாதத்தின் பரப்பையும் விளக்கத்தையும் வரையறை செய்து காட்டுகின்றார். பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசையென்று பெயராம் என்று விளக்குகின்றார். நெஞ்சு, மிடறு, முதலிய பெருந்தானங்கள் எட்டாலும் எடுத்தல், படுத்தல், முதலிய கிரியைகள் எட்டாலும் பண்ணிப் படுத்தப் படுவது பண்'' என்று மேலும் அதை விவரிக்கின்றார். ஆதி இசைகள் பதினாயிரத்துச் சொச்சம் என்று வேறு கூறுகின்றார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விதியும், ஒழுங்கும், உருவமும் பெற்ற ஒரு பெருங்கலையாக, கடலாக விளங்கும் இசைததமிழுக்குக் காலம் கற்பிக்க முற்படும்போது இறைவனைப் போல் இசையும் அநாதியானது என்ற உணர்வு ஏற்படுகின்றது. இறைவனை இசையிலும்' இசையில் இறைவனையும் காணும் உணர்வு கைவரப் பெறுகின்றது.

சமயம் எப்பொழுது தோன்றிற்று என்ற கேள்விக்கு விடையளிக்கின்றார் ஒரு பேரறிஞர். மனிதகுலம் தோன்றிய நாள்முதல், அதற்குக் கண்பார்க்க ஒளிகாட்டி, கால் நடக்கப் பாதை காட்டி வாழ வழிகாட்டும் வாழ்க்கைத் தத்துவமாக அது விளங்கி வந்திருக்கின்றது என்கின்றார். அந்த உணர்வின் வசப்பட்டார், பார்க்கின்ற இடமெல்லாம் பரமனுடைய காட்சியையே கண்டார்கள். இயற்கையை எல்லாம் இறைவன் வடிவாகக் கண்டார்கள். நீலநிறத்துச் சிறுபிள்ளையை நீலத்திலே எல்லாம் கண்டார்கள். குன்றாடு கொழுமுகில், குரைகடல், குவளைகள் எல்லாவற்றிலும் கணமயில்போல் நிறமுடைய நெடுமாலைக் கண்டார்கள். பாடுமின் பாடிப் பாடித் தேடுமின் என்று பரமனையே பாடுவார்களானார்கள். 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே' என்று என்று ஒருவர் பாடினார். அந்தக் களிப்பு இசைக்கும் பொருந்தும் இறைவனுக்கும் பொருந்தும். நெஞ்சக் கன கல்லை நெக்குருகச் செய்வது இறையுணர்வு. பாலைப் பண்கேட்டுத் தம் கைப்படை நழுவ

விட்டுப் பகை மறந்து வன்தொழில் மறந்து உருகி நிற்கின்றனர் ஆறலைக் கள்வர்.

இசையும் இறை உணர்வும் ஒன்றோடொன்று பின்னி இணைந்த பேருணர்ச்சியாகி உணர்ச்சிப் பிரவாகமாக விளங்குகின்றன.

இறையருள் பெறக் குருவருள் சித்திக்க வேண்டும். குருவருள் துணையின்றித் திருவருள் கைவராது என்று சாத்திரங்கள் கூறுகின்றன. மந்திரங்களை உச்சரிக்கும்போது அவற்றைச் செய்த முனிசிரேட்டர்களுக்கு வந்தனம் சொல்லியே அவற்றைச் செபிக்கத் தொடங்கும் மரபு ஒன்று உண்டு. சங்கீதத்துக்கும் அதோடு தொடர்பு பெற்ற மெய்ஞ்ஞான பரம்பரை ஒன்று வாழையடி வாழையாகத் தோன்றி வளர்ந்துள்ளது; அந்த ஞானப் பரம்பரை நமக்கு அத் தெய்வீகக் கலையைக் கையளித்து வந்திருக்கின்றது. நந்தி மத்தளம் கொட்ட, நாரதர் தாளம்போட காலைத்தூக்கி நின்றாடுகின்றான் இறைவன். காதில் கந்தருவத்தையே குழையாக அணிந்திருக்கின்றான். அவனது கையுடுக்கையிலிருந்தே சப்த சுரங்களும் உதிர்ந்தன என்பனவும், வீணை வாசிக்கின்ற வீணாதார தட்சிணாமூர்த்தித் திருக்கோலமாக வீற்றிருக்கின்றான் எம்மிறை என்பதும், சங்கீத ராகங்களையெல்லாம் தேவர்களாகவும் தேவதைகளாகவும் வணங்குவது என்பதுவும், இசை தெய்வீகம் பொருந்தியது என்பதை விளக்குவதாக அமைந்துள்ளன

சங்கம் வளர்த்த மிகப் பழைய நூல்களாகிய பரிபாடல் போன்றவை இசையோடு கூடிய துதிப்பாடல்கள் நிரம்பியவை. இப்பொழுது விரிந்து காணப்படும் கர்நாடக இசை செழிப்புற்று வளர்வதற்கு ஆதாரமாக விளங்கும் பண்முறைகள் தோன்றிய காலம் சங்ககாலம். சிலப்பதிகாரத்தில் நிருத்தம் கீதம் வாத்தியம் என்ற மூன்றும் விளக்கமாக விவரிக்கப்படுகின்றன. இம் மூன்றையும் சேர்த்துக் குறிப்பிடும் நல்ல தமிழ்ச் சொல் 'கொட்டாட்டு' என்பது. 'கொட்டாட்டுப் பாட்டாகி நின்றான் இறைவன்' என்ற ஒரு குறிப்பைப் பழைய இலக்கியங்களிலே காணுகின்றோம். சேர்ந்து பாடுகின்றார்கள் ஆய்ச்சியர்கள். குரவைக் கூத்தாட்டு ஆடுகின்றார்கள். சேர்ந்து பாடுகின்ற ஒரு மரபையும் அங்கே காணுகின்றோ. மேல் நாடுகளிலே இந்த மரபே இப்பொழுது ஆலயங்களிலே கோஷ்டிகானமாக Church Choir ஆக உருவெடுத்துள்ளது. ஏழிசைச் சூழல் என்று ஒரு கலையரங்கு குறிப்பிடப்படுகின்றது, இப்பொழுதுள்ள இசைக்கலை மன்றங்களை ஒத்தது போலும் இது.

இசையும் சமயமும் கைகோத்துக் களிநடனம் செய்த காலம் தென்னாட்டில் பக்தி வெள்ளம் கரைபுரண்டோடிய காலமாகிய நாயன்மார் காலம். இசையின் பொற்காலம்; பக்தியின் பொற்காலம். 'தமிழோடிசை பாட மறந்தறியாத திருநாவுக்கரசுப் பெருந்தகை, 'இசைகற்று வல்லார் சொல்லக்கேட்டுக் கந்தருவராக வேண்டும்' எல்லாரும் என்று கனவு கண்டு அதை நனவாக்கிய திருஞானசம்பந்தர், 'ஏழிசையாய் இசைப்பயனாய்' இறைவனைக் கண்ட சுந்தரர் என்ற மூவரும் வாழ்ந்த காலம். வாழ்வைச் செம்மைப்படுத்தும் சக்தியாக, சத்தியமாக, வாழ்வின் உதயமாக விளங்கும் ஒளியாகச் சமயம் விளங்கிற்று. அந்த சத்தியத்தின் குரலாக இசை மிளிர்ந்தது.

இம்மூவர் காலத்துக்குப் பின் வந்தவர் மணிவாசகப் பெருமான். அவரது பாடல்களிலே அவர் நாதத்தையும் ஆராதித்தவர் என்பது நன்கு வெளிப்படுகின்றது. பெண்கள் சேர்ந்து பந்து அடிக்கின்றார்கள். அம்மானை பாடுகின்றாகள். சிறகடித்துப் பறக்கும் உந்தி விளையாடுகின்றார்கள். பூக்கொய்ய ஒரு பாட்டு என்றெல்லாம் இசையின் விகசிப்பை அங்கே காணுகின்றோம். மாணிக்க வாசக சுவாமிகள் வீணையிசை நன்கு கைவரப் பெற்றவரோ என்று கூட நமக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது. அவரது போற்றித் திருவகவலைப் படிக்கும்போது வீணையில் தாளம் மீட்டும் லயம்-இசையிலே ஒன்றுகின்ற ஒரு லயம்-அங்கே பளிச்சிடுகின்றது. 'போற்றி போற்றி, புராண காரண, போற்றி போற்றி சயசய போற்றி, என்ற பகுதிகள் இவ்வுண்மையை நன்கு காட்டுவனவாக அமைகின்றன.

பக்தியும் பாட்டும் சேர்ந்தவையாக அமைந்தவையே வைணவ அடியார்களுடைய திவ்யப்பிரபந்தங்கள்; 'பூதமுதல் நாயகன் சீர்ப் பூங்கழற் கீழ்ப் பகர்ந்துளவால் ஏதமிலாப் பூமாலை பாமாலை எனும் இரண்டும் ஆதரவினால் கட்டி அருளாட்சி' செய்தன ஆழ்வார்களுடைய நாலாயிரங்கள். ஆழ்வார்கள் இறைவனைத் தவிர வேறு எவரையும் பாடமாட்டோம் என்று உறுதிடைத்தவர்கள். இசையின் வடிவமே இறைவன் வடிவம் நாரணன் வடிவம் நாதத்தின் வடிவமே என்ற திட நம்பிக்கை படைத்தவர்கள் 'யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவையே' என்று பாடுகின்றார் நம்மாழ்வார். 'பாட்டினால் உன்னை என் நெஞ்சத்து இருந்தமை காட்டினாய்' என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார். குழந்தைக் கண்ணனைப்பாடுகின்றார் பெரியாழ்வார். பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் இசை வடிவை அங்கு காணுகின்றோம். கண்ணனைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டுப் பாடுகின்றார். செங்கீரை ஆடுக என்றும் சப்பாணி கொட்டாய் என்றும் பூச்சூட வருவாய் என்றும் உள்ள முருக்கும் பிள்ளைத்தமிழ் பாடுகின்றார் பெரியாழ்வார். இந்த இசை அமைதிகளால் பக்தி உணர்வு பிரவாகித்து விளங்கும் ஒரு சமுதாய அமைப்பினையும் காணக்கூடியதாக விருக்கின்றது.

பல்லவர்சோழர்காலங்கள் இசையும் சமயமும் மேன்மை பெற்று விளங்கிய காலம்

மாமல்லை என்ற கடலோர நகரில் கல்லில் காப்பியம் வடித்தவர்கள் பல்லவ மன்னர்கள். பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனுக்கு இசையில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அவனைப்போலவே இசையாராதனை செய்தவன் காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டிய இராஜசிம்ம பல்லவன். ஸ்ரீவாத்ய வித்யாதர, ஸ்ரீ ஆதோத்ய தும்புரு, ஸ்ரீ வீணாநாரத என்றெல்லாம் அவனுடைய பிருதுகள் கல்வெட்டில் காணப்படுகின்றன- அவன் மாமல்லபுரத்துக்கு மூன்றுமைல் தள்ளியுள்ள சாளுவன் குப்பம் என்ற கிராமத்துக்கருகில் அதிரணசண்டேசுவராலயம் என்று சிவபெருமானுக்கு ஒரு கற்கோயில் அமைத்துள்ளான். அக்கோயிலுக்கருகில் புலிக்குகை என்ற குடைவரை மண்டபம் ஒன்று இருக்கின்றது. கீதவாத்திய உபசாரங்களால் இறைவனை ஆராதிப்பதற்காகச் சமைக்கப்பட்ட சங்கீத மண்டபம் இது என்று விளங்குகின்றது. கடலை நோக்கி அமைந்த இசை அரங்கு. இந்த அரங்கின் குகையமைப்பால், அதிலிருந்து பாடுபவர் இசை, குகையில் வியாபித்துச் சுவரில் மோதிச் செவிக்கு இனிமை அளிக்கும் வகையில் அடக்கமாக ஒலிக்கின்றது, அலையோசை இதைப் பாதிப்பதில்லை என்று புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் விதந்து எழுதுகின்றார்.

தஞ்சைப் பெருவுடையார் கட்டிய சோழப் பெருமன்னனாகிய இராஜஇராஜ சோழன் காலமே தேவாரங்கள் கண்டெடுக்கப்பட்ட காலம். அவற்றுக்குரிய பண்கள் பற்றி அறிவதற்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபிலே வந்த பெண் ஒருத்தி உதவி செய்தாள். ஆலயங்களிலே தேவாரங்களைப் பண்ணோடு பாடும் வழக்கம் ஏற்பட்டது.

பல்லவ சோழப் பேரரசர் காலத்தில் தமிழ் நாட்டில் எழுந்த கற்கோயில்கள் கடவுளர் கோயில்களாக விளங்கியதோடு கலைக் கோயில்களாகவும் விளங்குகின்றன. திருக்கோயில்கள் மக்கள் வழிபடும் தலங்கள் என்பது மட்டுமன்றி, மக்கள் கூடும் பொதுவிடங்களாகவும் விளங்கின. சிற்பமும், ஓவியமும், இசையும், இசைக் கருவிகளும் இங்கே செழித்துவளர்ந்து செம்மைப்பட்டன.

ஆலயங்களின் நித்திய நைமித்திக கருமங்களிலே இசை மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இசைக் கருவிகளில் கோயிலுக்கென்றே விளங்கி வருவது நாதஸ்வர இசை. இந்த நாதஸ்வரத்தை மங்கள வாத்தியம் என்று கூறுவார்கள். இந்த மங்கள வாத்தியமும் மற்றுள்ள வாத்தியங்களும் ஒன்று சேர்ந்து பூசை முதலிய ஆலய வினைகளை வகைப்படுத்திக் கிரமப்படுத்தி விடுகின்றன. திருவிழாக் காலங்களிலும் சரி, அன்றாடப் பூசை நேரங்களிலும் சரி, நாதசுர இசை கேட்டு மக்கள் கோவில் பூசை, அவற்றின் நேரம் முதலியனபற்றி அறிந்து கொள்வது வழக்கம். ஒவ்வொரு ஊரிலும் கோயிலைச் சுற்றியே குடிமனைகள்; மல்லாரி வாசித்தால் சுவாமி புறப்பாடு என்பது தெரியவரும், ஸ்தம்ப பூசையா, சுற்றுப்பலியா, நைவேத்யம் வருகின்றதா, தீபாராதனையா, அர்த்தசாமப் பூசையா எல்லாவற்றுக்கும் ஒவ்வொரு தனித்தனி ராக வாசிப்பும் நாதஸ்வரத்தில் உண்டு. இங்ஙனம் பக்தியையும் இசையையும் ஒருங்கு சேர ஊட்டும் பணி; மக்கள் மனதில் இல்லறத்தையும் இறைவனையும் ஒன்று சேர்க்கும் பணி கோவிலின் பிரத்தியேக இசைக் கருவிகளுடையதேயாம். இங்ஙனம் ஆலயத்தை ஒட்டி வளர்ந்த இசைப் பாரம்பரியம் இருக்கின்றதே அது இந்து சமயத்துக்கே உரிய ஒரு விசேட பாரம்பரியம் என்று கூறுவது மிகையல்ல.

மேனாட்டிலும் கிறித்துவ சமயத்தில் கோயிலைச் சுற்றி ஒரு இசை வளர்ந்து வந்துள்ளது. குழு இசை, ஆர்கன் பியானோ, லயர் என்ற வாத்தியங்கள், தாளங்கள், தண்ணுமைகள் என்பனவற்றோடு ஆமந்திரிகை இசைமுறைக்கு இது மூலமாக விளங்குகின்றது. ஹார்மனி இசை மரபின் இன்றைய விஸ்தார வளர்ச்சிக்கு ஊற்றாக விளங்குகின்றது.

வட இந்தியாவில் இஸ்லாத்தின் வரவால் இந்தியா பெற்ற கொடை இந்துஸ்தானி சங்கீதம். இது முதலில் அரசதர்பாரகளில் பாடும் ஆஸ்தான சங்கீதமாக விளங்கினும், சமயத்தில் அடிப்படையிலேயே இது விகசித்தது. புகழ்பெற்ற இந்துஸ்தானி சங்கித மேதை தான்சென்னுடைய குரு அநுபூதி பெற்ற அருளாளர். ஆனால் காலப் போக்கில் தர்பார் சங்கீதம் போக்கிய சங்கீதமாயிற்று. எங்ஙனம் தென்னாட்டில் ஜமீன்தார்கள், குறுநில மன்னர் என்போர் தம்கையில் சிற்றிலக்கியம் வளர்ந்து ஒரு ஆத்மீக வீழ்ச்சி ஏற்பட்டதோ அதே போன்று ஒரு நிலை அங்கும் ஏற்பட்டது. அதை எதிர்க்கும் முகமாக வட நாட்டில் ஏற்பட்ட பக்தி இயக்கம், கீதகோவிந்தம் பாடிய ஜயதேவர், நாம சங்கீர்த்தனம், ஜாத்ரா, பஜனை போன்றவற்றின் தந்தை எனபபடும் சைதன்யர் என்ற அருளாளர்களால் பக்தியும் பாட்டும் கலந்ததொரு பேரியக்கமாயிற்று.

பதினெட்டாம் நூற்றாண்டில் திருவாரூர் தந்த அருட்செல்வர்கள் என விளங்கும் தியாகராஜ சுவாமிகள் முத்துஸ்வாமி தீக்ஷதர், சியாமா சாஸ்திரிகள் என்ற மூவரும் இறைவனுக்கு இசை மணம் கமழும் பாமாலைகளைச் சூட்டி மகிழ்ந்தார்கள். இம்மூவரையும் சங்கீத மும்மணிகள் என்று அழைப்பர். தியாகராஜ சுவாமிகளுடைய கிருதிகள் என்ற புதிய இசை வடிவம் ஒரு புதிய பாரம்பரியம் வளர வழி காட்டியுள்ளது. நாதோபாசனை செய்து நாதத்தால் இறைவனை அடைந்த பெரியோர்கள இவர்கள.

சங்கீத உபன்னியாசங்கள், கதா காலட்சேபங்கள், ஹரி கதைகள், பாகவத மேளங்கள் என்பனவெல்லாம் பக்தியை வளர்க்கும் நவீன இசை வடிவங்களாக விளங்குகின்றன.

உள்ளம் உருகிப் பாடுவதற்குப் பொருள் தெரிந்து பாடவேண்டியது மிக மிக அவசியம் என்ற உணர்வே தமிழிசை இயக்கமாக வளர்ந்தது. தமிழிசை வளரக் கலைக்கூடங்கள், கலை மன்றங்கள், என்பன வளர்க்கப்பட்டன. பழைய பண்ணிசை வடிவங்களையும் புதுப்பித்துப் பேணப் பண் மகாநாடுகள் கூட்டப்பட்டன. தேவார இன்னிசைக் கச்சேரிகள் செய்யும் ஒரு புதிய மரபு வளர்ந்தது. நமது ஈழ நாட்டின் தவப்புதல்வர்களில் ஒருவராகிய விபுலானந்த அடிகள் பண்டைய யாழின் வடிவையும் இசையையும், அதன் இசை அமைப்பையும் ஆராய்ந்து ஆராய்ந்து தம் வாழ்நாளை அதற்கு அர்ப்பணித்தவர்கள். அவர் ஆற்றிய பெரும் பணியின் நிலைத்த அடையாளமாக 'யாழ்நூல்' இன்று விளங்குகின்றது.

'ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க்கு நாம்' ஆயிரம் திருநாமம் பாடித்தெள்ளேணம் கொட்டாமோ' என்று மாணிக்க வாசக சுவாமிகள் பாடுகின்றது. நாம சங்கீர்த்தனத்தைக் குறிக்கின்றதோ என்றொரு ஐயம் ஏற்படுகின்றது. வீடுகள் தோறும் சென்று உறங்கும் பெண்களைத் துயிலெழுப்பபத் திருவெம்பாவை திருப்பாவை பாடுதல் என்பவை மிகப் பழைய காலத்தில் ஏற்பட்ட மரபுகள். இன்று அவைதான் நகர சங்கீர்த்தனமாக வளர்ந்து வந்துள்ளன எனக் கொள்ளலாம்.

பாடும் பணியே பணியாய் அருள்வாய் என்ற பிரார்த்தனையோடுலய வின்னியாசமாக அமைந்த திருப்புகழிசையே இன்று லயசங்கீத வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்தது எனலாம்.

உள்ளம் உருக்குவது இசை. தூய உணர்வுகளுக்கு எல்லாம் பிறப்பிடமாக இருக்கின்றது இசை. உள நூலார் இசை பற்றிச் சொல்லும் குறிப்பு அவதானிக்க வேண்டியதொன்று. இசை மனதின் தீயசக்திகளையெல்லாம் தூய்மையாக்கி விடுகின்ற பணியைச் செய்கின்றது என்பதே அக்குறிப்பு. இதுவே இசையின் இலட்சியமாக இருக்க வேண்டியதன் அவசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்கின்றோம். உயர்ந்த எண்ணங்களையும் சிறந்த பயன்களையும் வளர்க்கும் ஒரு தூய மரபு இசைக்கு உண்டு. இது இன்று நேற்றுத் தோன்றியதன்று. இந்த மரபு ஆயிரங்காலத்துப் பயிராக வளர்ந்து நிலைபெற்றுள்ளது.

கீழே கீழே இழுக்கும் மனித உணர்வுகளை மேலே மேலே உயர்த்தி, உயர்ந்த குணங்களை வளர்க்கும் மரபு பக்தியும் பாட்டும் ஒன்றித்த உயர்ந்த மரபாகின்றது. மனிதர்கள் மனதில் தெய்வீகத்தை ஏற்படுத்துவது; அவரை மனத்துக்கண் மாசில்லாதவராக வாழ வழிசெய்வது என்ற உயர்ந்த இலட்சியங்களை உள்ளடக்கியே சமயம் இசையை வளர்த்து வந்துள்ளது. வார்த்தைகளால் சொல்ல முடியாததை, நுண்ணுணர்வால் மட்டும் அறியக்கூடிய சமயத்தை விளக்கும் சாதனமாக இசை அமைந்து நமது வாழ்வை வளம்படுத்துகின்றது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இதற்குப் பிரத்தியட்ச உதாரணமாக அமைவது ஹரிதாஸ் சுவாமிகளினுடைய இசைகலந்த அருளுரைகளே என்பதை நாம் யாவரும் அறிவோம்,

# இசை இன்பம்

ஆர்வத் தீயால் அன்புள்ளுருகி, அருவிபோல வருவது பாட்டாம்!
குரலும் சுருதியும் கூடிக்குழைந்து, கமகமும் தாளமும் கனிவுறப் பொருந்தி,
பாட்டின் கருத்து பளிச்சென விளங்கக் கேட்டா ருள்ளம் கிளர்ச்சி கொள்ள,
உணர்ச்சி ததும்ப. உள்ளங்குழைய, நவரஸ பாவனை நயமுற நாட்டி,
பரவையும் வசந்தப் பறவையும் போலக்
கலையினுள்ளங் கடவுளைக்காட்ட, வீடு திருந்த, நாடு சிறக்கவே,
இயல்பா மிசைத்தல் இசையெனலாமே! இன்பப் பொருளே இசையின் பயனும்!

— யோகி சுத்தானந்த பாரதியார்

# முருகனழகு

சுசிலா தெ. மூர்த்தி

தமிழர் உள்ளத்தில் முருகக்கடவுள் ஓர் தனியிடம் பெற்றுள்ளார் முருகனைத் தமிழ்த் தெய்வம் என்பர். "அரிய தமிழ் தான் அளித்த மயில்வீரா,, என்று அருணகிரி அழைக்கின்றார். அருண தள பாத பத்மம் அநுதினமுமே துதிக்கவே இவ்வரிய தமிழை அளித்தனனென்கிறார்.

முருகு என்பதற்கு அர்த்தம் அழகு. முருகக் கடவுளுக்கு எத்தனையோ நாமங்களுண்டு கார்த்திகேயன் என்றும் , விசாகன் சுப்பிரமணியன் , குகன் , சண்முகன் , கந்தன் சரவணன் என்றும் எத்தனையோ பெயர்கள் எல்லாப் பாஷைகளிலும் வழங்குகின்றன ஆயினும் தமிழில் மட்டுமே முருகா என்ற திருநாமம் வழங்கப்படுகின்றது. முருகா அழகா என்று தான் பெற்ற குழந்தையை அழைப்பது போல் பக்தியுடன் அழைத்தால் குழந்தை ஓடிவருவது போல் முருகனும் அருள்வது உண்மை.

இதனையே, "ஒரு முருகா! என்தன் உளங்குளிர உவந்துடனே வரு முருகா" என்று நக்கீரர் திருமுருகாற்றுப்படைத் தொடக்கத்திலேயே பாடினார்.

முருகன் கோயில் கொள்ளும் பதிகள் இயற்கையழகில் திகழ்கின்றன. மலை,சோலை, சுனை, அருவி பொருந்திய இடங்களே முருகனுக்கு உகந்தவை.

பரமசிவனுடைய ஞானக்கண்ணின்றும் ஒளிவடிவாய் உருவெடுத்து அடியார் இடைஞ்சல் களைய வந்து இமயமலையிலுள்ள சரவணப் பொய்கையிலே வளர்ந்தார். சூரபத்மனை வென்று, தெய்வானையை மணந்து தணிகை மலையில் அமர்ந்தார். திருத்தணியிலும் இந்திர நீலச்சுனை சரவணப் பொய்கை என இரு அழகான பொய்கைகள் உண்டு. அப்படியே பழனிப்பதியும் மலையும் அருவியும் சேர்ந்த தலம். செந்தில் பதியில் பெருங்கடல் ஒலிக்கின்றது; இதனால் சீரலைவாய் என்னும் பெயரும் பெற்றது.

கதிர்காமத்தில் மணிதரளம் வீசும் அணியருவி சூழ வீற்றிருக்கின்றார். செல்லச்சந்நிதியிலும் வெருகல் பதியிலும் நீர்ததும்பிய சூழலிலேதான் வீற்றிருக்கிறார் முருகப் பெருமான்.

இயற்கையழகு வாய்ந்த சூழலிலே குடிகொள்ள விருப்பமுடைய கந்தன் திருமேனியழகு எம்மால் கூறமுடியுமா! முருகன் அருள் பெற்ற நக்கீரர், கச்சியப்பர் வார்த்தைகளாலே தான் சொல்லமுடியும்.

"என்றும் இளையாய், அழகியாய், ஏறூர்ந்தான் ஏறே" என்றும்,

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு

பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு' என்று மயிலின் நீலநிறத்தையும் செவ்வேளின் நிறத்தையும்,நீலக்கடலுக்கும் ஆங்குதிக்கும் சூரியனுக்கும் ஒப்பிடுகிறார் நக்கீரர்.

கந்தப்புராணத்தில் கச்சியப்பர் முருகன் அழகை விபரித்துத் திருப்தி காணாது தவிக்கின்றனர்.

" அந்தமின் ஒளியின் சீரால், அறுமுகம் படைத்த பண்பால் "என்றும்,

" அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின் காறும் எண்ணிலா ஊழிகாலம் எத்திறம் நோக்கினாலும் கண்ணினால் அடங்காதுன்னில் கருத்தினால் அடங்காது" என்றார் பின்னும்,

" எண்டரு விழிகள் யாக்கை எங்கணும் படைத்தோர்க்கேனும் கண்டிட அநந்த கோடி கற்பமுங் கடக்குமன்றே," இன்னும் திருப்திகாணாது கச்சியப்பர் பின்னும் விளம்புகின்றார்,

" சீர்க்குமரேசன் கொண்ட திருப்பெரு வடிவந்தன்னில் ஏர்க்குறும் ஒளியும் சீரும் இளமையும் எழிலும் எல்லாம் ஆர்க்குள உலகில் அம்மா அற்புதத்தோடும் பல்கால் பார்க்கினும் தெவிட்டிற்றில்லை இன்னும் என் பார்வை தானும்" இவ்வளவு விவரித்தும் இன்னும் முடியவில்லை. அவர் வார்த்தைகள் தெவிட்டிற்றில்லை போலும், பின்னும்

"ஆயிரகோடி காமர் அழகெலாம் திரண்டொன்றாகி மேயின எனினும் செவ்வேள்
விமலமாம் சரணம் தன்னில் தூயநல் லெழிலுக் காற்றாது"

என்று திரும்பவும் கூறுகின்றார். கச்சியப்பர் கோலமாமஞ்ஞை மீது குலவிய குமரன் மேனியழகு, அடிமுதல் முடிவரை காண்பிக்கிறார்.

அருணகிரிநாதர் ஆறுமுகம் படைத்த செம்மலின் ஒவ்வொரு முகத்திற்கும் இலக்கணம் வரைகிறார்,

மயிலேறி விளையாடு முகமே, ஈசனுக்கு ஞானம் உபதேசித்த முகம், அடியார் வினைகள் களையும் முகமும், குன்று பிளக்க வேல் கொண்ட முகமும், எதிர்க்கும் சூரரை வெல்லும் முகமும், வள்ளியின் அன்பை ஏற்கும் முகமும், என்று ஆறுமுகங்களையும் போற்றுகின்றார்.

அருணகிரிக்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே நக்கீரர் செந்தில் பதி வாழ் முருகனின் ஆறு முகங்களின் இயல்பைக் கூறுகின்றார்.

"மாயிருஞாலம் மருவின்றி விளங்கப்
பல்கதிர் விரித்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலியின் உவந்து வரங்கொடுத்தன்றே;
ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழா அ
அந்தனர் வேள்வி ஓர்க் கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசை விளக்கும்மே:
ஒருமுகம்
செறுநர்த் தேய்த்து செல்சமம் உருக்கிக்
கறுவு கொள் நெஞ்சமோடு களம்
வேட்டன்றே, ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே"

அதாவது உலகத்தின் இருளும் துயரும் நீக்கியும், உள்ளன்போடு வழிபடுவோருக்கு வரம் கொடுத்தும், முறை தவறாத யாகங்களை ஏற்றும், வேத சாஸ்திரங்களின் உட்கருத்துக்களை விளங்கியும், வீர மனத்துடன் தீமைகளை நீக்கியும் சூரவர் கொடி வள்ளியின் அன்பை ஏற்கவும் ஆறுமுகங்களையுடையார் என்று தெளிவிக்கிறார்.

முருகன் வள்ளியை ஆட்கொண்ட இடம் கதிர்காமம். மற்றெல்லாக் கோயில்களிலும் உருவமூர்த்தியாய் தரிசனம் தருகின்றார். கதிர்காமத்தில் மட்டுமே, எதிரிலாத பக்தி தனையுடைய வள்ளியின் உள்ளத்தில் குடி கொண்ட உருவற்ற பக்தி வடிவாகி விடுகிறான் முருகன்.

உருவாய் அருவாய் அருள்வாய் குகனே!
"மருவுமடியார்கள் மனதில் விளையாடும்
மரகத மயூரப் பெருமாள்"

அடியார் அன்புருவாய் ... ங்கே விளங்குகின்றார். முருகன் பதிகள் இந்துக்கள் வாழ் நாடெங்கும் உண்டு. அவற்றுள்ளும் தென்னாட்டின் கண்ணே பெரும்பான்மையாக உண்டு. இவைகளெல்லாவற்றிலும் ஆறுபடை வீடுகள் அவருக்கு மிக உகர்ந்தவை. ஆயினும் இவை யாவற்றிலும் பார்க்க, வள்ளியின் இதயத்தில் குடிகொண்டு அருவமாய் வசிக்கும் கதிர்காமமே, தலைசிறந்தது. இப்பதியில் வாழ் குமரன் முருகன் அற்புதங்கள் "சொல்லவும் பெரிதே."

---

''முருகன்' 'முருகன்' என்பது தமிழ்நாட்டில் வழங்குகிற வெகு சிறப்பான பெயர்.

'முருகன்' என்றாலும்'' 'அழகானவன்' என்றும், இளமை நலம் மாறாத சௌந்தர்யம்வாய்ந்தவன் என்பதே அர்த்தம்.

அழகு என்றால் அது வெறும் சரீர அழகா? அருளின் அழகுதான் இப்படி தேக காந்தியாக வந்திருக்கிறது. பரமேசுவரன் அம்பாள் சம்பந்தத்தோடு இப்படிக் குமாரனாக ஆவிர்பவித்தபோது வீரம், ஞானம், சௌந்தர்யம் இவற்றோடு அருளிலும் அதிகப் பிரகாசத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார். ஸத்—சித்—ஆனந்தம் என்று சொல்வார்கள். அதுதான் பரம் பொருள். இதிலே ஸத் (இருப்பு) பரமேசுவரன், இருக்கிறோம் என்பதை உணர்ந்து சக்தியைக் காட்டுகிற 'சித்' அம்பாள்; இப்படி உணர்ந்ததில் பேரானந்தம் பிறக்கிறது. இந்த ஆனந்தமே சுப்பிரமணியர். சிவம் என்ற மங்களமும் அம்பாள் என்கிற காருண்யமும் கலந்தபரம உத்கிருஷ்டமான ஸ்தானம் அவர். சச்சிதானந்தத்தையே 'சோமாஸ்கந்தர்' என்று சிவாலயங்களில் எல்லாம் வைத்து உற்சவம் நடத்துகிறோம்.

— காஞ்சி பெரியவாள்

# இந்து சமய மலர்ச்சி

—வ. சிவராசசிங்கம் B. A. (Hons)—

நாம் இன்று வாழ்வது விஞ்ஞான யுகம். வாழ்க்கையினை அபிவிருத்தி செய்வதற்கு, வேண்டிய சௌகரியங்களை ஆக்கிக் கொள்வதற்கு விஞ்ஞானம் எத்தனையோ வகைகளில் உதவியுள்ளது. விஞ்ஞானம் நமக்கு உதவிக்கு வராத துறையே இல்லையெனலாம். நாம் இருந்த இடத்தில் இருந்து கொண்டே நமக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வித்துக் கொள்ள எந்திர மனிதனையே உருவாக்குவது சாத்தியம், இவ்வளவு வசதிகள், சௌகரியங்கள் இருந்தும் கூட நாகரிகம் அடைந்துள்ளதாகக் கூறப்படும் நாடுகளில் குறிப்பாக மேலை நாடுகளில் வாழ்கின்ற மக்களில் பெரும்பாலார் மனநிறைவில்லாத, நிம்மதியில்லாத வாழ்க்கையே நடத்திக்கொண்டிருக்கிறார். அவர்களில் ஏராளமான இளைஞர்கள் அமைதி வேண்டி, கிழக்கு நோக்கிப் படையெடுப்பது கண்கூடு, இத்தகைய மன அமைதியின்மைக்குக் காரணம் இன்றைய மக்கள் எதிலும் உறுதியான நம்பிக்கையற்றவர்களாகக் காணப்படுகிறார்கள் என்னலாம். சிறப்பாக மக்களிடையே சமய நம்பிக்கை அருகத் தொடங்கியுள்ளது.

சமய நம்பிக்கை இழப்புக்கு விஞ்ஞான அறிவு வளர்ச்சியே முக்கிய காரணம் எனச் சிலர் கருதுவர். விஞ்ஞான அறிவு விருத்தி இருவகையில் சமய நம்பிக்கை இழப்புக்குக் காரணமாயது. ஒன்று; கண்டு அறியப்படுவதும் உற்று உணரப்படுவதுமாகிய பொருட்களே உண்மையானவை; பொறிகளினால் உணரப்படுவனவே பொருள்கள்; அவற்றுக்கு அப்பால் உள்ளனவாகக் கூறப்படுவனவெல்லாம் பிரமையே என்ற சடவாதம், இரண்டு; விஞ்ஞான அறிவு வளர்ச்சியால் தோன்றியுள்ள தொழில் நுட்ப நாகரிகத்தின் செல்வாக்கு. இச்செல்வாக்கினால் மனிதனின் தனித்தன்மையும் சிந்தனைத் தெளிவும் பறிக்கப்பட்டுவிட்டன என்று கூறலாம். கல்வி வளர்ச்சிக்கு உதவவல்லனவாகக் கருதப்படும் வானொலி, சினிமா போன்ற வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள், மக்களிடையே பகுத்தறிவாற்றலைச் குன்றச் செய்து 'மந்தைப் புத்தி'யை வளர்ப்பனவாக விளங்குகின்றன. மிதமிஞ்சிய சனப்பெருக்கமும், தாபன ரீதியான சிந்தனைச் செயற்பாடுகளும் மட்டற்ற வெகுஜனக் கிளர்ச்சிகளும் எல்லாம் தொழில் நுட்ப அபிவிருத்தியின் விளைவுகளே. இத்தகைய சூழ்நிலையில் அன்பு, பரிவு, பரோபகாரம், ஒற்றுமை முதலிய தனிமனிதப்பண்புகள் சிதறடிக்கப்படுகின்றன. இம்மானிடப் பண்புகள் இல்லாத உள்ளத்தில் சமய உணர்வுக்கு இடமேது?

மக்களிடையே சமய உணர்வு குன்றியதற்குக் காரணம் விஞ்ஞான வளர்ச்சி மட்டுமன்று. சமயத்தை மக்கள் அனுசரிக்கும் பாங்கில் காணப்படும் தவறுகளும், காரணமாயுள்ளன. மக்கள் தம் வாழ்க்கையில் மேற்போக்கில் சமயத்தின்பால் விசுவாச உணர்வுடையவர்களாயும் அந்தரங்கத்தில் அதற்கு முரணாகவும் ஒழுகி வருகின்றனர். சமயத்தைப் பின்பற்றுவதாகக் கூறுவோர், சமயச் சடங்குகளை அனுட்டிக்கின்றனரேயன்றிச் சமய வாழ்வு வாழ்வதில்லை. தனிமனிதன் முதல் அரசுவரை இப்போலித்தன்மை நிலவக் காண்கிறோம். அனைத்துச் சமயங்களும் அன்பையும் அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்டனவே. ஆயினும் எத்தனை நாடுகளில் இவை விசுவாசமாகப் பின்பற்றப்படுகின்றன?

மனிதனின் ஈடேற்றத்துக்கென அமைந்த சமயம் அவன் வாழும் சமுகத்தின் மாற்றத்துக்கும் வளர்ச்சிக்குமேற்ப நெகிழ்ந்து வளர்ந்து செல்லாத, பழைய பிடிவாதப் போக்கில் நிற்பதாலும், வலுவிழந்து ஆதரவு குன்றப் பெறுகிறது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் வாழ்க்கையில், எத்தனையோ வசதிகள் ஏற்பட்டுள்ளன. இவ்வசதிகளை அனுபவிப்பது சமய வாழ்வுக்கு ஒவ்வாது எனச் சில சமயவாதிகள் பேதுறல் உறுவர். அன்றியும் இசை, ஓவியம், நடனம் முதலிய லளித கலைகள், சமய வாழ்வுக்கு ஊறு விளைப்பன என்ற தூய்மைவாதிகளின் தவறான கொள்கையாலும் சமணம் போன்ற சமயங்கள் குன்றியதைச் சரித்திரம் காட்டும்,

போர், இனக்கிளர்ச்சி போன்றவை தோன்றிச் சமுகத்தைச் சீரழிக்கும் காலத்தில் இழைக்கப்படும் கொடுமைகள் பற்றி சில மதத் தலைவர்கள், மௌனம் சாதிப்பதும், இதைவிட மோசமாக, அரசுக்குச் சார்பாக, நீதிக்கண் கொண்டு நோக்காது பிரசாரம் செய்வதும் உண்டு. இத்தகைய செயல்களால், மக்கள் மதபோதனையாளரிடத்தும் மதத்தின்பாலும் நம்பிக்கை இழத்தல் இயல்பே.

மக்களிடையே நம்பிக்கைத் தளர்ச்சியேற்பட மேற்போந்த காரணங்கள் ஏதுவாயின என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. வரலாற்றுச் சமயங்களில் நம்பிக்கை இழந்த மக்கள் புதுப்புதுக் கோட்பாடுகளைப் பின்பற்றத் தலைப்படுதல் இயல்பு. மக்கள் ஏதாவது

கொள்கையைப் பின்பற்றுமல் இருக்க முடிவதில்லை. ஏனெனில் நம்பிக்கை என்பது மக்களது இயல்பூக்கங்களில் ஒன்று. ஒன்றை விட்டால் இன்னொன்றைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

19 ஆம், நூற்றுண்டில் சடவாதத்தின் தாக்கத்தால் மதத்தில் நம்பிக்கை இழக்கத் தொடங்கிய சனங்கள், மக்கள்வாதம் போன்ற புதிய கோட்பாடுகளில் ஈடுபடத் தொடங்கினர். இவற்றுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது பொதுவுடமைக் கோட்பாடு. பொதுவுடைமை, சமயக் கருத்து எதனையும் அடிப்படையாகக்கொண்டதன்று. ஆனல் மதத்தில் மக்கள் எவ்வளவு விசுவாசம் உடையவர்களானுர்களோ அவ்வளவுக்கு இக்கோட்பாட்டில் மக்கள், இறுகிய நம்பிக்கை கொண்டுள்ளவராய் விளங்கினர். எனினும் காலப் போக்கில் இதன் பாலும் மக்கள் நம்பிக்கை இழக்கத் தலைப்படுவர் என எதிர்பார்க்கலாம். மக்களிடையே சமத்துவம் பொருள் வசதி, சௌகரிய வாழ்வு என்றின்னவற்றை ஏற்படுத்திய அளவில், பொதுவுடைமையை மக்கள் வரவேற்றனர். ஆனல் மக்களது தனிமனித உணர்வு, உண்மை நாட்டம், ஆன்மவிசாரம் என்றின்ன பண்புகளுக்குப் பொதுவுடைமைக் கோட்பாடு மதிப்பளிக்கவில்லை. எவ்வளவு தான் நன்மைகள் பயப்பதாக இருந்தாலும் சர்வாதிபத்தியமுடைய கொள்கை நெடுநாளைக்கு நிலைத்திருக்க முடியாது. மனிதனுடைய நுண்ணுய்வுத் திறனைச் சிறைப்படுத்தும் சமயமாயினும் பிறகொள்கையாயினும் மக்களினுல் ஒரு காலத்தில் ஒதுக்கப்பட்டே தீரும். பொதுவுடைமையில் காணப்படும் இன்னொரு முக்கிய குறை யாதெனில், எல்லார் இடத்தும் அன்பு செலுத்தப்படவேண்டுமெனச் சமயம் வலியுறுத்துவதாகியிருக்க, பகைவர் பால் விரோதத்தையும் வெறுப்பையும் வளர்க்க வேண்டுமென்ற கொள்கையையுடையதாய்ப் பொதுவுடைமை விளங்குகிறது. இச்காரணங்களால் பொதுவுடைமையின் செல்வாக்கு அதிகம் நிலைத்திருக்காது என நம்பப்படுகிறது. மனிதன் உணவு, உடை உறையுள் என்ற அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு விட்டால் நிறைவு பெறுகிறுன் என்று சொல்வதற்கு இல்லை. அவனுக்கு ஆன்மவேட்கை எனவும் ஒரு தேவையுண்டு. சமயத்துக்கு மாற்றுக உள்ள பொதுவுடைமை போன்ற கொள்கைகள் அவனது ஆன்மவேட்கையைத் தணிப்பனவாக இல்லை. ஆதலின் மக்கள் இக்கொள்கைகள்பால் நம்பிக்கையிழக்கவே செய்வர்.

இத்தகைய சூழ்நிலையில், இன்று பல பேரறிஞர்கள் கீழைத்தேயச் சமயங்களில் ஆர்வம் காட்டி வருகிறுர்கள். குறிப்பாகச்சைவசமயத்தின்பால் பல மேனுட்டு மக்களின் கவனம் திரும்பியுள்ளது. நாகரிகங்களுள் மிகப்பெரும் பழமை வாய்ந்ததெனக் கொள்ளப்படும் மொகஞ்சதாரோவில் விளங்கிய திராவிட நாகரிக காலந்தொட்டு இன்றுவரை, பெரும்பாலான வரலாற்றுச் சமயங்கள் அருகிவிட, சைவசமயம் நிலைத்திருக்கிறதென்றுல், அதற்குக் காரணம் காலப் போக்கினை அனுசரித்துச் சமுதாயங்களில் ஏற்படும் மாற்றங்களுக்குத் தக அதன் கருத்துக்களை விருத்தி செய்தும் வளம்படுத்தியும் நெகிழ்வுடையதாய் வளரும் இயல்பினை இச் சமயம் கொண்டிருந்தமையே எனலாம். துன்பங்களிலிருந்து விடுபட்டு உயிர் ஆனந்த நிலையினை அடைவதற்கு "இதுவே சாதனம், இதனையே பின்பற்று" எனப் பிடிவாதமாகக் கூருமல், மக்களின் மனப்பக்குவத்திற்கும் தகுதிக்குமேற்ப, இறையருளின்பத்தை எய்துவதற்கு கிரியா மார்க்கம், பக்தி மார்க்கம், யோகமார்க்கம், ஞானமார்க்கம் என்றின்ன வேறுபட்ட மார்க்கங்களை வகுத்துள்ளமையும் சைவ சமயத்தின் அழியா நிலைக்குப் பிறிதோர் முக்கிய காரணம் எனலாம்.

இவற்றுள் பக்தி மார்க்கம், பண்டிதரும் பாமரரும் பெரியோரும் சிறியோரும் ஆகிய எவராலும் எளிதாகப் பின்பற்றப்படத்தக்கது. இதன்வழி, இறைவன் பால் தன்னை அர்ப்பணித்து அவனது திருவுள்ளக்கிடக்கைக்குத் தன்னை முற்றுக ஆளாக்கிக் கொள்ளும் பக்தன் ஆன்மிகத்தின் உறைவிடமான இதய சுத்தியாலும் இடையருப் பிரார்த்தனையாலும், சுயநலம் துறந்து, இறையருளில் திளைக்கூடுகிறுன். இவ்வாறே ஏனைய மார்க்கங்களும் மேற்கொள்ளுவார் பக்குவத்திற்கேற்ப விரும்பிய பயனை அடையத்துணை நிற்கின்றன.

உயரிய இம்மார்க்கங்கள் உண்மையால், சைவ நெறியில் குறைகளே இல்லை எனக் கூறியதாகாது. சைவ நீதியில் சாதி வேறுபாடுகளுக்கு இடமேயில்லையாயினும், அத்னைப் பின்பற்றும் நெறியில், எவ்வாறே இப்பேதங்கள் இடையிற் புகுந்து கொண்டன. சாதிப்பாகுபாடு என்னும் சமூக விரோதக்கறை இடைக்காலத்தில் சமயத்தின்மீது தொற்றிக் கொண்டதாயினும் அது அறவே அகற்றப்படல் வேண்டும். இனி நாம் கைக்கொள்ளும் சமயச் சடங்குகள், அனுட்டானங்களிலும் தவறுகள் இல்லாமல் இல்லை. சான்றுக, இறைவனை அபிடேகித்தற்கான பஞ்சகௌவியங்களுள் கோசலமும் கோமயமும் இடம் பெற்றுள்ளமை சிந்திக்க வேண்டிய ஒன்று. இவ்விரு கழிவுப் பொருள்களும் உயரிய திரவியங்களுள் சேர்க்கத் தக்கவையாகப் பகுத்தறிவுப் பார்வைக்குத் தோதன்றுதல் கூடுமோ? இன்னேரன்ன தவறுகளை நாம் சிந்தனைக் கண்கொண்டு நோக்கிச் சீர்திருத்தம் செய்வது அவசியமெனக் காணின், அதனை மேற்கொள்வது சமயத்துக்குத் புத்துயிர் அளித்து மலர்ச்சியினை ஏற்படுத்தற்குத் துணைபுரியும். மதக் கோட்பாடுகள் மக்களால் ஆக்கப்பட்டன ஆதலின், வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்வதால் இழுக்கொன்றுமில்லை.

(இக்கட்டுரை தத்துவ மேதை ராதாக்கிருஷ்ணனின் 'Recovery of Faith' என்ற நூலை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்றது.)

# நாட்டியத்தின் ஆன்மிக அடிப்படை

ஸ்ரீமதி ருக்மிணி தேவி

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவன்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

நம் பாரத நாட்டில் மிகவும் புராதனமானதும், சிறப்பு மிக்கதும் நாட்டியக் கலையாகும். எனக்குத் தெரிந்த வரையில் பாரதம் தான் இக்கலைக்குத் தேசிய வாழ்விலும், தெய்வீக வாழ்விலும் உன்னத இடத்தை அளித்திருக்கின்றது. இந்தப் புனிதக் கலையின் முன் ஏற்றத்தாழ்வு கிடையாது. இந்தக்கலை எல்லோருக்கும பொதுவானதாகும். நாட்டிய அரங்கிற்குப் "பொது" என்ற பெயரும் உண்டு. இந்தக் கலைக்கு உணர்ச்சியும், உற்சாகமும், எடுத்துக் காட்டும் ஒப்பற்ற இறைவனிடமிருந்தே தோன்றுவனவாகும். கடவுளின் அம்சமாகிய ஒவ்வொருவரும் இந்த நாட்டியக் கலையில் ஈடுபடவேண்டும். இந்தக் கலை நாட்டுக்கு மட்டும் உரியதன்று. உலகம் முழுவதுக்குமே சிறப்பாக அமைந்துள்ளது. இந்தக் கலை உண்மையில் நிரந்தரமானது. அழிவற்றது. கடல் நீரில் பலவித வண்ணங்களுடன் ஒளிவிடும் சூரியகிரணம் போன்றது கலையின் உண்மை உருவத்திற்குச் சூழ்நிலை மிகவும் முக்கியம் அந்தச் சூழ்நிலையையே தேசிய வாழ்க்கை என்கின்றோம். நம் இந்தியாவில் நாட்டியமும் பிற கலைகளும் தெய்வீகத் தத்துவமாக அமைந்துள்ளன. இந்திய நாகரிகத்தில் இது ஒரு ஒப்பற்ற தனிச் சிறப்பாகும். நம்மால் மிகவும் உயர்ந்தவற்றை அறிய முடியுமானால் மிகவும் தாழ்ந்தவற்றையும் அறியமுடியும். ஏனெனில் இரண்டும் ஒன்றுதும்.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் தான் நாட்டியக் கலையின் பாரம்பரியம் நம் நாட்டில் நிலவி வருகின்றது. நாட்டியம் மட்டுமே தனிக்கலை ஆகாது. உடலின் மூலமாக எல்லாக் கலைகளையும் இணைப்பது நாட்டியம் ஆடும். உண்மையில் உடலின் தன்மை கலைக்கு உடன்பட்டாலும் அது தாமச இயல்பை உடையது. அதன் உள்ளுணர்வை வெளிப்படுத்தும் தன்மையையே நாம் நாட்டியம் என்கின்றோம். எனவே உடலும், உணர்ச்சியும் நாட்டியத்தைத் தோற்றுவிக்கின்றன.

உணர்ச்சி எவ்விதம் தோன்றுகின்றது. நாட்டியம் விரைவில் வளைந்து கொடுக்கும் தன்மையால் பாதிக்கப்படுகின்றது. இதைத் தூண்டுவது ஒலியாகும். சங்கீதத்தில் ஒலி, அசைவு மூலம் தன் இயல்பை விளக்குகின்றது. யோகியர்க்கும் பரம யோகியான நடராஜ மூர்த்தத்திலிருந்து இவை அற்புதமாக மக்களுக்கு உணர்த்தப் படுகின்றன. அவனிடம் எத்தகைய ஞானமும், கலைகளும் ஒன்று சேர்ந்து குடிகொண்டிருக்கின்றன!

நாட்டிய உணர்வு நாகரிக மக்களிடமும் அநாகரிக மக்களிடமும் இருப்பதைக் காண்கிறோம். நாட்டியம் எல்லாருக்கும் இன்பமளிக்கும் கலையாக மாறும்போது அதனிடம் தெய்வத் தன்மை ஏற்படுகின்றது. எல்லாச் சுவையினருக்கும் இந்தக் கலை இன்பமளிக்கும். நாட்டியத்தில் சங்கீத வித்வான் அனுபவிக்கும் இசை உண்டு.' நாட்டியமே உடலுக்குச் சங்கீதமாக அமைகின்றது. சங்கீதமும்,'சாகித்தியமும் இசையும் பிறவாத்தியங்களின் உதவியோடு சேர்ந்தால் அது முழுமையான சங்கீதம் என்று கூறப்படுகிறது. சங்கீதத்தில் நாட்டியம் உள்ளது போல நாட்டியத்தில் சங்கீதம் இருக்கின்றது. சங்கீத உணர்ச்சியின்றி நாட்டியம் இயங்க முடியாது. ஏனெனில் சங்கீதமே உயர்ந்த உணர்ச்சி பாவங்களுக்கு இயல்பாகவும், அசைவுகளாலும், அபிநயத்தாலும் அதன் இருப்பிடமாகின்றது. சங்கீதத்தை கை முதலிய அபிநயத்தாலும், முகபாவத்தாலும் மற்ற அங்க அசைவினாலும் தெரியப்படுத்துவதன் மூலம், நாட்டியம் ஆடுபவர் மற்றொரு கலையை வெளிப்படுத்துகின்றார். அதுவே நாட்டியம் அல்லது நாடகக்கலையாகும். பின்னர் நாட்டியமாடுபவர் கதைசொல்பவராகவும் நடிப்பவராகவும் மாறுகின்றார். கதையைச் சொல்வதற்கு நாடகத்திலுள்ள ஒரு பாத்திரத்தை விளக்குவதற்கும் ஆடை முதலிய வேடங்களே ஒரு அபிநயமாகும். இது நான்கு முக்கிய பிரிவுள்ள நாட்டியத்திற்கு ஓர் அம்சமாகும்.

தனியாக ஆடும் பரத நாட்டியத்தில் நிருத்யம் ஆடுபவனும் கதை சொல்வான். தவிர நாட்டியத்திற்கேற்றவாறு ஆடைகளும் அணிகலன்களும் அணிந்துகொள்வான். பகட்டின்றிச் சாதாரண ஆடைகளையே அணிவான். ஆனால் நாட்டியம் ஆடுபவன் அழகாக இருப்பதன்றித் தான் கூறும் கதை பிறரை வசீகரிக்கச் செய்யும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். அவனுடைய கலை நாட்டிய உருவத்தில் உள்ள சங்கீதமே ஆகும். அவனிடத்தில் ஒவ்வோர் உணர்ச்சியும் ஒவ்வோர் பாத்திரமும் அடங்கியுள்ளன. நாட்டிய நாடகத்தில் நடனமாடுபவர் ஒரு தனியான பாத்திரமாக இருந்தால் ஆடையின் தன்மை ஒரு

சத்தை அல்லது அடிப்படையான ஒரு பாவத்தை விவரிக்கும் உண்மையாக விளக்குவதற்கு தன்னுடைய அனுபவமே சாதனமாக உள்ளது. இது தெய்வீக வாழ்க்கையின் முன்னேற்றத்தைத் தெளிவாக விளக்கும்.

ஆகவே நாட்டியம் மற்றைய கலைகளை ஒருங்கிணைக்கும் பாலமாகும். சித்திரத்திற்கு வண்ணம் பூசுபவர் வண்ணத்தையும் அழகையுமே நோக்கிக் கொண்டிருப்பார். சிற்பக்கலை நிபுணர் அழகான வடிவம் உருவாக்குவதையே இலட்சியமாகக் கொண்டிருப்பார். நடிகர் வாழ்க்கையின் பிரதிபலிப்பைத் தோற்றுவிப்பார். இசை வாணர்களும் கவிஞர்களும் பாடலின் தன்மையைக் கவனிப்பார்கள். உடலையும் ஆன்மாவையும் அர்ப்பணம் செய்து மேற்குறிப்பிட்ட தகுதிகள் ஒரு நாட்டியக்காரனுக்கு இருக்குமாகின் அவனே நடராஜ தத்துவத்தின் உணர்வு ஆகி விடுவான். அவனுடைய அங்கங்களாக, அங்கங்களின் அசைவுகளாக, உலகம் இயங்குவதாக விவரிக்கின்றனர். அவன் ஆடை அணிகலன்கள் (அஹார்யம்) நிலாவும் நட்சத்திரங்களுமாகும். சிவமே சாத்வீகத்தின் உண்மை உணர்வின் ரசமாகி விடுகின்றது. அவனிடம் எல்லாம் ஒன்றாக இருக்கின்றன. அவனிடமிருந்தே எல்லாம் தெய்வீக உணர்வுடன் தேன்றுகின்றன. இதுவே நாட்டியம் எனப்படும். இதுவே நம்முடைய பாரம்பரியமாகும்.

இந்தக் கண்ணோட்டத்தில் நாம் இன்னும் இந்தியாவில் உண்மையான நாட்டியத்தைக் காணலாம். பரத நாட்டியமே இந்தியாவிலுள்ள எல்லா நடனத்துக்கும் வேரும், மூலமும் ஆகும். இந்தியாவில் எல்லா நாட்டியமும் பரத நாட்டியத்தின் சாரமே ஆகும். ஆனால் ஒரு சாரார் மட்டும் அந்தக் கலைக்குப் பரத நாட்டியமென்று பேர் வைத்துள்ளனர். பரத முனிவருடைய நாட்டிய சாஸ்திரமே மிகவும் பழமையான ஆதார நூலாகும். தென்னிந்தியாவில் தஞ்சாவூர் பரத நாட்டியக் கலையின் பள்ளியென்று அறியப்பட்டாலும் காஞ்சிபுரமும், பிற இடங்களும் இந்தக் கலையை அதற்குச் சமமாகப் பயிற்சி பெறும் பெருமை பெற்றவையாகும். ஒவ்வொரு கோவிலிலும் எல்லாச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் நாட்டியம் இடம் பெற்றிருந்தது. இந்தக்கலை உடற்கவர்ச்சியை மட்டும் கருதித் தெய்வீக நிலையை மறந்துவிட்டதால் அழியக்கூடிய நிலையில் இருந்தது. ஆனால், உலகம் யாரைப் புறக்கணித்ததோ அவாகளின் பக்தியினாலும், நாட்டியத்தின்பால் உள்ள உண்மைத் தன்மையாலும் இந்தக் கலை அழியாமற் பாதுகாக்கப் பெற்றது.

இந்தியர்கள் மனோபாவத்தில் பாத்திர இயல்பும், நாட்டியமும் இணைந்தே செல்கின்றன. உண்மையில் அவை இரண்டும் ஒன்றே. ஒன்றில் ஒன்று உட்படாமல் இயங்க இயலாது. இறைவன் இறைவியின் வேடங்கள் புனைவதே ஒருவனைத் தெய்வீக முள்ளவனாக்குகின்றது. இந்திய நாட்டியம் தெய்வீகம் பொருந்தியுள்ளதால் அது ஆன்மீக வளர்ச்சிக்குப் பொருத்தமாக உள்ளது. பாவங்களின் மூலம் ஒருவன் கதைகளில் காணும் கடவுளின் தன்மையைச் சித்திரித்துக் காட்டுகின்றான். இந்திய மேதைகள் மனிதப்பண்பே தெய்வம் என்றும் தெய்வீகத் தன்மையே மனித இயல்பு என்றும் காட்டியுள்ளனர். எனவே இறைவனும், இறைவியும் புராணங்களில் மனிதனைப் போல வாழ்ந்து பேசுகின்றனர். இவ்வாறு இந்தியா முழுதும் நாட்டியம் இருந்து வருகின்றது. தஞ்சாவூரில் பாகவதர்களின் (ஆண் நடிகர்கள்) நாட்டிய நாடகமும், ஆந்திர நாட்டில் குச்சிப்புடியும், மலையாளத்தில் சாக்கியார் கூத்தும் இன்னும் நிலவி வருகின்றன. இவற்றின் மூலமாகவும், இன்னும் கேரளத்தில் நிலவி வரும் கதகளி மூலமாகவும் சமயமும்' தத்துவமும், கலையும் வாழ்ந்து வருகின்றன.

நாம் நம்முடைய பரம்பரைச் செல்வத்தை மறந்துவிட்டபடியால் கலைச்செல்வம் ஏறக்குறைய மறையும் நிலைக்கு வந்துவிட்டது. இன்று அந்தக் கலையின் சிறப்புக்குத் திடீர் என விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, மக்கள் எங்கு பார்த்தாலும் நாட்டியக்கலை பற்றியே சிந்திக்கவும், பேசவும் ஆரம்பித்துள்ளனர். நாட்டியம் நம் வாழ்வின் முன்னேற்ற சாதனமாக இருப்பதால் ஒரு தெளிவான மாறுதல் இந்த நாட்டியக் கலையில் ஏற்படவேண்டும். இந்தியக் கலைகள் பொதுவாகக் கீழ்நிலையுற்று வருகின்றன. அநாகரிகமான பண்பாடற்ற அம்சங்களை இந்தக் கலைகளில் புகுத்தி வருகின்றனர். சாதாரணமாக இராமாயண மகாபாரதக் கலைகளைக் கொண்ட நாட்டியங்களே அநாகரிகமாக நடிக்கப் பெற்று வருகின்றன. சில சமயங்களில் மிகவும் ஆபாசமாகவும் நடிக்கப் பெறுகின்றன. கடினமாக உழைத்து நல்ல யோசனை செய்து பக்தியுடன் நாட்டியங்களை உருவாக்க வேண்டும். பக்தி இன்மையால் ஒழுங்கு இல்லை. அதனால் இந்தக் கலையின் சிறப்பு அம்சங்கள் கைவிடப் பட்டுள்ளன. இதனால் உணாச்சி பாவமே இல்லை என்னும் முடிவு ஏற்படுகின்றது. உள்ளிருந்து பொங்கிவரும் உணர்ச்சிகளுக்குப் பதிலாக வெளியே இருந்து பெறும் உற்சாகத்தை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. இதனால் விமரிசனத்தின் தரமே குறைந்து போகின்றது. இன்றைய கலை அன்னியர்களைப் பார்த்துக் காப்பி அடிக்க வேண்டியிருக்கின்றது. உண்மையான கலை பிறரிடம் இருந்து தோன்றாது. தன்னுள் இயல்பாகவே தோன்ற வேண்டும். ஆழமான கிணற்றிலிருந்து புதிய நீர் ஊற்றுக்கள் எப்படித் தோன்றுமோ அதே போலப் புதிய புதிய இலட்சியங்களும், எண்ணங்களும், நோக்கங்களும் தனக்குள்ளே தோன்ற வேண்டும். நமது பாரத தேசம் நடனத்தை ஆனந்த வடிவாகக் கருதுகின்றது. அதனால்தான் நடராஜப் பெருமானின் நடனத்தை ஆனந்தத் தாண்டவம் என்கின்றோம். இதுவே யோகிகளின் ஆனந்தம். யோகிகளின் தன்மை எவ்வாறு உள்ளது? தன் உடலை மறந்த ஒருவரே யோகியாவார். அந்தத்

'தன்னை மறக்கும் நிலை' வெறுப்பினால் ஏற்படவில்லை. தன்னையே தன் வயப்படுத்தும் சக்தியினால் ஏற்பட்டதாகும். உடலுக்கு நன்கு பயிற்சியளிப்பதன் மூலம் பக்குவப்படுத்திய பிறகே ஒருவன் அதை மறக்கின்றான். ஒரு கலை மற்றொரு கலையை மறைப்பதன் தத்துவமே இது தான். எனவே நடனமும் தன்னை மறக்கச் செய்வதால் ஒரு யோகம் என்று கூறப்படுகிறது. நாடோடிக் கலைகளிற்கூட ஆனந்தம் வெளிப்படுத்தப்படுகிறது. இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் நாடோடிக் கலைகள் இருக்கின்றன. தனியாக ஆடும் கலையாகவும், கூட்டாக ஆடும் கலையாகவும், நாட்டிய நாடகமாகவும் அவை இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் வாழ்க்கையின் தனித் தன்மையைச் சுற்றியுள்ள சூழ் நிலையைப் பற்றிய நினைப்புகளை ஒவ்வொரு வகையில் பிரதிபலிக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொன்றிலிருந்து மாறுபட்டுள்ளது. குஜராத்தில் கர்ப, ராசலீலை கேரளத்தில் கைகொட்டிக் களி, தமிழ்நாட்டில் கும்மி, கோலாட்டம் அஸ்ஸாம் ஒரிசாவில் கிராமிய நடனங்கள். ஒவ்வொருவனின் சிந்தனைநிலைக்கும் ஏற்ற வண்ணம் நாட்டியம் தாழ்ந்த நிலையிலிருப்பவரிலிருந்து உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்கும், குழந்தைப் பருவத்தினருக்கும் வயதுவந்த பருவத்தினருக்கும் சங்கீத இயக்க மூலம் இந்தக் கலை நாட்டில் நிரப்பப்படுகின்றது. இந்துக்கள் இந்து மதத்தின் சாரம் எது என்பதை எப்போது உணர்கின்றார்களோ அப்போது தான் கலை புத்துயிர் பெற்றுப் பழைய உயர்ந்த நிலை எய்தும். நாட்டியம் பரிசுத்தமான நிலையில் மக்களுக்கு மீண்டும் கிடைக்கும். நாட்டியம் புத்துயிர் பெற முயற்சி செய்யப் படுகின்றது. இந்த முயற்சி வெற்றிகரமாகத் தொடர நாம் இந்தக் கலையின் ஆன்மிகச் செய்தியை உணர்ந்து கலையை நாம் வாழ்வின் ஒரு பகுதியாக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய உண்மையான வாழ்க்கைக் கலைக்குத் தொண்டாற்றத் தொடங்கும் இந்தியா எழில் மிக்க நாடாக விளங்கும். இந்தக் கலையே முனிவர்கள், மனிதத் தன்மையின் பாதுகாவலர்கள் அளிக்கும் செய்தியைச் சுமக்கும் சரியான சாதனமாகும்.

# ஆலயத்துள் நுழைவது போல

மகத்தானதோர் ஆலயம் போல் நிர்மாணிக்கப்பட்ட பரதக் கச்சேரிக் கிராமத்தில் அலாரிப்பு என்ற கோபுர வாயில் வழியே பிரவேசித்து ஜதிஸ்வரம் என்ற அர்த்தமண்டபத்தையும் சப்தம் என்ற மகா மண்டபத்தையும் கடந்து வந்தால் புனிதத்திலும் புனிதமான தெய்வ சந்நிதானத்தில் வர்ணம் வருகிறது. லய ஜதிகளைக் கொட்டவும், பால அபிநயங்களைப் பொழியவும் விஸ்தாரமாக இடம் கொடுக்கும் சந்நிதானம் அது. நடியானவள் தன் மனோதர்மத்துக்கும் நாட்டிய தாமத்துக்கும் பூரண இடம் கொடுத்துத் தன்னில் தானே நிறைந்து திளைப்பதற்கு வர்ணமே விரிந்து விரிந்து இடமளிக்கிறது.

இதன் பின் பதங்கள், சந்நிதியிலிருந்து கர்ப்பக் கிருகத்துக்குள்ளேயே புகுந்தவுடன் ஏற்படும் ஓர் அடக்கம், குளிர்ச்சி, அமைதி இந்தப் பதங்களுக்கு அபிநயம் புரியும் போது ஏற்படுகிறது. சந்நிதானத்தின் வெளிச்சுற்றிலே இருந்த விஸ்தாரமும் ஜாஜ்வல்யமும் கருவறைக்குள் அடங்கி விடுவதுபோல், வர்ணத்தின் லயக் கொழிப்புகளும் அடங்கி நெஞ்சைக் கவ்வும் இசைப்பாடலோடு அபிநயம் இங்கே இழைந்து வருகிறது. அடுக்குத் தீபாராதனைகளும் மேள தாளங்களும் நின்று, ஆண்டவன் பக்கத்தில் வெறும் மறை மந்திரங்கள் மட்டும் ஓதப்படுவது போன்ற ஒரு கட்டம் பதங்கள் ஆடும் பகுதி. பிறகு இறுதியாக இறைவனுக்கு நேர் முன்னரே ஓரளவு கோலாகலத்துடன் கர்ப்பூர ஆரத்தி காட்டுவதுபோல், லய நயம் மிக்க தில்லானா வருகிறது. முடிவாக, புறத்தில் இவ்வளவு வழிபாடும் பெற்ற இறைவனை அகத்துள் இறக்கிக் கொள்வதுபோல், விருத்தமாக அமைத்த பக்திப்பாடல் ஒன்றை அபிநயிப்பது பத்ததி.

—பாலசரஸ்வதி.

# இஸ்லாம் காட்டும் ஆத்மீக விடுதலை

**Dr. K. M. P. முகம்மது காசிம், Ph. D.,**
FOUNDER PRESIDENT, PERFECT PEACE LODGE
**P. O. Box 11, Veyangoda, Ceylon.**

இன்று நாம் விந்தை நிறைந்த புது யுகத்தில் வாழ்கின்றோம். மனிதனின் விஞ்ஞான அறிவு இப் பூமண்டலத்தைச் சுற்றி பறந்து திருப்தியடையாது, சந்திரனை நோக்கி பிரயாணமாகி, அங்கே தங்குவதற்குரிய முயற்சியில் வெகு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஆனால் விஞ்ஞான சகாப்தத்தில் வாழுகிறோம் என்று பெருமிதம் கொள்ளும் இன்றைய மனிதனின் தினசரி வாழ்வு அமைதியிழந்து காணப்படுகிறது, காரணம்? புலன்களுக்கு மயக்கமூட்டும் பல நூதனப் பொருட்கள் அவனது சிந்தனையைக் குலைக்கச் செய்து அவனது கவனத்தை சிதறடிப்பதிலேயே சதா வேலை செய்துகொண்டிருக்கின்றன, இக் கவர்ச்சிப் பிடியினின்றும் முற்றிலும் விடுதலை பெற்றுத் தெளிவுகாண வேண்டுமானால், மனதின் அடிப்படைப் பாகங்களில் அதன் மர்மமான இரகசியத்தை அறியும் ஆற்றலை மனிதன் அவசியம் பெறவேண்டியதிருக்கிறது.

மனிதன் வாழ்க்கையில் வளர்ச்சி பெற்று, மலர்ச்சி அடைய வேண்டுமானால், அறிவுத் துறையிலே மட்டும் ஆக்கம் கண்டு, ஆற்றல் எய்தினால் போதாது. அன்பெனும் பண்புக் கலையிலே பரவசமெய்தி, அருளென்னும் தெய்வீக வழியிலே நின்று உயர்வுபெறவேண்டும். ஞான விழிப்பின் ரகசியம் ஐம்புல இச்சைகளின் பிடியினின்றும் நீங்கி, அந்தகாரத்திற்கும் அறியாமைக்கும் ஆதாரயாகிய அந்தரங்க உள் மனதின விசித்திர விளையாட்டை ஆழ்ந்த தியானத்தினால் சதா விளங்குவதேயாகும்.

ஆத்மீக விடுதலையை அடைய சிறந்ததோர் மார்க்கம் தியானமே, இஸ்லாம் போதிக்கும் உயரிய நெறி என்ன வெனில் ஒரு மனிதன் தன்னை சம்பூர்ணமாக இறைவனிடம ஒப்புவித்து சரணடைவதேயாகும். உலக இச்சைகளின் பிடியிலிருந்து விடுபட்டு, சடசம்பந்தமான மட்டரக தொடர்புகளிலிருந்தும் முற்றிலும் நீங்கப் பெற்று, பரிசுத்த இதயத்துடன் இறைதியானத்தில் மூழ்குவதே உண்மையான இஸ்லாமிய வாழ்வாகும். மனிதனின் அகம் முற்றிலும் ஆண்டவனை நோக்கி அந்தரங்க சுத்தியுடன் இறை தியானத்தில் ஈடுபடாதவரை இஸ்லாம் காட்டும் ஆத்மீக விடுதலையை அனுபவிக்க முடியாது. மனதிலே ஆசைகள் யாவும் சுத்த சூனியமாகி சும்மாயிருக்கும் நிலைதனிலே அறிவுமயமாக ஆனந்தமயமாக உணரப்படுவதே ஆத்மீக விடுதலை.

துக்கமயமாக, சோகம் கலந்து, துயர்வுகள் மேலிட்டு கவலைகளின் சுமைகளினால் கலங்கி என்ன செய்வதென்று அறியாது ஏங்கித் தடுமாறும் இன்றைய நவீன மனிதனுக்கு தியான மார்க்கமே சிறந்த வழிகாட்டி. தியானம் என்பது கண்மூடி, வாய் பொத்தி, கைகளைக் கட்டிக் கொண்டு, செயலற்றிருக்கும் சோம்பேறி நிலையல்ல, அல்லது சமுதாய தொடர்புகளிலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டு காட்டிலே கடுமையான விரதங்கள் பூண்டு வரட்சியாக வாழ்வதுமல்ல.

உலகில் தோன்றிய சமயங்கள் யாவும் மனிதனை தெய்வீக நிலைக்கு உயர்த்திச் செல்லும் மார்க்கங்களேயாகும். எதிலும் அசையாது மயங்காது எல்லா நிலைகளிலும் கற்பனை கடந்த மோனததில், ஆனந்தமயமாக ஆத்மீக உணர்வெளியில் மனிதனை உயர்த்தி செல்வதே சமயங்களின் புனிதக் கடமையாகும். மனிதனின் சிந்தனை வட்டத்திற்கு அப்பால் இருக்கும் நிலை வெறும் சூனியம் என்று எண்ணுவது ஆத்மீக அனுபவத்திற்கு ஒவ்வாதது. ஏனெனில் மனங் கடந்த மகத்தான நிலையில் எண்ணங்கள் யாவும் ஓய்ந்த விடத்தில்தான் தியானம் ஆரம்பமாகிறது. அந்த உன்னத உயர்வான அசைவற்ற நிலையிலேதான் ஆத்மீக அறிவு பிரகாசிக்கிறது. அந்த ஆழ்ந்த அமைதியான தியான நிலையே தெய்வீக ஞானத்தை அடைய நேரான வழி. இங்குதான் மனிதன் இறைவனிடம் ஒன்று பட்டு ஐக்கியமாகிடும் முக்தி நிலை கூடுகிறது. இந்த எல்லையற்ற ஏகாந்தப் பரவச நிலையிலேதான் மனிதன் நிரந்தரமான சாந்தியையும், நீங்காத இன்பத்தையும். உண்மையான ஆத்மீக விடுதலையையும் பெற முடியும். அந்த நிலைக்கு மனிதனை அழைத்துச் செல்வதே இஸ்லாத்தின் முக்கிய நோக்கமாகும்.

# A COMMONWEALTH OF GOD

*Thiru S. Ramakrishnan*

Hinduism is not a religion or a dogma but a comprehensive, co-operative, complementary, ever-pulsating and selfrevitalising way of life. From time immemorial, it has thrown up a grand *perennial procession* of God-men and Godwomen to cleanse, purify and revitalise this Way of Lifet

In the modern age too, a galaxy of distinguished men and women from Raja Ram Mohan Roy to Dr. S. Radhakrishnan have, with unwearied and unflinching constancy, carried on the purificatory function of ridding Hinduism of its dross and the maladies caused by the intrusion of certain crude and corrupt practices like caste and untouchability.

Maharshi Debendranath Tagore and Kesab Chandra Sen, who founded the Brahmo Samaj; Paramahamsa Sri Ramakrishna and Swami Vivekananda who establishsd the Ramakrishna Math and Mission; Swami Dayananda Saraswathi and the Arya Samaj; Mahadev Govind Ranade and the Prarthana Samaj; Swami Shraddananda and the Gurugul Kangdi; Mahatma Gandhi and the Harijan Sevak Sangh; Maharshi Sri Ramana and the Tiruvannamalai Ashram; Mahayogi Sri Aurobindo and the Aurowille. Swami Sivanada and the Divine Life Society, Swami Chinmayananda and the Chinmaya Mission, are some of the shining examples of this continuous cleansing, purifying and revitalising process of our times.

II

It needs no savant to say that the caste system has nothing to do with the Hindu religion as such. As Shri Frank Moraes, till recently Editor-in-chief* recently put it, caste and untouchability merely constitute the "social ethos", which is vastly defferent from the religious ethos.

To bracket Hindu ethos with some of its dying social ethos is like linking the rose with the thorns.

What then is the Hindu ethos, the real religious ethos behind it?

Hindu scriptures, as is well-known, belong to two categories-the *Srutis* like the *Vedas* and the *Upanishads* and *Smritis* like the celebrated *Yagnavalkya Smriti* and *Manu Smriti*.

The *Srutis* embody the fundamental immutable Truths. The *Smritis* are nothing but codes of conduct for a particular period of time and must needs change as the social milien changes.

when India switched over to democracy after the British rule, did not sweeping changes take place in the political field? In the same way, as Hindu reformers have always asserted, some of the *Smritis* warranted drastic changes and would continue to need change;

The late Mahamahopadhyaya Dr. P. V. Kane in the *magnum opus*, the *History of Dharmasastra*, has established, much to the chagrin of some of the obscurantist high-priests of our religion, that no Hindu scripture has enjoined the tonsuring of widows. After all, it was a social custom that had acerered into society by compulsion of development and events, to meet a special danger at a particular period when India was subjugated and subjected to repeated waves of military conqueets and our young widows were victims of wholesale molestation and rape at the hands of the iconoclasic overlords and conquerors.

With subsequent changes in social and political conditions, when the life and honour of our womenfolk were no longer threatened with such dangers, the practice of tonsuring young widows is no more in vogue Many more changes have taken place in the Hindu Way of Life by law, by custom and by social reform. The Hindu code enacted by Free India at the passionate insistence of Pandit Jawaharlal Nehru is the latest concerted effort in the chain of social reforms.

III

*Bhagavad Gita*, one of the sacred scriptures of India, which is held in Veneration by even some of the greatest Western minds, never

speaks of caste as something that comes with birth. It merely refers to caste as denoting the diverse qualities and actions of different types of persons. Lord Sri Krishna Himself has said in the Gita that He created the caste system on the basis of quality and action-*guna* and *karma*.

*Chaturvarnyam maya sristam, gunakarmavibhagashah*: "By Me were created the four castes in accordance with the qualities-*gunā*, and actions-*karma*".

Accoring to this all people whose profession is service would belong to the category of Sudras and those engaged in ware fare and statecraft would be Kshatriyas.

And Mahatma Gandhi, by birth a Bania, would eminently be fit to be considered as a Brahmin by his *karma* and *guna* as he painstakingly developed all the qualities of a Brahmin and perseveringly observed the *Mahavratas*: *ahimsya* (Nonvioleuce), *satea* (non-stealing), *brahmacharya* (self-control) and *aparigraha* (non-possession).

Even in the āge-old *Upanishads* there is a beautiful story which testifies to the fact that caste was determined by the character of a man and not according to his birth.

The story is told of one boy, Jabala, who goes to a Rishi to be initiated into religious learning. The teacher asks him about his parentage and the boy is able to give the name of his mother alone, Direcied by the Guru, he goes to his mother and asks the name of his father. The mother directs the boy to tell the Guru that even she was in no position to give the answer as she, in younger days, had served in many houses!

The Guru, an ancient Rishi, is astounded by this bold utterance of truth. He declared: "Verily Jabala, you are indeed a Brahmin, for none other than a Brahmin would have been bold euough to utter such a damaging truth about himself".

It is indeed a fact that with the passage of time, like all other instituions, the caste system too became corrupt and overladen with dust and filth. Birth became the determinative factor for establishing one's caste and the caste system did become a handmaid of social exploitation in Hindu society. But thanks to the sustained work of generations of enlightened Hindus the once seemingly impregnable edifice of the caste barrier is crumbling and the day is not far off when all the evils arising from it will be eradicated.

Today, everyone knows that the caste system was nothing but the old guild system whereby the son took up the father's profession. And its greatest economic evil, even in those days, was that it eliminated competition and accounted for a lot of undeserved privilege, lethargy and nepotism.

This theoretical aspect apart, today none pleads for the retention of the caste system in its present degenerate form.

In fact, the caste system has never been a bar for God-realisation. Some of India's greatest saints, who were and are still being vēnerated even by the highest of Brahmins, have sprung from among the socalled untouchables. The names of such saints are legion.

Hinduism's *Sannyasi Parampara* is the world's oldest continuing Ascetic Order, founded some 5000 years ago by Rishi Yagnavalkya and perhaps the forgotten fact about Hinduism is that *Sannyasins* who are in the highest ladder of spiritual evolution, have no caste at all. Even when a Brahmin takes to *Sannyas*, he has to give up his caste, sacred thread and all. What does this signify? It proves that God-realisation and caste system have nothing in common with each other. The former is the goal of Hinduism and the latter just a social relic.

IV

How was it that long before the influence of Greece and Rome came to be felt, and even before Egypt and Babylon made their impact on the world scene, India had emerged as the glorious rising sun of the East, shedding light, lusture and vigour round the Universe? How was it that India has to this day continued its record of ceaseless creative striving?

What is the alchemy that enabled India to maintain this unbroken continuity of purposive life, great tradition and noble endeavour? what is the catālyst that helped our ancestors to build up and bequeath to us a unique cultural heritage, endowed with the inherent strength to withstand the ravages of time? What is the magnetic power that made our motherland the perennial source of inspiration to people, not only in India but in many other countries, to pursue excellence, to cultivate the art of creative life?

Undoubtedly it is the message of Hindu religion and philosophy.

V

The core and kernel of Hindu rēligion, the secret of its survival, the source of its astonishing

vitality and the storehouse of its inexhaustible recupērative powers are:

(a) its widely tolerant, non-dogmatic, non-conformist and all-pervasive outlook;

(b) its catholicity and freedom from fossilised thinking;

(c) its legions of known and unknown votāries, in the past in the present, conscientiously striving to live up to its greāt ideals, at the same time welcoming noblē thoughts from all sides; Aano *bhadrah kratavo vantu visvatah*;

(d) its refusal to go about forcing or tempting other people to desert their religion and enter its own fold;

(e) its inherent vitality add inner power of assimilation, elimination and adjustment according to changing times;

(f) its maintaining the ancient tradition of veneration for the sentinels of religion and culture of all climes. Where else in this wide world would the high priet of a different faith receive the tumultuous welcome which was accorded to Pope paul VI in Bombay in 1964? Eighty per cent of the vast concourse which thronged to welcome him, listen to him and see him off comprised Hindus. They looked upon the Catholic Pontiff not as a leader of another faith, but as one who stood for ethical and spiritual values, a man of God;

(g) its p.ecious heritage of an uitalising cleansing, purificatory and revntervals process initiated at frequent intervals by its own vigilant ādherents and the reintegration of fundamental values to suit the changing needs of the times, In the context of the ever-recurring unfoldment of greater and greater mysteries of naturebut always tied to the sheet-anchor of etbical and spiritual values;

(h) its belief that all ltving being are enfranchised in the Commonweath of God, and are brothers and kinsmen Comprising one fraternity.

The inner core of Hinduism is that man is not merely a Creature of Time. *Sanatana Dharma* stānds for *Rita*—the majesty of the Moral Law. It looks upon the whole Universe as being under the purview of the Moral Law; that all men are brothers and childreu of the Immortal-*Amritasya Putrah.*

VI

Hinduism is the latter-day name given to this very, very old but ever-young, vital and vibrant Way of Life. It existed long before the "founded" religions. It does not date back to a particular point of time.

It is the distilled essence of experiments with life and the cumulative life-experience of generations of *Rishis, Munis* ānd *Tapasvins.*

The ageless *Vēdas* are its source; *Vedo 'Khilo Dharmamulam* The Vedas and the Upanishads gave the first norms of creative life for mankind. With the passage of time, the *Kalpa Sutras*, the *Smritis*, the *Ramayana*, the *Mahabharata*, the *Puranas* and *Darshanas* moulded this Way of Life according to the particular *Yugadharma* and the exigencies of time, but never deviating from the basie concept of life.

That fs why, in spitē of its antiquity, Hindusium is not aging. That is why it is "momentous'., as many Western savents have affirmed. The reasons for its dēathlessness are peculiar to the universal message it spreads. In Hinduism we have a fine combination of the ideal of renunciation, Asked to dįfine Hinduism in two words, Swami Vivekanada said: *Pravritti* and *Nivritti*. We hāve hēre ā harmonious blending of action and contemplation.

Let not strangers be confused by the innumerable names of dieties and forms of worship enjoined by Hinduism, They ares scaffoldings of different designs to suit the need, of men and women of varying temperaments aptitudes and psychological stages, abounding in all societies. Even materialists and agnostics have been provided for. Every individual man, bird and beast and even insect hās a place in this scheme of life. The concept of the unity of life. is a puceliarity of Hinduism; and it envisages salvation not for human beings alone but for all the caeatures of god.

Noted philosoper C. E. M. Joad says: "Hinduism developed from the first a wide tolerence. Hindus do not proselytise: they do not lay exclusive claim to salvation. and they do not believe that God will be pleased by the wholesome slaughter of those of His creatures

whose beliefs are mistaken. As a result, Hinduism has been *less degraded than most religions by the anomaly of creed wars*".

Mahatma Gandhi, who exemplified the life of a true Hindu, who was a firm believer in *Sarva Dharma* Samanatva—equal respect for all religions—and one of the greatest crusaders for the eradication of untouchability, has stated in unmistakable terms why he was a Hindu. "I find Hinduism to be the most tolerant of all religions known to me. Its freedom from dogma makes a forcible appeal to one. Not being an exclusive rellgion, it euabels the followers of that faith not merely to respect all other religions but it also enables them to admire and assimilate whatever may be good in the other faiths".

Hinduism has always been and it will ever be. It is *anadi*, beginningless, *ananta*, endless and *Sanatana*, eternal as its name *Sanatana Dharma* or the Law Eternal proclaims.

---

# பழனி ஆண்டவர் அம்மானை

திரு. ரா முருகேசு கவிராயர்

1. பூவலயம் போற்றிப்புகழ் பழனிச் சண்முகனார்
கோவணமும் கையிலொரு கோல்கொண்ட ரம்மானை
கோவணமும் கைக்கோலும் கொண்டுள்ள ராமானால்
பாவலர் தாம்பாடப் பரிசுண்டோ வம்மானை
பாடினால் காலுக்குப் பஞ்சமில்லை அம்மானை

2. சங்கரற்கும் ஞானந்தரும் பழனிச் சண்முகனார்
மங்கை யிருவர்க்கு மணவாள ரம்மானை
மங்கை யிருவர்க்கு மணவாள ராமாயின்
பொங்குவதும் அங்கே பொருந்துமோ அம்மானை
பொருந்தா விடமெல்லாம் பொங்கல்தான் அம்மானை

3. சிலங் கமழும் திருப்பழனிச் சண்முகனார்
பால்மணக்கும் செவ்வாய்ப் பசுங்குழவி அம்மானை
பால்மணக்கும் செவ்வாய்ப் பசுங்குழவி யாமாகில்
வேல்வீர னென்பதற்கு வெற்றிஎன்ன அம்மானை
வெற்றியெல்லாம் மாவுருவை விட்டியதே அம்மானை

4. ஒம்வடிவக் கொண்ட உயர்பழனிச் சண்முகனார்
தாமரையா னுக்குத்தனி மருக னம்மானை
தாமரையா னுக்குத்தனி மருக னாமாகில்
சோமனொரு காவித் துணியன்றோ அம்மானை
துணிவிலையால் விதியை நொந்துசொல்வாரோ அம்மானை

5. கோபுரமே தங்கமயம் கொண்டான் பழனிமலை
மேவிநிற்கும் வேலன்மிகச் சமர்த்தன் அம்மானை
மேவிநிற்கும் வேலன்மிகச் சமர்த்தன் என்னிலவன்
மாய ரசவாத வல்லனோ அம்மானை
வாய்ப்பேச்சில் மாதங்கம் வரவழைப்பா னம்மானை

# கீதை: ஒரு நடைமுறைத் தத்துவம்

நா. சுப்பிரமணியம், எம். ஏ.
விரிவுரையாளர், தமிழ்த்துறை.
இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகம்.

**வா**ழ்க்கை துன்பங்கள் நிறைந்தது. துன்பங்களுக்கு அடிப்படை பிரச்சினைகள். பிரச்சினைகளின் ஊற்றுக்கண் முரன்பாடுகள் தெளிவின்மையிலிருந்து உற்பவிக்கின்றன. தெளிவின்மைக்கு அடிப்படையாயமைவது பற்று. எனவே பற்றை விடுபவன் துன்பங்களிலிருந்து விடுபடுவான் என்பது தர்க்கரீதியான முடிவு. எல்லாச் சமூகத்திற்கும் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய இந்த உண்மையை எடுத்து விளக்கிய தத்துவ முதனூல் பகவத்கீதை. இந்துசமயத்தின் முப்பெரும் முதனூல்களிலொன்றாகிய கீதை தத்துவத்தையும் சமயத்தையும் நடைமுறை வாழ்க்கையுடன் இணைத்த பெருமைக்குரியது. பரம்பொருளைப் பற்றியும் ஆன்மாவைப் பற்றியும், இவ்வுலகப் படைப்பைப் பற்றியும் ஆராய்வதில் ஈடுபட்ட இந்து தத்துவ நெறிகளின் மத்தியில் பகவத்கீதை தனிப் பெருமை பெற்றிருப்பதற்கான முதன்மையான காரணம் அதன் சமூகப் பயன்பாட்டு அம்சமேயாகும்.

துன்பம் சூழும் நேரத்திலேயே தத்துவ சிந்தனை ஊற்றெடுக்கின்றதென்பது அனுபவ உண்மை. வாழ்க்கையில் இன்பத்தின் அளவு சிறிதாகவும் துன்பத்தினது அளவு மிகப் பெரிதாகவும் உள்ளதை அனுபவத்தால் உணர்ந்த மனிதன் துன்பத்திலிருந்து விடுபட விரும்பினான். அவ்விருப்பத்தினடியாக ஊற்றெடுத்த சிந்தனை, புலன்களுக்கு விஷயமாகவுள்ள இந்த உலகத்திலிருந்து தன்னைப் பிரித்துணரும் நிலைக்கு இட்டுச் சென்றது. இன்ப துன்ப அனுபவங்கள் புறவுலகத் தொடர்புடைய சரீரத்திற்கேயுரியவை என்றும், சரீரத்தை உள்நின்று இயக்கும் சக்தியாகிய ஆத்மாவானது இவற்றால் தீண்டப்படாதது என்றும் கருதுவதன் மூலம் ஒருவகை 'விடுதலை' உணர்வு ஏற்பட்டது. இந்தக் கருத்தை உருவாக்கும் வகையில் உபநிடதங்கள் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. ஆயினும் அவை அந்த விடுதலையுணர்வை முதன்மைப் படுத்தாமல் ஆத்மாவைப் பற்றியும், பிரமத்தைப் பற்றியும் விளக்கம் தருவதில் அதிக கவனம் செலுத்தியமையால், மனித சமூகத்தின் அன்றாட நடைமுறைக்கு அதிகம் தொடர்பற்ற கருத்து முதல் வாதங்களாகவே அமைந்து விட்டன. இவ்வகையில் உபநிடதங்கள் தோற்றுவித்த அடிப்படையான கருத்தாகிய 'உடல்-ஆத்ம' வேறுபாட்டைத் தருக்கரீதியான வகையில் வளர்த்து மனிதனது அன்றாட நடைமுறை வாழ்க்கைக்குப் பயன் படக் கூடிய கருத்துக்களை முன்வைத்த முதற் பெருமை பகவத்கீதைக்கே உரியது எனலாம். பகவத்கீதையை "உபநிடதமாகிய பசுவின் பால்" என்று கூறியவர்களும், உபநிடத மகாவாக்கியமாகிய "தத்வமஸி"யின் விரிந்த விளக்கமே பகவத்கீதை என்றுகருதியவர்களும், பகவத்கீதை ஆற்றியுள்ள மேற்படிகருத்து வளர்ச்சிப் பணியையும் கவனத்திற் கொண்டே அவ்வாறு கூறியிருக்கலாம் என்பதற்கு ஐயமில்லை.

கீதை எழுந்த இடம் ஒரு போர்க்களம். இந்த உலகமே ஒரு போர்க்களந்தான். போர்க்களத்தில் முரண்பாடுகள் கொண்ட இரண்டு அணியினர் தத்தமது வல்லமையைக் காட்ட முயல்கிறார்சள். இவ்வுலகமாகிய போர்க்களத்தில் பல்வேறு முரண்பாடுகளைக் கொண்ட பல்வேறு அணியினர் உளரெனினும் இவர்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தில் அல்லது குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் இரண்டு அணிகளாகப் பிரிந்து கொள்கின்றனர். இவற்றில் ஒரு அணி சமூக நலனைக் கருத்திற் கொண்டு உண்மை, அறம் என்பவற்றைச் சார்ந்து நிற்பது மற்ற அணி சுயநலனைக் கருத்திற் கொண்டு பொய், சுரண்டல் ஆகியவற்றின் துணையோடு நிற்பது, இவ்விரண்டுக்கும் புறம்பாக 'நடுநிலை' வகிப்பதாக ஒருஅணி அமைய முடியாது. ஒரு விடயத்தில் நடுநிலை வகிப்பதாகக்கூறி ஒதுங்கி நிற்பவர்கள் உண்மையில் தமது சுயநலன்களைக் கருத்திற் கொண்டுள்ள காரணத்தால் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கி நிற்பவர்களேயாவர். இதனால் அவர்களும் சுயநலச் சார்பினராகவே அமைந்து விடுகின்றனர். நீதிக்கும் அநீதிக்குமிடையில் எவரும் வசிக்க முடியாது என்பதை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியம்.

அர்ச்சுனன் அறத்தின் சார்பில் போராட வந்தவன், போர்க்களத்தில் பந்தபாசம் அவனைப் பந்திக்கின்றது. போருக்கம் குன்றியது. வில்லைத் தூக்கி எறிந்துவிட்டுப் போர்க்களத்தை விட்டுத் தப்பி ஓட முயல்கிறான்.

அன்றாட வாழ்வில் நாம் காணும் பலர் அர்ச்சுனர்களே. சமூக நலன், நீதி, நேர்மை, ஏகாதிபத்திய எதிர்ப்பு என்றெல்லாம் முழங்கும் இவர்கள் நேருக்கு நேர் பிரச்சினை முகங்கொடுக்கும்போது பல்வேறு தற்காப்பு உத்திகளைக் கையாண்டு களத்திலிருந்து வெளியேறி விடுகின்றனர். சந்தர்ப்ப வாதமே அவர்களது

'நீதி' யாக அமைந்து விடுகின்றது. மேடையில் முழங்கியவர்களில் சிலர்...வீட்டுக்குள் ஒளிந்து கொள்கிறார்கள். சிலர் திடீரெனக் கட்சி மாறி விடுகிறார்கள். உண்மையான சமூக நலன் நோக்கினரில் ஒரு சிலரே பிரச்சினையைச் சுய நலக் கலப்பற்ற கடமையுணர்வுடன் அணுகுகின்றனர். இந்த மூவகையினரில் அர்ச்சுனன் முதல்வகையினன். உறவினரும் வணக்கத்துக் குரியவர்களும் நண்பர்களுமான எதிரணியினர் பலரையும் அர்ச்சுனன் இப்பொழுதுதான் முதன் முதலில் எதிர்க்கவந்துள்ளானா? இல்லை. இதற்குமுன் பலதடவை எதிர்க்குரல் எழுப்பிச் சபதம் புரிந்தவன்; போர்க்களத்தில் தோற்கடித்தவனுங்கூட. அப்படியானால் இப்பொழுது மட்டும இந்தப் பந்தபாச உணர்வுகள் ஏன் வந்து அறிவை மறைத்தன?

இதுதான் மனித இயல்பு, தனது சொந்த ஆளுமையைக் கட்டியெழுப்பிப் புகழடைய முயலும் ஒருவன் அதன் ஆரம்பக் கட்டத்தில் பற்று, பாசம் என்பவற்றால் பாதிக்கப்படாமல் தனது நோக்கத்திலே குறியாக இருக்க முடியும். தன்சுய புகழுக்காகத் தனது உறவினரையும் நண்பர்களையும் ஆசிரியன்மார்களையுங்கூட எதிர்க்கத் தயங்கமாட்டான். ஆனால் பொது விடயம் என்று வரும்போது இந்த எதிர்ப்புணர்வு வலியிழந்து உறவுணர்வும் "நல்ல பிள்ளை" என்ற பெயரெடுக்கும் ஆர்வமுமே மேலோங்கி நிற்கும். இந்த 'மனித இயல்' பின் வடிவே அர்ச்சுனன்.

அர்ச்சுனனுக்குப் போருக்கத்தை உண்டாக்குவதற்காகக் கண்ணன் நிறைஞான உபதேசமாகிய கீதையைப் போதிக்கின்றான் என்கின்றது மஹாபாரதம். சமூகநலனுக்குரிய பொது விடயத்திலே தன்னை அகப்படுத்திக் கொள்ளாமல் சுயநலன்களுக்காக மட்டும் வாழும் ஒவ்வொரு மனிதனையும் நோக்கிச் சமூகம் இட்ட கட்டளைதான் கீதை. இதை உணர்ந்து கொண்டால் கீதை எல்லாக் காலங்களுக்கும் எல்லா இடங்களுக்கும் பொருத்தமான தத்துவமாக அமையும் இயல்பை உணர முடியும்.

செயலைத் துறந்து தப்பியோடுவது கோழைத்தனம். செயலைப் புரிந்து கொண்டே அதன் பலனிலிருந்து விடுபட்டு நிற்பது அறிஞனின் இயல்பு, செயற் பலனைக் கருதாதவன் ஊக்கத்துடன் செயல் புரிய முடியுமா? என்ற வினா இங்கு எழுகின்றது. செயற்பலனைத் துறப்பது என்பது முற்றிலும் பயன் கருதாமல் செயல் புரிவது என்பது அல்ல. செயல் எதுவும் பயனற்றதாக அமைய முடியாது. அப்பயன் தன் ஒருவனுக்கே கிடைக்க வேண்டுமென்று கருதாமல் இருப்பதே 'செயலில் துறவு' ஆகும். தன் நலன் கருதாமல் சமூகம் பயன்பெறுவதற்காகக் கடமையாற்ற வேண்டும் என்பதே இதன் உட்கிடை. தன் நலன் கருதும் பொழுது பற்று உண்டாகி, அது துன்பத்துக்கு ஏதுவாகின்ற தென்பதை அடிப்படையாகக் கொண்டே துன்பமற்ற நல்வாழ்க்கைக்கான நடைமுறைத் தத்துவமான "பயன் கருதாத செயலை"க் கீதை போதிக்கின்றது.

"எல்லாக் கர்மங்களையும் என்பொருட்டுச் செய்வாயாக" என்றான் கண்ணன். ஆம் எல்லாக் கருமங்களையும் என்பொருட்டுச் செய்" என்று தனிமனிதனை நோக்கிக் கூறுகின்றது சமூகம். "ஜனதா—ஜனார்த்தனன்" என்பது போல மக்கள் சமூகத்தின் ஒருங்கிணைந்த வடிவமே பௌராணிகர் கண்ட கண்ணன்.

இதனைத் தெளிந்து கொண்டால் கீதை ஒரு நடைமுறைத் தத்துவம் என்பது புலனாகும்.

# உள்ளது ஒன்றே

(பிரதிஷ்ட பூஷணம் நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாத குருக்கள் அவர்கள்)

"சைவ சமயமே சமயம்" என்று பரவினால். பெரியோர்கள் கூறி இருக்கின்றபடி,

பலவகைப்பட்ட சமயத்தார்களின் கொள்கைகளையும் அவர்களது சமய உண்மைகளையும் தன்னுள் அடக்கி அவைகளுக்கு ஏற்ற சமாதானங்களையும் கூறி, சமயாதீதமாகிய சைவமே சிறந்தது எனப் பல நூல்கள் வாயிலாகவும், பெரியோர் வாயிலாகவும்; கற்றும் கேட்டுமிருக்கின்றோம். சைவம் வைணவம் இரண்டும், ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து இருக்கின்றன. "சிவஸ்ச. இருதயம் விஷ்ணும்—விஷ்ணுஸ்ச இருதயம்— சிவம், என்று கூறி இருக்கிறார்கள், ஆகவே சமய அடிப்படையில் வேற்றுமையற்ற சமயமே உண்மைச் சமயம். இவைகளை ஒன்றுபடுத்திக் காட்டவே இறைவன் அர்த்தநாரீஸ்வர வடிவம் வாடு உற்ற வடிவம் அருவுருவ வடிவம்—போன்ற பல வடிவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அரியும் சிவனும் ஒன்று என்ற கொள்கையும் சக்தி சிவம் ஒன்று என்ற கொள்கையும் ஒன்றே. சிவ சக்தி ஐக்கிய ரூபமாக இருக்கிறான். என்றெல்லாம் காண்கின்றோம். எனவே! ஏகம் சத் என்ற உண்மை புலனாகின்றது.

# என் உள்ளத்தே எழுகின்ற ஞாயிறே போன்று

டாக்டர் திருமதி இ. ஸ்ரீ ஸ்கந்தராஜா சிவயோகம்

நூல்களால் பெறும் அறிவு "அபர ஞானம்" என்றும், அவனருளே கண்ணாகக் கொண்டு காணும் அறிவு "பரஞானம்" என்றும் சொல்லப்படும். இறைவனை நேருக்கு நேர் கண்டறியும் பேற்றைப் பெற்றிருந்த நாவுக்கரசர், கண்டு, கேட்டு, உண்டுயிர்த்துற்றறியும் ஐம்புலனின்பத்தை இறைவன் திருவடியிலே கண்டார். அதற்கேற்ப "மாசில் வீணையைப்போல் செவிக்கின்பமும், வீங்கிழ வேனிலைப்போல் சுவைக்கின்பமும். மாலை மதியம் போல் காட்சிக்கின்பமும், வீசுதென்றலைப் போல் செவிக்கின்பமும், வண்டறைப் பொய்கையைப்போல் மூக்கிற்கின்பமும் ஒருங்கு சேர்ந்த அனுபவப் பெருக்கைத் தேவ தேவனும் பரமேஸ்வரனுடைய திருவடிகளில் காண்கின்றார்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை இணையடி நிழலே"

எத்தனை அழகாகவும், பக்திப் பரவசத்துடனும் வர்ணிக்கின்றார். தில்லையம்பலவன் திருக்கூத்து இத்தகைய பேரின்ப நிலையையே நல்கிறது.

சேக்கிழார் பெருமானும்

"ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி
அம்பலவன் தேனுந்து மலர்ப்பாதத்து
தமுதுண்டு"

என விளக்கியிருக்கிறார். இறைவன் திருவடியை ஆன்மா சென்று அடைகின்றது, அல்லது இறைவனே ஆன்மாவைத் தேடிவந்து தனது திருவடிகளில் சேர்த்துக் கொள்வார் என்பது பொருள் அன்று. பேரின்ப நிலையானது இறைவனது திருவடித்தியானத்தில் ஆன்மாவிருப்பதை உணர்வதுதான், நாமத்தை ஓதி ரூபத்தை மனக்கண்ணிற் காண்பதே வழிபாட்டின் சிறப்பம்சம். அவ்வகையில் சிந்தனை அடங்கப் பக்திப்பரவசத்தில் உளம் கசிந்து மெய்மறந்து, கண்ணீர் பெருக ஆனந்தக் கூத்தாடிய நிலையில் இறைவன் திருவடியைப்பற்றுதல் வேண்டும்.

"வெள்ளத்தாழ் விரிசடையாய்! விடையாய்! விண்ணோர் பெருமானே!
எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளம் தாழ் உறு புனலிற் கீழ்மேலாகிப்
பதைத்து உருகும் அவர் நிற்ப"

என்று மணிவாசப் பெருமான் தன் மனப்பக்குவத்தை எடுத்துக் காட்டுகின்றார். சித்தம் அடக்கிச் சிவமயம் ஆக்கும் மனோபக்குவத்தையும் இறைவனே முன் வினைப்பயனாக அருள்கிறான்.

"வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று,
போது நான் வினைக்கேடன் என்பாய் போல,
இனையன் யான் என்றுன்னை அறிவித்து
என்னை
ஆண்டு கொண்டெம்பிரான் ஆனைக்கு"

என்று திருப்பதிகத்தால் பக்குவப்பட்ட மனங்களுக்கு இறைவன் வலியத் தன்னைச் சுலபமாக உணர்விக்கின்றான் என்பதே அர்த்தம்.

அடியார் திருக்கூட்டம்

அடியார்க்கு அடியராய்த், தொண்டருக்குத் தொண்டராய் வாழ்வதைப் பெரும் பேறாகக் கருதுபவர் பக்தர்கள். சிவனடியாரையும் சிவனெனக் கருதுபவர்கள் உண்மைப் பக்தர்கள் அந்தகைய மனோபக்குவ நிலையுள்ளோர்களை அப்பர் பெருமான் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

"அங்கமெலாம் குறைந்தொழுகு தொழு
நோயராய்
ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும்
கங்கைவார் சடையக் கரந்தார்க்கு
அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும்
கடவுளாரே!"

நம் வாழ்க்கையிலே ஏழை வறியவர்பால் கருணையும் கனிவும் சாதித்து வந்தால் ஆணவமற்ற மனப்பான்மை எளிதில் கிட்டும். ஏழ்மையை அனுட்டித்தால் இத்தகைய மனோபக்குவ நிலையை அடையலாம். பொருளும், பொன்னும், போகமும் மாத்திரம் வேண்டி முயலாது, இறைவன் அருள் வேண்டி ஓயாது முயலுதல் வேண்டும்.

இத்தகைய மனோதத்துவம் இலகுவில் பெற்றுக் கொள்வதற்கு விரதங்கள் அனுட்டித்து வருவது நன்று. விரத காலங்களில் ஐம்புலன்களையும் அடக்கி, இறைவன் வசப்பட்டு

உள்ளம் தெளிந்து, அநேகர், சுபாவத்தில் கூட மாறுகின்றதை அவதானிக்கின்றோம்.

குரு சம்பந்தம்

சிவபரம் பொருளை அனுபவிப்பதற்கு முக்கியமானவை ஜீவகாருண்யம், பாச வைராக்கியம், பக்தி, ஆகியவை இவையை அடைவதற்கு முதல் கருவி சாதுக்கள் சார்பு. நித்தியமான அழியாத பேரின்பம் நம்பால் வரவேண்டும் ஆகில் அகம் புறம் முதலிய ஆசைகள் நின்று விடுபட வேண்டும். லௌகீக வாழ்வில் ஈனமான இழிவுடையதாகியபற்றை அகற்றி ஆன்மிகத் துறையில் ஈடுபடுதல் வேண்டும். ஊன்றி விசாரணை செய்யும் தன்மை, பங்கம் உற்றவர்களிடம் சேர்ந்தால், உருப்படுவதில்லை. எனினும் சாதுக்கள் சங்கமோ இத்தகைய மனோபக்குவ நிலையையும் சூழலையும் ஆட்சேபனையில்லாமல் ஏற்படுத்தும்.

சாதுக்களின் சம்பந்தம் ஏற்படுவதும் இறைவன் இட்ட ஆணைப்படியே. இவ்வமைப்பு இறை நிலைக்கு வித்திட்டுச் செல்லும் முதற் துணையாகும். சாதுக்கள் என்பது துறவிகளை மட்டும் குறிப்பதன்று. அன்பே வடிவம்; அருளே உயிர்; இன்பே உணவாகக் கொண்டவர்கள் சாதுக்கள். உண்மை அன்புடன் திருநீறு இடுபவர், வாயார மனமார ஈசன் புகழைப்பாடிக் கொள்பவர், மாலை தொடுப்பவர்கள், ஆலய சுத்தி செய்பவர்கள், எக்கருமத்தைச் செய்யுங்காலும் சிவசிந்தனையாய் இருப்பவர்களும் சாதுக்களென அழைக்கப்பட வேண்டியவர்கள்.

ஆன்ம பழசுக்களுக்குப் பதியாகிய சிவபெருமான் தன் அருள் வெள்ளம் பரவியமையால் பக்குவப்பட்ட மனக்கோயிலில் ஒப்பற்ற சுவையுடைய தேன் ஆறாகப் பாய்ந்து கொண்டு இருக்கிறார். சந்தர்ப்பம் ஏற்படுவதும் முன் வினைப்பயன்படியேயாம். ஜீவாரோக்யத்தைப் பேணுதலும் சாதுக்கள் வசப்பட்டு நற்போதனை பெறுவதும் "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்பதற்கு அமைய அவன் அருள் பாலித்தால் தான் பெற்றுக்கொள்ளலாம்.

சாதுக்கள் சங்கமே எவ்வகையாலும் பெறமுடியாத நன்மையை. நம்பால் நல்கி, நம்மை ஈடேற்றும் தன்மையது. அத்தகைய சாதுக்கள் இன்று இருந்தால் அவர்களை விடாமல் நாம் பற்றிக்கொள்ள வேண்டும். "அத்தகைய சிறப்பு வாய்ந்த சற்குரு ஸ்ரீ ஞானானந்த கிரி சுவாமிகள் நமக்கு அளித்த ஸ்ரீ ஹரிதாஸ் கிரி குருஜியை நம் குருதேவராய்ப் பெற்ற மகிமை அம்பலக் கூத்தனின் திருவருளே!

ராதே! கிருஷ்ணா!

---

# பழனிக்குப் புதிய அழகு

கவிஞர் திரு கண்ணதாசன்.

குன்றத்துப் பழனம் தேர்ந்தான்
குடும்பத்தின் நீங்கி வந்தான்
மன்றத்தில் குவிவார்க் கெல்லாம்
மனவிளக் கேற்றி வைத்தான்
அன்றந்தச் சேரன் தந்த
அழகிய கோவில் கொண்டு
நின்றனன் தண்ட பாணி
நீணிலம் காக்க வென்றே.

கழனியிற் செந்நெல் ஆட
காற்றுலாம் வயல்கள் ஊடே
உழவர்கள் தமிழிற் பாட
ஊரெல்லாம் முருகா என்று
இழையுமோர் கவிதை ஓட
எங்கணும் காண்பார் வந்த
பழனியின் தெய்வத் தோற்றம்
பக்தியின் திருநீ ரோட்டம்.

அரசினர் அமைத்து வைத்த
அறமன்றத் தார்இந் நாளில்
முருகனுக் கழகுஞ் சேர்த்தார்
முறைமுறை கல்வி தேர
பொருள்நிறை பள்ளி; மன்றம்
புதியன கண்டார்; கந்தன்
திருவருள் அவரைக் காக்கும்
தேசமும் புகழே பாடும்!

# பணிவு

சிவஞானவாரிதி கு. குருசாமி B. A.

பணிவு மனிதனுக்கு உயர்ந்த நிலையைக் கொடுக்கிறது. முற்றிய நெல் பணிவாக விளைந்து பயனைத்தருகிறது. பதர் நிமிர்ந்து நின்றாலும் ஒரு பயனும் தருவதில்லை. அது போலவே மனிதவாழ்வில், பணிவுள்ள அடக்கமான மனிதன் சமூகத்திற்குப் பயனுள்ளவனாக வாழ்கிறான். எமது வாழ்நாளிலே நாம் பயனுற்றவர்களாக வாழப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். வளைந்த மூங்கில் பல்லக்கிற்கு உதவுகிறது. வளைவதற்கு இடங் கொடாத மூங்கில் முறிந்து விடுகிறது. அதனால் எதற்கும் பயனற்றதாகிவிடுகிறது. இதே நிலையில் பிறந்து உண்டு உடுத்து உறங்கி மடிந்து விடும் மக்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். தனது வாழ்நாளிலே பிறருக்குப் உதவி செய்து பிறரால் நன்கு மதிக்கப் பெற்றுத் தனது வாழ்க்கையைப் பிரயோசன முள்ளதாக ஆக்கிக் கொண்டவர்களே என்றும் வாழ்ந்தவர்கள் ஆகின்றனர். பூதவுடல் மறைந்தாலும் புகழ் உடம்பு மனித இனம் உலகில் வாழும் காலம் வரை வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையை அடைகின்றனர். ஒரு சிலர் இப்படிப்பட்டவர்களையே சமுதாயம் வரவேற்கிறது. ஊது பத்தி தான் தன்னிலே எரிந்துக் கொண்டு பிறருக்கு நல்ல வாசனையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. உருவத்தால் அழியும் வரை நறுமணத்தையே பரப்பிக் கொண்டிருப்பது ஊதுபத்தியின் இயல்பாகத் திகழ்கிறது. இதே விதமாகத் தனது வாழ்க்கை முடியும் வரை பிறருக்கு உதவும் நிலையிலே வாழ்வதற்குப் பணிவு இன்றியமையாதது. தன்னம்பிக்கையுடன் தன்னால் கூடுமான வரை பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற உளக் கருத்து உடையவர்களாக வாழ்வதற்கு அகங்கார மமகாரங்கள் முற்றாக மறைந் தொழிதல் வேண்டும். நான், எனது என்னும் எண்ணங்கள் நம்மிடையே தலைதூக்கும் போது, பணிவுக்குப்பதிலாக ஆங்காரம் மேலோங்கும். எம்மையே பெரிதாக நினைக்கும் போது, பிறரை மதிக்கும் நிலை எமக்குக் கிட்டவும் வர மாட்டாது. இந்தப் பணிவு எண்ணம் நல்லொழுக்கத்தினை நாம் சிறுவயதிலிருந்தே பயின்று கொள்ளுதல் வேண்டும். இந்தப் பணிவு முதலிலே தாய் தந்தையாரிடத்திலேயே குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. தாய் தந்தையரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கப் பழகிக் கொள்ளும் குழந்தை பாடசாலைக்குப் போகத் தொடங்கிய பின், ஆசிரியருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் போது பணிவு வளரத் தொடங்கி அன்பாக மலர்கிறது. ஆசிரியரும் பணிவான மாணவனிடத்தில் அன்பாக இருக்கிறார். பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு வெளி உலகில் காலடி எடுத்து வைக்கும் போது பணிவு உடையவர்களாக இருக்கும் போது எல்லோருடைய அன்பையும் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு எமக்கு ஏற்படுகிறது. அதனால் உலகம் முழுவதும் எமக்கு உதவி செய்ய முன்வரும் சூழ் நிலையை நாமே தேடிக் கொள்ளுபவராக ஆகிவிடும் போது, நாம் நினைத்ததைச் செயற் படுத்தக் கூடிய செயல் வீரராக ஆகிவிடுவோம் அல்லவா?

உலகை எதிர்த்து நின்று பகைத்துக் கொள்வதனால் எமக்கு எவ்வித பயனும் உருவாவதில்லை. எமது வாழ்வு தனிப்பட்ட வாழ்வாக அமைவதில்லை. பலர் எமது வாழ்க்கையோடு தொடர்புடையவர்களாகவே இருக்கிறோம். எமக்குத் தேவையானவற்றை நாம் பலரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளும் நிலையில் வாழும் போது யார் யாருடன் நாம் தொடர்பு கொள்ளும் வகையில் எமது வாழ்க்கை அமைகிறதோ அவர்கள் எல்லோருடனும் பணிவாகவும் அன்புடையவர்களாகவும் வாழப் பழகிக் கொள்ளுவோமாயின், எமது வாழ்வு சிறப்புறும். எமது நாவே மிகச் சிறந்த உதாரணமாக அமைந்து விளங்குகிறது வலிமை வாய்ந்தவர்கள் நடுவே மென்மை வாய்ந்த நாவானது பலவிதமான வார்த்தைகளையும் பேசி பற்களாற் கடிபடாது சுழன்று சுழன்று வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டு சாமர்த்தியமாகப் பழகிக் கொள்வது அன்றாட வாழ்வில் நாம் பார்க்கும் அதிசயம் அல்லவா? கடுமையான இயல்புடைய மெது பற்கள் மிகவும் வன்மையான பதார்த்தங்களையும் கடித்துக் கொள்ளும் இயல்புடையதாயிருப்பினும் எமது வாழ்வு முடிவடையுமுன் இருமுறை கீழே வீழ்ந்து விடுகின்றன. 7 அல்லது 8 வயதிலே உதிரும் பற்கள் மீண்டும் முளைக்கின்றன. பின்னரும் வயது முதிரும்போது அவை வீழ்கின்றன. நாவானது மிகவும் மென்மையானதாக அமைந்து விடுவதனால் எமது வாழ்நாள் முடிவடையும் வரை எம்முடன் ஒட்டிக்கொண்டு வாழ்கிறது. இதை நினைவு படுத்துவோமாயின் வாழ்க்கையில் எல்லோரிடமும் மென்மையாகப் பழகும் இயல்பு பெற்றவர்களாக நாமும் வாழப் பழகிக் கொள்வோம். இனிய வார்த்தைகளைப் பேசி உலகம் முழுவதும் அன்புமயமாக அமைவதை நாம் காணலாம்.

# சரணாகதித் தத்துவம்

கே. வி. எஸ். வாஸ் M. A.

[முன்னாள் வீரகேசரி பிரதம ஆசிரியர்]

இந்து சமயத்திலே துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்று மூன்று விதமான கோட்பாடுகளிருக்கின்றன. சர்வேச்வரனான பரமாத்மா ஒருவன்தான் என்ற விஷயத்தில் இம் மூன்று கோட்பாடுகளுக்குமிடையில் கருத்துவேறுபாடு இல்லை. ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்குமிடையிலுள்ள உறவுமுறைகள் பற்றி மட்டுந்தான் கருத்து வேறுபாடு. இந்த கருத்து வேறுபாடுகளும் ஒரே வேத சூத்திரங்களுக்கு வெவ்வேறு விதமான உட்பொருள்களை உருவாக்கிக் கொண்டதினால் எழுந்தவைகளேயன்றி ஆதாரமான வேத சூத்திரங்களில் வேறுபாடுகள் கிடையாது. அத்வைதிகள் பெரும்பாலும் சைவர்கள். விசிஷ்டாத்வைதிகள் எல்லோருமே வைஷ்ணவர்கள். வேறுபாடுகளை விளக்குவது வாதப் பிரதிவாதங்களை வளர்க்குமாதலால், அதைத் தவிர்த்து வைஷ்ணவத்தின் மூலக் கோட்பாடுகளை மட்டுமே இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஸர்வதர்மான் பரித்யஜ்ய
மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ
மோக்ஷயிஷ்யாமி மா சுச.

கண்ணன் அருளிய கீதையின் கடைசி அத்தியாயமான பதினெட்டாம் அத்தியாயத்தில் உள்ள இந்த ஒரு சுலோகத்தில் ஸ்ரீவைஸ்ணவத்தின் முழுத்தத்துவமும் அடங்கியுள்ளதென்று கூறலாம். கீதை வேதங்களின் சாரம். அதில் மனுக்குலம் உய்வதற்கு எத்தனையோ மார்க்கங்களைச் சொல்லுகிறார் கண்ண பரமாத்மா. அந்த உபதேசங்களின் சாரத்தையெல்லாம் பிழிந்து எடுத்து, கடைசி அத்தியாயத்தில் தென்படும் மேற்படி சுலோகத்தில் தனது முடிவான, இறுதியான கருத்தை வெளியிடுகிறார் பகவான். இந்த முடிவான கருத்தே ஸ்ரீ வைஷ்ணவத்தின் ஆதார சுருதியாக, அடிப்படைக் கோட்பாடாக அமைந்துள்ளது.

ஸர்வதர்மான் பரித்யஜ்ய—சகல தர்மங்களையும் துறந்துவிட்டு; மாமேகம் சரணம் வ்ரஜ—என் ஒருவனையே சரண் அடைவாயாக; அப்படிச் செய்வாயானால் அஹம்த்வா ஸர்வ பாபேப்யோ—உன்னை எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவித்து; மோக்ஷயிஷ்யாமி மா சுச:—மோக்ஷத்தை உனக்கு அளிக்கிறேன் இதில் சந்தேகம் வேண்டாம். அதுதான் இந்த சுலோகத்தின் பொருள்.

என் ஒருவனிடமே பரிபூரணமாகச் சரண் அடைபவர்களைச் சகல பாபங்களிலிருந்தும் விடுவித்து மோக்ஷத்தை அளிப்பேன் என்று கூறுவதோடு நில்லாமல், மா சுச—இதில் சந்தேகமோ விசனமோ வேண்டாமென்றும் அறுதியிட்டுச் சொல்கிறார் பரமாத்மா. இத்தகைய பரிபூரண, நிபந்தனையற்ற சரணாகதியே ஸ்ரீ வைஷ்ணவத்தின் கருவூலம்.

எல்லாத் தருமங்களையும் விட்டு விட்டு கண்ணன் கூறுவதின் பொருள் ஒவ்வொருவரும் அவர்களது ஸ்வதர்மத்தைக் கைவிட்டு விடவேண்டுமென்பது பொருளல்ல. ஸ்வதர்மத்தைக் செய்யும் பொழுது அதையும் 'நான் செய்கிறேன்' என்ற எண்ணமில்லாமல் "அவன் செய்விக்கிறான்" என்ற திட நம்பிக்கையுடன் பலனைக் கருதாமல் ஈசுவர அர்ப்பணமாக எதையும் செய்யவேண்டும். அதாவது கருமத்தின் பலனைத் தியாகம் செய்து பலன்களை எதிர்பாராமல் எதையும் ஈசுவர அர்ப்பணமாகச் செய் என்கிறார் பரமாத்மா.

கர்மண்யேவாதி காரஸ் தே
மா பலேஷு கதா சந

உனக்கு கருமம் செய்ய மட்டும் தான் உரிமையுண்டு. அதற்குரிய பலனை எதிர்பார்க்க உரிமையில்லையென்று கண்ணன் கூறும் பொழுது, "உன் கடமை என்னை வழிபடுவது: என் கடமை அதற்குரிய பலனைக் கொடுப்பது; என் கடமையைச் செய்ய எனக்குத் தெரியும். அதைப்பற்றி நினைக்காமல் உன் கடமையைச் செய்" என்று அவர் அறிவுறுத்துகிறார். ஏன்?

பாபத்துக்கு எப்படிப் பந்தம் உண்டோ அதே போலப் புண்ணியத்துக்கும் பந்தம் உண்டு. பாபிகள் செய்த பாவத்தின் தன்மைக்கேற்ப தண்டனையை அனுபவித்து விட்டுத்திரும்பவும் பிறவியெடுக்கிறார்கள். அதே போல புண்ணிய பலனை எதிர்பார்த்துக் கருமமாற்றியவர்கள், புண்ணியத்தைச் சம்பாதித்து, அதற்குரிய சுகம் அனுபவித்து, புண்ணியம் தீர்ந்ததும் மறு ஜன்மம் எடுக்கிறார்கள். ஆக இரு சாராருக்கும் பிறவிக் கடலிலிருந்து முக்தி அல்லது விடுதலை

கிடைக்க வழியில்லை. அப்படியானால் பிறவிக் கடலைத் தாண்ட என்னதான் வழி!

இங்குதான் சரணாகதியின் மென்மை வெளியாகிறது. எதைச் செய்தாலும் அதற்குப் பலனை எதிர் பாராமலும் "நான் செய்கிறேன்" என்ற எண்ணமில்லாமலும்"என்னைக் கொண்டு அவன் செய்துகொள்கிறான்"என்ற எண்ணத்துடனும் பகவத் பிரீதிக்காக, ஈசுவர அர்ப்பணமாகச் செய்து, "உன்னைவிட்டால் எனக்கு வேறு கதியில்லை" என்ற திட நம்பிக்கையுடன் செய்யவேண்டும். உண்மையான பக்தன் எப்பொழுதும் இறைவனைச் சார்ந்தவன். அந்த பக்தன் யாசிப்பது இறைவனுக்கு என்றென்றும் அடிமை செய்வதேயன்றி அந்த இறைவன் கொடுக்கக்கூடிய சொர்ப்பப் பயன்களையல்ல. இப்படி எதையும் வேண்டாமல் இறைவா, நீயே எனக்கு வேண்டுமென்று அபயம் புகும் பக்தனை.

"அபயம் ஸரிவபூதெப்யோ
ததாம்யேதத் வ்ரதம் மம"

அபயமளித்து என்னுடன் சேர்த்துக் கொள்ளுவதுதான் என் விரதம் என்கிறார் பகவான். இதைப் பெரியாழ்வார் எத்தனை அழகாகச் சொல்லுகிறார் பாருங்கள்.

"எந்நாள் எம்பெருமான்
உந்தனுக் கடியோமென் றெழுத்துப்பட்ட
அந்நாளே அடியோங்கள் அடிக்குடில்
வீடுபெற்று உய்ந்தது காண்."

"சர்வேஸ்வரா! என்றைய தினம் நான் உன்னுடைய அடிமை என்று அடிமைச் சாசனம் என் வாழ்வில் எழுதப்படுகிறதோ அந்நாளே நான் முக்திபெற்று உய்யும் திருநாள்" என்கிறார் ஆழ்வார். தொண்டரடிப் பொடியாழ்வாரோ,

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம்
கொழுந்தே என்னும்
இச்சுவைத்தவிர யான் போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவைப் பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

என்று எம்பெருமானைத் தவிர வேறு எவரிடமும் எதுவும் வேண்டேன் என்கிறார். குலசேகராழ்வாரோ இன்னும் ஒரு அடிமேலே போய்,

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் சூழ
வான் ஆளும் செல்வமும் மண் அரசும்
நான் வேண்டேன்

"இந்திரலோகம், சந்திரலோகம், பூலோகம் முதலான சகல புவனங்களையும் இந்தா எடுத்துக்கொள் என்று நீ வாறி வழங்கினாலும் அவைகளை நான் ஏற்கமாட்டேன். ஏனெனில் எனக்கு வேண்டுவது உனக்குப் பணிபுரிவது ஒன்று தான். அது ஒன்று தான் எனக்கு வேண்டும்" என்று ஈசனிடம் வேண்டுகிறார் குலசேகரப் பெருமான்.

"பட்டமும் பதவியும் செல்வாக்கும் கொடாமல் தீராத துன்பங்களைக் கொடுத்துக் கொடுத்துக்கொண்டிருந்தால் உன்னை மறந்து விடுவேன், வெறுத்து ஒதுக்கி விடுவேன் என்று நினைக்கிறாயா?" என்று இறைவனிடம் ஒரு கேள்வியைப் போடுகிறார் குலசேகரர். அதற்கு அவரே பதிலும் சொல்லிவிடுகிறார்.

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல்கொள் நோயாளன் போல்

ஒரு நோயாளிக்கு வைத்தியன் சிகிச்சை செய்கையில் கத்தியால் சத்திர சிகிச்சை செய்கிறான்; தீயிட்டுச் சுடுகிறான். இதற்காக வைத்தியனிடம் நோயாளன் வெறுப்புக் கொள்ளுகிறானா? இல்லையே! எப்படியும் வைத்தியன் நம்மைக் குணப்படுத்திவிடுவான் என்ற நம்பிக்கையில் அவனிடம் அன்பு செலுத்துகிறான். அதே போல இறைவா, எனக்கு நீ என்ன துன்பம் கொடுத்தபோதிலும் என்னைப் பக்குவப்படுத்தி ஆட்கொள்ள நீ கையாளும் உபாயமாகவே அதைக் கருதுவேன்" என்கிறார் குலசேகரர். இத்தகைய பரிபூரண சரணாகதியே வைஷ்ணவத்தின் அடித்தளமாக அமைந்துள்ளதென்பது கவனிக்கத்தகுந்தது.

# பாத மஹிமை

(ஸ்வாமி பாத ஸேவாநந்தா)

## 1. ஒரு கதை

ஓர் ஊரில் ஒரு செம்படவன் (வலைஞன்) இருந்தான். மீன் பிடித்து விற்று ஜீவனம் பண்ணிவந்த அவன் பகவான்-நாராயணன் என்று ஒருவர் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்கவும், அவரைப்பற்றி அறியவும் ஆசைப்பட்டான். அவனுக்கு அவ்வாசையை நிறைவேற்றிக்கொள்ளும் வழியை அவ்வளவு சுலபமாகச் சொல்லிக் கொடுப்பவர் அங்கு யாரும் இல்லை. ஆனால் அவ்வூரில் ஒரு புரோஹிதர் வாழ்ந்து வந்தார். அவர் வேத சாஸ்திரங்களெல்லாம் நன்கு கற்றுணர்ந்தவர். பகவத் விஷயங்களைப் படிப்பின் மூலம் தெரிந்து கொண்டிருந்தவர். அவரிடம் சென்று அந்தச் செம்படவன் தனக்குப் பகவான் ஸ்ரீமந் நாராயணனைக் காட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டான். அவர் அந்த இழி குலத்தவனுக்குச் சொல்லல் தகாதெனக் கருதித் தட்டிக் கழிப்பதற்காக, "நீ ஒரு நூறு ரூபாய் பணம் சேகரித்துக் கொண்டு வந்து கொடு! உனக்கு அப்போது நான் பகவானைப் பற்றிச் சொல்லித் தருகிறேன்" எனச் சொல்லி அனுப்பி விட்டார். நூறு ரூபாய் சேகரிக்க அவனால் எங்கே முடியப் போகிறது என்று எண்ணியே அவர் அவ்வாறு சொல்லியனுப்பினார். ஆனால், அவன் அதில் அதி தீவிரமாக நின்று வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி மீன் பிடிக்கும் தொழிலிலேயே சில மாதங்களுக்குள் 100 ரூபாய் சேகரித்து எடுத்துக் கொண்டு வந்து அதே புரோஹிதரிடம் தந்து தனக்குப் பகவானைக் காட்டித் தரவேண்டுமெனக் கேட்டான். அப்பொழுதும் அவர் 'இவன் பகவானைக் காணத் தகுந்தவன் அல்லன்' எனக் கருதி அவன் தலையில் கவிழ்த்துக் கொண்டிருந்த மீன் பிடிக்கும் கூடையையே சுட்டிக்காட்டி, 'இதுதான் உனக்குப் பகவான்; போ!' எனச் சொல்லியனுப்பிவிட்டார். அதையே வேதவாக்காகக் கருதி மகிழ்ந்த அவன் உடனே வீடு திரும்பிக் கூடையையே தெய்வமாக வைத்து அதற்கே தூப தீப நைவேத்ய ஆராதனைகள் எல்லாம் செய்து, அதன் அருகேயே அமர்ந்து ஏகாக்ர சித்தத்தோடு 'நாராயணா! நாராயணா!' என ஜெபித்துக் கொண்டே இருந்தான். எவ்வேலை தொடங்கினாலும், எவ்விஷயத்தில் பிரவேசித்தாலும் அக்கூடைக்கு ஒரு நமஸ்காரம் செய்யாமல் தொடங்குவதுமில்லை; பிரவேசிப்பதும் இல்லை. இப்படி அவனது மூட பக்தியானது வளர வளர அவன் அக்கூடையின் மீதே ததேகத் த்யானமாயிருக்க ஆரம்பித்து விட்டான். அவனது அந்தரங்க பக்திக்கு இரங்கிய பரந்தாமன் ஒருநாள் அக்கூடையின் மீதிலேயே சங்க சக்ர கதாதாரியாக, நீலமேக ஸ்யாமளனாக, கேசாதி பாதாந்தம் அழகனாகத் தரிசனம் தந்தார். அது கண்ட செம்படவன, அவரைப் பார்த்து, 'நீ யார்?' எனக் கேட்டான். அவர், 'நான் தானப்பா நீ இது வரையில் கூப்பிட்டுக் கொண்டிருந்த நாராயணன். என்னைத் தெரியாதா உனக்கு?' என்றார். அவன் அது கேட்டு, 'நீ யாரோ, நீதான் நாராயணன் என்று யார் கண்டது? எனக்குச் சொல்லிக் கொடுத்த குருநாதர் ஒருவர் இருக்கிறார். அவர் வந்து நீ தான் நாராயணன் என்று சொன்னாரானால் தான் நான் ஒத்துக் கொள்வேன். நான் போய் அவரை அழைத்து வருகிறேன்; நீ அதுவரையில் இங்கேயே இருக்க வேண்டும்' என்றான். தெய்வம் என்ன செய்யும் பாவம்? அன்புக்குக் கட்டுப்பட்ட அந்தத் தெய்வம் 'தெய்வமே' என்று அங்கேயே நின்று கொண்டிருந்தது. செம்படவன் நேரே புரோஹிதர் வீட்டுக்குப் போனான். அன்றோ அவர் வீட்டில் திவஸம். திவஸம் (சடங்கு) முடிந்து திண்ணையில் அமர்ந்திருந்தார் புரோஹிதர். ஆனால் அன்று அவர் கீழ் ஜாதி மக்களைப் பார்க்கவும் மாட்டார்; அவர்களோடு பேசவும் மாட்டார். என்ன செய்வது? செம்படவனே, 'ஸ்வாமி! நாராயணன் வந்திருக்கிறார். நீங்கள் வந்து பாருங்கள். நீங்கள் வந்து பார்த்துச் சொன்னால் தான் நான் ஒத்துக் கொள்வதாகச் சொல்லி அவரை அங்கேயே நிறுத்தி வைத்து விட்டு வந்திருக்கிறேன், என்று கூறினான். அவர் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாக எண்ணி அவன் சொல்வதையும் நம்பாது மௌனமாகவே இருந்துவிட்டார். பின்னும் அவன், 'ஸ்வாமி! அவர் நம்ம கடலில் கிடைக்கிற சங்கும், சூரியன் போல் ஒன்றும், பானைத் தடி ஒன்றும், தாமரைப் பூவும் கைகளில் வைத்துக் கொண்டிருக்கிறார்; நம்ம கடல் போல நீலமாயிருக்கிறார்; கால் முதல் தலை வரை மிக அழகு படைத்தவராக இருக்கிறார்' என்றெல்லாம் வர்ணிக்கத் தொடங்கினான். அதைக் கேட்டதும் தான் அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'நாராயணனைப் பற்றி முன்பின் கேள்விப்பட்டிராத இவன் எப்படி அவரை இப்படி வர்ணிக்க முடியும், என்று ஆச்சரியப்பட்டு, 'எதற்கும் சென்று பார்ப்போம்' எனத் தம் (அன்றைய) நியமங்களையெல்லாம் துறந்து அவனுடனேயே அவன் வீட்டுக்குப் போனார் புரோஹிதர். போய்ப் பார்த்தால் அவனுடைய மீன் கூடையின் மீது

நீல வண்ணனான நாராயணன் நிற்பது அவருக்குத் தெரிந்தது. 'இவர்தானப்பா நீ கேட்ட நாராயணன்' என்றார் அவர். அவனும் உடன் அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஆனந்த சாகரத்தில் மூழ்கினான். ஆனால் புரோஹிதருக்குப் பகவானுடைய சிரஸு முதல் கால் வரையில் இரண்டு திருவடிகளைத் தவிர மற்றைய அங்கங்கள்தாம் கண்ணுக்குத் தென்பட்டன. ஏனெனில் அவருக்கு அவரது திருவடிகளைத் தரிசிக்கக் கூடிய அளவுக்குப் புண்ய விசேஷம் அமையவில்லை. மற்ற அங்கங்களின் தரிசனம் கிடைத்தது கூடச் செம்படவனுக்கு அவர் வாயிலாக வார்த்தை வந்தால்தான் நம்பிக்கை ஏற்படும் என்ற காரணத்திற்காகத்தான். அவர் திருவடியைத் தரிசிக்காமல் திருமேனி முழுதும் தர்சித்தும் கூடத் தரிசனம் பெற்றவராக ஆகவில்லை. ஆனால் கேவலம் மூட பக்தியினால் முன்னுக்கு வந்த செம்படவனோ அசாத்ய நம்பிக்கையின் காரணமாயும், அசஞ்சல பக்தியின் காரணமாயும் வேதம் வல்ல தன் குருவுக்கும் கிட்டாத திவ்யமான பாத தர்சனம் என்ன, திருமேனிக் காட்சி என்ன அனைத்தையும் பெற்றான். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் தெய்வத்தின் பாத தரிசனம் கிட்டுவதென்பது அவ்வளவு எளிதல்ல; பாத தரிசனத்துக்கு மிஞ்சித் தரிசனம் வேறெதுவும் இல்லை என்பனவாம். அத்தகைய பெருமை பாதத்துக்கு ஏற்படுவானேன்?

தெய்வத்தைவிடத் தெய்வத்தின் பாதாரவிந்தங்களுக்கே மஹிமை அதிகம். ஏனெனில் தெய்வம் செய்யும் எல்லாச் செயல்களையும் அந்த இரண்டு பாதங்களே செய்ய வல்லனவாய் உள்ளன. அதுவன்றித் 'திருவடி' என்ற சொல்லே இறைவனைக் குறிக்கும் ஓர் அரும் சொல். பகவானின் பாதங்களை மட்டுமே தரிசித்தால்கூடப் பகவானையே தரிசித்தற்கு கொக்கும். ஆனால் பாதத்தை நீக்கிப் பகவானை மட்டும் தரிசித்தால் அது தரிசனையோடு சேராது. இதைத்தான் மேற் சொன்ன கதை மூலமாக அறிந்து கொண்டோம்.

## 2. கால்களே தாங்குகின்றன

நம்முடைய சரீரத்தின் சுமையையெல்லாம் நம் கால்கள் தாம் தாங்கிக்கொண்டு நிற்கின்றன. நிற்பதோடல்லாது தூக்கிக் கொண்டு நடக்கவும்,—ஏன்—ஓடவும் கூடச் செய்கின்றன. ஆக, நம் சரீரத்துக்கு ஆதாரஸ்தானம் (தாங்கும் புள்ளிகள்) கால்களாகவே உள்ளன. அப்படியிருக்க, விராட் புருஷனாக விஸ்வரூபமெடுக்கும் பகவானின் திருவடிகளே ஸர்வ அண்ட பிண்ட சராசரங்களாகிய அனைத்தையும் தாங்கி நடத்தும் ஆதார ஸ்தானமாக இருக்கிறபடியால் தான் அவன் பாதத்துக்கு அத்தனை மஹிமை!

## 3. அடியார்

பகவானுடைய பாதத்தின் பெருமை பகவானைப் பக்திபண்ணும் பக்தர்களின் பெயரினால்கூட நன்கு விளங்கும். பகவானின் ஸர்வ அங்கங்களையும் பார்த்துத்தரிசிக்கும் அன்பர்களை, 'எண்சாண் உடம்பிற்குச் சிரஸே பிரதானம்' என்ற படிப் பகவான் திருமேனியின் அங்கங்களுள் உத்தமமாகிய தலையின் பெயரால் 'தலையார்' என்றழைப்பதில்லை; 'ஸர்வேந்திரியாணாம் நயனம் ப்ரதானம்'—'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை'... என்றபடி அவர் ஸ்வரூபத்திற் சிறந்த அங்கமாகிய கண்ணின் பெயரால் 'கண்ணார்' என்று சொல்வதில்லை; வேதம் சொன்ன திருவாயின் பெயரால் 'வாயார்' என்று கூறுவதில்லை; இப்படி வேறு எந்த அங்கத்தின் பெயராலும் வழங்காமல், எல்லாவற்றிற்கும் மூலமான திருவடியின் பெயரால் 'அடியார்' என்றே வழங்குவதைக் காண்கிறோம். பகவானின் திருவடியில் ஒட்டிக் கொண்டிருந்த தூசிகளைக்கூட நம் சிரஸில் அணிந்துகொள்ளத் தகும்; அம்மாதிரியேதான் அடியார்களின் பாத தூளியுங்கூட. இதைத்தான் 'பக்தபாதரேணு', 'தொண்டர் அடித்துகள்,' 'பக்த பாததூளி' என்றெல்லாம் வழங்கப்பெறுகின்ற தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பெயரும் 'ஆதி சங்கர பகவத் பாதர்' என வழங்கும் ஆதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் திருநாமமும், வள்ளி பாத இருதயன்,. 'திருப்புகழ் அடியார் திருவடிச் சென்னியார்' என்றெல்லாம் வழங்கப் பெறுகின்ற வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதாநந்த ஸ்வாமிகளின் திருநாமமும் விளங்குகின்றன.

பகவானுடைய அங்கங்களுள் பக்தர்களால் ஸுலபமாகப் பார்த்து அநுபவிக்க முடியாத ஒரே அங்கம் பாதம் தான். நின்ற நிலையில் சற்றுத் தலைநிமிராமல், ஆடாமல், அசையாமல் அப்படியே எளிமையில் பாதங்களைத் தரிசித்து விடலாம். மற்ற அங்கங்களைத் தரிசிக்கவேண்டும் என்றால் சற்றுத் தலைநிமிர்ந்து கண்களை மேலே தூக்கியேனும் சிரமப்படவேண்டியிருக்கும். அந்தக் கஷ்டம் கூட இல்லை அடிகளைக் காண, அந்த அடிகளின் அழகை அடியார்கள்தான் காண முடியும்; அனுபவிக்கமுடியும்.

## 4. பேதங்கள் இல்லை

தெய்வத்தின் பாதங்களை மட்டும் தொழுவதில் ஒருவிதமான சண்டை சச்சரவுகளுக்கும் இடமில்லை; பாதங்களை மட்டும் பார்த்தால் அவை சிவபாதமா அல்லது விஷ்ணு பாதமா என்றெல்லாம் தெரிந்து கொள்ள ஹேது ஏதும் இல்லை; ஏனெனில் பாதத்தின் மேலே உள்ள மற்ற அங்க அடையாளங்

களைக் கண்டதால்தான் சிவனா, விஷ்ணுவா என்றெல்லாம் கண்டுபிடிக்க முடியும். ஆகப் பாதங்களைமட்டும் வழிபட்டால் சிவ, விஷ்ணு பேதங்கள் எல்லாம் எழுவதில்லை; அது மட்டுமன்றி ஆபரணங்கள் ஒன்றும் அணியப் பெறாத வெறும் பாதங்களை மட்டும் தரிசித்தால் அவை சிவன் பாதமா, தேவியின் பாதமா என்றெல்லாம்கூடக் கண்டுபிடிக்க இயலாது. ஆக, ஆண் தெய்வம், பெண் தெய்வம் என்றெல்லாம்கூட வேற்றுமை பாராட்ட வழியில்லை. இதனால் பாதத்தை லிங்காகாரம் போல் தெய்வத்தின் ரூபாரூபமாக (உருவருவத் திருமேனியாக)க் கொள்ளலாம் எனத் தோன்றுகின்றது; பாதத்திற்கு ஒரு வரிவடிவம் இருப்பதால் உருவத் திருமேனியாகவும், பாதத்தை உடையவருடைய ஸ்வயரூபம் வெளிப்படாமையால் அருவத் திருமேனியாகவும் அமைவதால் 'அருவுருவத் திருமேனி' என்றாலே பொருந்தும்.

## 5. பஞ்சக்ருத்யம் செய்தல்

பகவானின் பாதங்கள்தாம் மூவுலகங்களையும் உண்டாக்குகின்றன; அனைத்தையும் காக்கின்றன; அழிக்கின்றன; மறைக்கின்றன; அருள் செய்கின்றன. ஆக, ஸ்ருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரம், திரோதானம், அநுக்ரஹம் என்னும் பஞ்சக்ருத்யம் செய்கின்றன. நடராஜப் பெருமானின் (முயலகன் மீது) ஊன்றிய திருவடி திரோபவத்தையும், தூக்கிய திருவடி 'முத்தி யளித்தல்' என்னும் அநுக்ரஹத்தையும் செய்கின்றன. சிவபெருமானின் திருவடிகள் பாதாளம் வரை ஊடுருவிப் பாயவல்லன; திருமாலின் இரு திருவடிகள் மூவுலகையும் அளந்து விட்டன; பரமசிவனின் பாதங்கள் 64 திருவிளையாடல்களைச் செய்த போதும் ஸுந்தரர்க்காகப் பரவைமனைக்குத் தூது சென்றபோதும், மேலும் பற்பல ஸமயங்களிலும் பூமியை ஸ்பர்சித்தன. அந்தப் பாதஸ்பர்சத்தைப் பூமிதேவி பெற்றிருப்பதால் இப்பூமியில் பிறந்தால்தான் பகவத் பக்தி பண்ண முடியும்; வேறு எந்த உலகிலும் அது ஸாத்யமல்ல என்கிறார்கள் பெரியோர்கள். பகவான் பூமியில் வந்து அநுக்ரஹம் செய்ய வந்தால் முதலில் பூமியை ஸ்பர்சிப்பது தமது பாதத்தால்தான்; திருவடிகளைக் கொண்டு தானே நடந்து வரவேண்டும். அப்படி வருவதால் அவருடைய பூரண அருளைப் பெற அவருடைய திருவடித் தொடர்புதான் முதன் முதலிற் பூமிக்கு வேண்டியிருக்கிறது. அவருடைய சிறடிபட்ட அந்தப் பூமியில் பிறந்து வாழும் மக்களின் பாக்யம்தான் என்னே!

## 6. எல்லாம் செய்ய வல்லவை

மற்றைத் தெய்வங்களெல்லாம் அபயகரத்தாலும், வரதகரத்தாலும் செய்கின்ற அநுக்ரஹங்களையெல்லாம் தேவியின் இரண்டு பாதங்களே செய்யவல்லன ஆதலால் தேவி, அபயவரத கரமுத்ரைகள் கொள்ளத் தேவையில்லை எனப்பாடுகின்றார் ஆதிசங்கரர். தேவியின் பாத தூளி மகிமையைப் பற்றியே சில சுலோகங்கள் பாடியிருக்கிறார் அவர்.

## 7. பாதமும் வேதமும், புராணங்களும்

வேதம் பகவானுடைய பாதங்களை இன்னும் தேடிக்கொண்டே இருக்கின்றது என்று சொல்கிறார்கள் பெரியோர்கள்; வேதத்தின் முடிவில் முருகனின் பாதம் விளங்குவதாகக் கூறுவார் அருணகிரியார். சிவபிரானின் திருவடிவை வேதங்கள் என்றும் வழிபட்டுக் கொண்டிருக்கின்றன; வேதமே அவருக்குப் பாதுகை, பீடம் முதலியன; அவர் திருவடியை வேதம் பயின்ற வேதனை ஈன்ற திருமாலாலேயே அறியமுடியவில்லை என்பது திருவண்ணாமலைப் புராண வரலாறு. ஆனாலும் அத்தகைய திருவடிகள் தாம் அஹங்காரம் அற்ற பக்தர் ஸுந்தரர்க்காக எளிவந்து பரவைமனைக்குத் தூது நடந்தன என்று திருவாரூர்ப் புராணம், பெரிய புராணம் முதலியன கூறும்; அத்திருவடிகளே பாணபத்திரற்காக விறகு விற்கவும், செட்டிப் பெண்களுக்கு வளையல் விற்கவும், மற்றும் மாணிக்கம் விற்கவும் மதுரை மாநகர்த் திருவீதிகளிலே ஏறுபோற் பீடுநடை போட்டன என்கிறது திருவிளையாடற் புராணம். முருகவேளின் திருவடி அழகுக்கு ஆயிரகோடி மன்மதர்களின் அழகும் ஒருங்கு சேர்ந்தாற் கூட ஈடாகாது என்கிறது கந்த புராணம்

## 8. பொது வர்ணனை

பகவானுடைய பாதார விந்தங்கள் அடியார்களின் தலை மேலும், இதய தடாகத்திலும், மனமாகிற ஓடையிலும், நாக்காகிய பூங்காவிலும் பூத்து வாஸனையோடு பொலிவன. அந்தப் பாதங்களின் திவ்ய தேஜஸ் அநேக கோடி ஸூர்யப்பிரகாசத்தையும் வெல்லும் என்கிறது சிர்பாத வகுப்பு. தேவர் முடிமேலும், மயிலின் உடல் நடுவிலும், திருப்புகழ்ப்பா அடியிலும் சேயோன் சிறடி பட்டதென்பர். அருணை முனிவர்.

## 9. யோகிகட்குக் குருகமலத்தில் மலர்வது

பாதங்களைப் பூவிற் சிறந்த தாமரைக்கு ஒப்பிடுவது வழக்கம். யோகம் பயின்று நெறி நின்றால் நம் உடலில் மூலாதாரச் சேற்றில் முளைத்து, முதுகுத் தண்டாகிய ஸுஷும்நா நாடி வழியே நாளமாய் மேலே வளர்ந்து, மணிபூரகம் என்னும் நீர்மட்டத்தைத் தாண்டி அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை வழியே ப்ரஹ்மக்ரந்தி, விஷ்ணுக்ரந்தி, ருத்ரக்ரந்தி முதலிய முடிச்சுக்களையெல்லாம் அவிழ்த்துக்கொண்டு மேலே செல்லும் குண்டலினி சக்தி ஸஹஸ்ராரம் என்னும் த்வாத

சாந்த ஸ்தலத்தில் குருகமலமாக — ஆயிரத்தெட்டு இதழ்த் தாமரையாக—ஞாந ஸௌர்யன் உதிக்கக் கண்டு மலர்கிறது. நமது பாதக மலங்கள் அகல அதன் மேலே தெய்வத்தின் பாத கமலங்கள் பதிந்து விடுகின்றன. ஸௌர்யனைக் கண்டதும் தாமரை மலர்வது இயற்கை. அங்ஙநமே பக்தர்களின் உள்ளங்களில் ஞாந ஸௌர்யோதயம் ஏற்பட்டு விட்டால் பகவானுடைய பாத பங்கஜங்களும் அங்கே தாமாகவே மலர்ந்துவிடும்.

## 10. ராம பாதுகை

ஸ்ரீ ராகவன் விஸ்வாமித்ர மஹரிஷியோடு காட்டுவழி நடக்கையில் அவருடைய பாத ஸ்பரிசத்தால் ஒரு கல் பெண்ணாக மாறிற்று. அவள்தான் அஹல்யை. இதுபோல எவ்வளவோ வைபவங்களை அப்பாதம் செய்துள்ளது. பகவான் ஸ்ரீ ராமனுடைய பாதுகைகளைப் பற்றியே ஆயிரம் ச்லோகங்கள் எழுதி விட்டார் ஸ்ரீ நிகமாந்த தேசிகர். ஸ்ரீராமன் காட்டில் இருந்த போதிலும்கூட அவர் இருக்கவேண்டிய இடத்தை அவருடைய பாதுகைகளே பூர்த்தி செய்யட்டும் எனப் பரதாழ்வார் பாதுகா பட்டாபிஷேகம் பண்ணி அயோத்தியைப் பதினான்கு வருஷங்கள் அரசாட்சி செய்துவந்தார். அந்தப் பாதுகைக்கே அவ்வளவு மஹிமையென்றால் எந்தப் பாதங்களின் ஸ்பர்சம்பட்டு அந்தப் பாதுகைகளுக்கு அவ்வளவு பெருமை வந்ததோ அந்தப் பாதங்களின் மஹிமையை யாரால் எடுத்துரைக்க முடியும்?

## 11. பகவானும் பக்தர்களும்

பகவான் ஸ்ரீமந் நாராயணன் பக்தர்களின் பாதங்களையே தன் நெற்றியில் ஊர்த்வ புண்ட்ரமாக (நாமமாக) அணிந்துகொண்டிருப்பதாக ஸித்தாந்தம். ஸ்ரீவைஷ்ணவர்கள் முத்ரைகளில் ஒருபுறம் சங்கமும், மறுபுறம் சக்ரமும், இடையே (திருமண்) நாமத்திற்குப் பதிலாக இரண்டு பாதங்களே ஊர்த்வ முகமாக நிறுத்திவைக்கப் பெற்றிருப்பதும் இதையே வலியுறுத்தும். ஆதலால்தான் திருப்பதியில் அவருடைய நெற்றித் திருமண் ப்ரஸாதத்தை 'ஸ்ரீபாதரேணு' என்று இன்றும் வழங்குகிறார்கள். பக்த ஸ்ரீ பாதத்தைப் பகவானே நெற்றியிற் குடிகொண்டிருக்கிறானென்றால் பக்த பாததூளியின் மஹிமை அநுபவித்தவர்களுக்குத்தான் தெரியுமே அன்றி ஸாமான்யர்கள் அறியும் தரத்ததன்று. குறத்தி வள்ளியின் பாதத்தைக் குமரவேன் பணிந்தார் என்பது ஆண்டவன் அடியார்க்கு எளியன் என்னும் தத்துவத்தைக் காட்டுகின்றது. ''பணியா என வள்ளிபதம் பணியும் தணியா அதிமோஹ தயாபரனே'' கந்தரநுபூதி-6 மெய்ஞ்ஞானிகளின் பாத மஹிமையைக் கீழ்க்கண்டரிபு கீதைப்பாட்டு நன்கு விளக்குகிறது. ''ஞாலம் உண்டவன் தலைமிசை சுமப்பன் மெய்ஞ்ஞானி வேண்டுவதெல்லாம், ஆலம் உண்டவன் அவன்பினே திரிகுவன் அவனடித்துகட்கன்றோ! சில மன்னரும் மற்றுள தேவரும் திசைதிசை தொழுதேத்தக் காலிரண்டையும் தலைமிசை வையெனக் கழறுவன் கமலத்தோன்'' புதுவீடு கட்டினாலோ, வேறு ஏதாவது புண்ய கார்யங்களை நடத்தினாலோ அவ்விடத்தில் பெரியோர்களை அழைத்து அவர்கள் பாததூளி படவைத்தல் நம் நாட்டு வழக்கம்.

பகவத் பாத ஸேவை பண்ணிக் கைங்கர்ய பரர்களாயிருக்கும் கருடாழ்வாருக்குப் 'பெரியதிருவடி' என்றும், ஆஞ்ஞநேயருக்குத் 'திருவடி, சிறியதிருவடி' என்றும் பெயர்கள் வழங்குவதாலேயே திருவடிப் பெருமை விளங்கும். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தப்ரகாரம், திருக் கோயில்களில் ஸேவார்த்திகளுக்குச் சடாரி ஸாதிப்பதென்பதொரு பழைய வழக்கம். பகவானின் பாதத்திலேயே ஒன்றிவிட்ட நம்மாழ்வார்-சடகோபரின் திருவடி ஸ்பர்சம் நமக்கும் ஏற்படவேண்டும் என்பதற்காகத்தான் இவரது இரண்டு பாதங்களையே தலைமேல் ஸ்பர்சித்து எடுப்பார்கள். இதிலிருந்து இந்த வழக்கம் உண்டாயிற்று. பெருமால் கோயில்களில் விஷ்ணுபாதத்திற்கும், சிவன் கோயில்களில் சிவபாதத்திற்கும், கோயில் மூலஸ்தானங்களைத் தவிரத் தனியேயும் ஸந்நிதிகள் இருப்பதுண்டு; கயையில் உள்ள விஷ்ணு பாதம் பெரியது.

## 12. பாத தீக்ஷை

குரு சிஷ்யனுக்கும், ஆண்டவன் அடியார்களுக்கும் செய்யும் தீக்ஷைகள் பல. அவை ஸ்பர்சதீக்ஷை, நயநதீக்ஷை, மாநஸதீக்ஷை, மந்த்ரதீக்ஷை, ப்ரணவதீக்ஷை, ஹஸ்த மஸ்தக சையோகதீக்ஷை, பாததீக்ஷை எனப் பலவகைப்படுவன. அவற்றுள் பாததீக்ஷை மிகச் சிறப்புடையதும், முக்கியமானதும் ஆகும். நால்வராதியோர், ஆழ்வார்கள், அருணகிரிநாதர், ராமலிங்கஸ்வாமிகள், அபிராமிபட்டர் முதலிய அடியார்கள் எல்லாம் தெய்வத்தின் பாததீக்ஷையைப் பெற்றவர்களே. அருணகிரியார் திருவண்ணாமலையிலும், வயலூரிலும் முருகனின் திருவடிதீக்ஷை பெற்றார்.

## 13. உருவ வருணனை

பகவானுடைய பாதங்கள் செக்கச்செவேலெனச் செந்தாமரை மலர்போல மலர்ந்து வழவழவென்று அழகாக விளங்கும்; பஞ்சைவிட மிருதுவாக இருக்கும்; நடந்தாலோ, தேவிமார் வருடினாலோ மேலும் சிவப்படையும் அளவுக்கு அவ்வளவு மார்தவம் (நுட்பம், படைத்தவை; கழல், கிண்கிணி, சிலம்பு) சதங்கை, தண்டை, வெண்டையம், கொலுசு, பாடகம் முதலிய காலணிகளை அணிந்திருக்கும்; உள்ளங்காலில் சங்கரேகை, சக்ரரேகை, பத்மரேகை, வஜ்ரரேகை, அங்குசரேகை,

த்வஜரேகை முதலியன படர்ந்திருக்கும்; கால் விரல்களின் நகங்கள் அன்பர்களின் அக இருளைப் போக்கவல்ல விசேஷ காந்தியோடு விளங்கும்; செம்பஞ்சுக் குழம்பு பூசப்பெற்றிருக்கும்; மருதோன்றி இலை அரைத்துப் பூசினதுபோல் சிவப்பூட்டப் பெற்றிருக்கும்; மஞ்சள் குங்குமங்களால் நலங்கு இடம்பெற்றிருக்கும் தெய்வத்தின் பாதமஹிமை பேச்சுக்கும், எழுத்துக்கும், கற்பனைக்கும், விவரணைக்கும் அடங்காதது.

| | | |
|---|---|---|
| 1. | தேவார, திருவாசக ஒளிநெறி & ஒளிநெறிக் கட்டுரைகள் | டாக்டர். தணிகைமணி-ராவ்பஹதூர் வ. சு. செங்கல்வராயபிள்ளை, M. A. |
| 2. | கந்தர் கழல் எழுபது | டாக்டர். தணிகைமணி-ராவ்பஹதூர் வ. சு. செங்கல்வராயபிள்ளை, M. A. |
| 3. | கந்தர் கழல் நூற்றைம்பது | டாக்டர். தணிகைமணி-ராவ்பஹதூர் வ. சு. செங்கல்வராயபிள்ளை, M. A. |
| 4. | திருவடித் திருத்தாண்டகம், திருவடித் திருவிருத்தம் | — திருநாவுக்கரசு நாயனார் |
| 5. | பாததூளி மஹிமா ஸௌந்தர்ய லஹரி | — ஆதிசங்கரர் |
| 6. | பாதுகா ஸஹஸ்ரம் | — வேதாந்த தேசிகர் |
| 7. | பாதாரவிந்த சதகம்(மூக பஞ்ச சதி) | — மூக கவி |
| 8. | சீர்பாத வகுப்பு | — அருணகிரிநாதர் |
| 9. | திருவடிப் புகழ்ச்சி | — ராமலிங்க ஸ்வாமிகள் |
| 10. | வைஷ்ணவி யாலய பாலமுருகன் திருவடி வகுப்பு | — அருட்கவி ஸாதுராம் ஸ்வாமி |
| 11. | தவளகிரி முருகன் திருவடி வகுப்பு | — அருளிசை ஸ்ரீ. வே. ஸுப்ரம்மண்யம் |
| 12. | ஸத்குருநாதர் திருவடிப் புகழ்ச்சி | — பாலகவி எம். கே. வேங்கடராமனார் |

# கந்தவேள் கருணை

நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும்உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிஉண்டு நிலையும்உண்டு
ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும்உண்டு
உண்டுஉண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்உறும்
உளம்உண்டு வளமும்உண்டு
தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும்உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயில்அரசே
தார்உண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

—திரு அருட்பா

உ
வேலும் மயிலும் துணை

# திருப்புகழ்ச் சிறப்பு

(திருப்புகழ்ச் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.)

### எது திருப்புகழ்?

உலகு, உயிர், இறைவன் என்ற மூன்றில் உலகம் அறிவற்றது; அழியக் கூடியது. அதன் புகழும் நிலையற்றது. அத்தகைய உலகில் வாழும் உயிர்களாகிய மக்களும் சிற்றறிவும் சின்னாள் வாழ்வும் உடையவர்கள். அவர்களது புகழும் சில நாட்கள் வரையிலிருந்து மறையும். இறப்பு பிறப்பில்லா இறைவனே முற்றறிவுடையவன். ஆதலின், அவனது புகழே அவனைப் போன்று என்றும் நின்று நிலைப்பது. இவ்விதத் தெய்வத் தன்மை பெற்ற புகழே 'திருப்புகழ்' எனப்படும்

### திருப்புகழ் யாருக்கு உரியது?

பொதுவாக 'இறைவன் பொருள் சேர் புகழை'க் குறிக்கும். ஆயினும் சிறப்பாகத் 'திரு' என்ற சொல்லின் பொருளுக்கு இலக்கியமாகவுள்ள முருகன் புகழையே குறிக்கும். 'திரு' என்பது கண்டோரால் விரும்பப்படும் பேரழகு, தெய்வத் தன்மை, முத்திச் செல்வம் முதலிய பல பொருள்படும். முருகபிரானும், அழகுடையான், தெய்வத் தன்மையுடையான், முத்திக் கொரு வித்துமாவான். முருகு என்ற சொல்லே, இளமை, அழகு, தெய்வத் தன்மை முதலிய பொருள்களைத் தருவது காண்க. மேலும் செவ்வேட் பரமனது திரு மந்திரம் திரு ஆறெழுத்து ஆகும். திருப்புகழ் என்ற சொல்லும் ஆறெழுத்தாலான அமைதி கருதத்தக்கது.

### திருப்புகழ் எதனை உணர்த்தும்?

பாலும் பழமும் உண்டான் என்றபோது பால் என்பது பசும்பாலையும் பழம்—வாழைப் பழத்தையுமே உணர்த்தல் போலவும், தேவாரம் என்றால் மூவர் அருளிய பாக்களையும், திருவாசகம்—மணிவாசகர் அருளிச் செயலையும் உணர்த்துவது போலவும் திருப்புகழ்—ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் அருளிச் செய்த பாமாலையையே குறிக்கும்.

"கந்தன் யார்க்கும்
நாதனே எனத் தெளிந்த அருணகிரி நாதனும் முன் நவின்ற பாவை
ஓதுவார் திருப்புகழ் என்றுலகினுள்ளோர் அதற்கு நிக ருண்டோ மற்றைச்
சாதலார் விண்ணவர்கள் தம்புகழைத் திருப்புகழாய்ச் சாற்றிடாரே"

(கந்தப்ப தேசிகர்)

### திருப்புகழ் சிறப்பியல்:

1. முருகப் பரமனால் 'முத்தைத் தரு' என்று முதலெடுத்துக் கொடுக்கப்பட்டது 'உலகெலாம்' என்று உமாதேவன் சேக்கிழாருக்கு அடியெடுத்துவியது போல உமை பாலனும் அருணைமுநிவருக்கு அருள் செய்யத் தோன்றி உருவானது திருப்புகழ்.

2. இதனை ஆக்கியோனாகிய அருணகிரியாலும் சிறப்புடையது. அவர், தம்பால் இல்லாத குறைகளைக் கூடப் பிறருக்காகத் தமதாக ஏற்றுக்கொண்டு முருக வேளிடம் அவற்றின் நீக்கத்திற்காக முறையிடும் கருணைமிக்கது. இதனாலன்றோ 'கருணைக்கு அருணகிரி' எனப்பட்டார்.

3. 'எங்கே நினைப்பினும் அங்கே என் முன் வந்து எதிர் நிற்பனே' என்று கூறும் அளவுக்கு வேண்டிய போதெல்லாம் வேண்டிய இடங்களில் வேலிறைவன் திருவுருக் காட்சி பெறத் தக்க சித்தி பெற்ற தெய்வக் கவிஞர் திருவாய் மலர்ந்தது.

4. செழுங் கனித்தீஞ் சுவை கலந்த சந்த மணங் கமழும் செந்தமிழ்ப் பாக்களால் கற்றோரும் மற்றோரும் கந்தப் பரமனைத் துதிக்க அமைந்த தோத்திர மாலை திருப்புகழ்.

"அறிந்தார் அறியார் இரண்டுமிலார், யாரும் எனைப் போலுனைத் துதிக்க
அளித்த அருணகிரிநாதன்,
உதிருங்கனியை நறும்பாகிலுடைத்துக் கலந்து தேனை வடித்
தூற்றி அமுதினுடன் கூட்டி ஒக்கக் குழைத்த ருசி பிறந்து
மதுரங் கனிந்த திருப்புகழ்"

என்பது திருமலை முருகன் பிள்ளைத் தமிழ்.

5. மரணத்தை மாற்ற வானவர் பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்தனர். அப்போது கடல் அலைந்தது, மந்தரஞ் சுழன்றது; வாசுகி உடல் நெளிந்தது; வானவரும் தானவரும் கை சலித்தனர். ஆனால், அவ்வளவு பாடுபட்டுக் கிடைத்த அமுதத்தையுண்டும் தேவர்களால் கற்பத்தே மாயுந் தன்மையைத் தடுக்க வழியில்லாமல் போய்விட்டது. ஆனால் பரமானந்த சாகரத்தை அருணகிரி கடைந்த போது மந்தரஞ் சுழலவில்லை, வாசுகி வருந்தவில்லை, வானவர் தளரவில்லை, 'பூர்வ, பச்சிம, தக்ஷிண, உத்தர திக்குள பக்தர்கள் அற்புதமென ஓதும் சித்திர கவித்துவ சத்த மிகுத்த திருப்புகழ்' அமுது பிறந்தது.

"சத்தநிலை வழுவாமல் அந்தமொரு சற்றும் வெளிறாமல் அமுதம்
தழூறு பதினாறாயிரந் திருப்புகழ்."

6. சேயோன் ஒருவனையே புகழ்பவர் அருணகிரியார் என்றாலும் பிற தெய்வங்களைக் காய்தல் உவத்தலன்றி அவ் வவற்றின் சிறப்புக்களையெல்லாம் கூறி அவற்றை முருகபிரானுடன் தொடர்பு படுத்தும் தனிச் சிறப்புடையது திருப்புகழ். சிவனாரையோ, தேவியையோ கணபதியையோ பாடியிருக்கும் பாடல்கள் அத்தெய்வங்களை வழிபடுவோர் கூட அவ்வளவு சிறப்பாக உரைத்திருக்க முடியாதென்று கூறும்படி அமைந்துள்ளன. இவ்வாறே சேயோனின் நெடிய மாமனாரான திருமாலின் துதிகளும் அமைந்துள்ளன. சிவனாரை 'அனகன் பெயர் நின்றுருளுந் திரிபுரமும் திரிவென்றிட இன்புடன் அழலுந்த நகுந் திறல் கொண்டவர் புதல்வோனே' என்றும், விநாயகரை: 'கடமிஞ்சி அனந்த விதம் புணர் கவளந்தனை உண்டு வளர்ந்திடு கரியின் துணை, என்று பிறந்திடு முருகோனே' என்றும், திருமாலை; 'பனகந் துயில்கின்ற திறம் புனை கடல் முன்பு கடைந்த பரம்பரர், படரும் புயல் என்றவர் அன்புகொள் மருகோனே' என்றும், தேவியை 'உவகாரி அன்பர் பணி கலியாணி எந்தையிடம் உறை நாயகங்கவுரி—சிவகாமி ஒளிராணியின் கரமில் மகிழ்மாதுளங் கனியை ஒருநாள் பகிர்ந்த உமை—அருள் பாலா' என்றும், பிரம தேவரை 'வேதா மைத்துன வேளே' என்றும், சரசுவதியைச் 'சாரதியுத்தமி துணைவ' என்றும் தாம் கொண்ட பரத்துவக் கொள்கை மாறாமலும் நடுநிலை தவறாமலும் பாடும் பெருமை பாராட்டத் தக்கது.

7. பழங்கால வண்ணப் பாக்களைப் போலன்றி, பாட்டின் முற்பாதியில் சிற்றின்ப நிலை கொண்டலையும் தீவினை தீர வேண்டுதலான விண்ணப்பப் பகுதியும், பிற்பகுதியில் பன்னிருகையன் பரத்துவத்தில் முடிப்பது என்ற அற்புதப் புரட்சியையும் திருப்பகழ் தன்னகத்தில் கொண்டுள்ளது.

8. 'புகலியல்வித்தகர் (ஞானசம்பந்தர்) போல அமிர்தகவித் தொடை பாட' அருள் பெற்ற அருணகிரியார் 'சந்தமே பாடவல்ல தமிழ் ஞான சம்பந்தரை' அடியொற்றிப் பாடிய பல்சந்தப் பரிமளப் பாமாலையாக மிளிர்வது திருப்புகழ். உயர் சைவத் திருவாளர் தணிகைமணி வ. சு. செ. அவர்களது குறிப்பின்படி 1008 சந்த பேத வகைகள் கொண்டுள்ளது திருப்புகழ்.

9. 'இயல் இசை முத்தமிழ் கூறித், திறமதனைத் தெளிவாகத் திருவருளைத் தரு'மாறு வேண்டிப் பெற்றமையால் இயல், இசை, நாடகமாகிய முத்தமிழ் இலக்கியமானது திருப்புகழ். சென்னை மாநகரமெங்கும் திருப்புகழ் முழங்கச் செய்த ஸ்ரீ வள்ளிமலை சுவாமிகள் 'திருப்புகழில் பலவகை மர்ம தாளங்கள் இருக்கின்றன' என்றும், இத் தாளச் சிறப்பைக் காலஞ் சென்ற இசை மன்னர் நயினா பிள்ளை போன்றவர்களும் வியந்து பாராட்டியதாகவும் கூறியுள்ளார்.

10. 'அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாளே' 'அறிவும் அறியாமையுங் கடந்த அறிவு திருமேனி யென்றுணர்ந்துன், அருணசரணாரவிந்த மென்றடைவேனோ'

என்பன போன்ற திருவாக்குகளால் திருப்புகழ் சாத்திரக் கருவூலமாய்த் திகழ்வது காண்வாம்.

11. மிகச் சிறியனவும் பெரிதும் பெரியனவும், பாட்டுக்கள் அமைந்த பாடலாகவும், அந்தந்தத் தலப் பெயர்கள் வருவதற்கேற்ற சந்த அமைப்பு கொண்டும் மிளிரும் நடையழகு, சொல்லழகு, பொருளழகு, கவி சாதுர்யம், பலவகை அணிகள் மிளிரப் பாடுந் திறம் அத்தனையும் கொண்டது திருப்புகழ்.

12. முருகன் அருள் வாக்கு தர எழுந்த குருவாக்கு திருப்புகழ். அவர் உலகிற்கு உபதேசமாகக் கூறுவன சில.

'காலையிலெழுந்து நாமமெ மொழிந்து காதலுமை மைந்த என ஓதுக'
'மைந்தா குமரா எனும் ஆர்ப்பு(ய்)ய மறவாதே'

---

# அருள்வாய் முருகா அருள்வாயே!

—சௌந்தரா கைலாசம்—

நிலையாப் பொருளை நிலையென்றே
நினைத்து நெஞ்சே தடுமாறி
அலைந்து கெடுதல் அழகாமோ?
அழிவைத் தேடி அணைப்பதுவோ?
குலைகுலை யாய்மாங் கனியிருக்கக்
கொள்ளுவ தோநீ எட்டியினை?
கலையா அழகுக் கந்தனையே
கண்டால் உண்டோ இடரதுவே?

கருணைக் கடலே குடிபுகுவாய்
கவலைக் கடலை அகற்றிடுவாய்
முருகா அழகா சிவகுமரா
முடியா முதலே அருளுருவே!
உருகிப் பருகி உளங்குளிர்ந்திவ்
வுலகில் பிறவிப் பயனடையத்
தருவாய் எனக்கோர் வரமுடனே
தனிச்செந் தமிழே சுவையமுதே!

செயலில் வெற்றி கண்டிடவும்
சிந்தையில் அன்பே கொண்டிடவும்
புயலாய்த் துன்பம் வந்தாலும்
புன்னகை யுடனே எந்நாளும்
அயரா தென்றுமி ருந்திடவும்
அருளாம் அமுதம ருந்திடவும்
வியன்தமி ழாலுனைப் பாடுவனே,
வேல்வேல் வேலென்று ருடுவனே!

உடையேன் காதல் நெஞ்சினிலே
உன்றன் புகழைப் பாடிடவே
வடிவேல் முருகா! அறியாயோ!
வந்தே அருளைப் புரியாயோ?
கடையைக் கட்டும் முன்னாலே
கன்னித் தமிழில் பாமாலை
அடியேன் சூட்டி மகிழ்ந்திடவே!
அருள்வாய் முருகா! அருள்வாயே!

*WITH BEST COMPLIMENTS*

*OF*

# Yoga Trading Company

COMMISSION AGENTS FOR LOCAL PRODUCE

**68-A, FOURTH CROSS STREET**

**COLOMBO—11.**

Tel: **26065.**

With Best Compliments

From

# Ismail's Commission Agency

COMMISSION AGENTS FOR CEYLON PRODUCE

No 199, Old Moor Street,

COLOMBO-12.

*Telephone:* 36319

With Best Compliments

From

# SITHY VINAYAGAR STORES

GENERAL MERCHANTS

**10, St. John's Road,**

**Colombo-11.**

Telephone: 25424

# ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம்

## 1977

## வரவு செலவு கணக்கு விபரம்

### வரவு

| விபரம் | ரூ. சதம். |
|---|---|
| முன் வருட வரவு வங்கியில் இருப்பு | 47002.72 |
| மலர் விற்பனை | 9632.75 |
| முன்வருட பாக்கி வசூல் | 3158.23 |
| வங்கி வட்டி வரவு | 6098.11 |
| உபயக்காரர்கள் விளம்பரம் | 23000.00 |
| 'கவர்' அன்பளிப்பு | 12272.34 |
| | 101164.15 |

### செலவு

| விபரம் | ரூ. சதம். |
|---|---|
| மலர் அச்சு செலவு | 3890.00 |
| ஒளி, ஒலி செலவு | 2580.00 |
| பாய், நாற்காலி | 1135.00 |
| வாழைமரம், பூமாலை, மேடை அலங்காரம் | 946.05 |
| கதிரேசன் மண்டபம் வாடகை. | 3500.00 |
| போக்குவரத்து பெட்ரோல், எயர்போர்ட் செலவு | 577.50 |
| பேனர் | 150.00 |
| பள்ளிப்புத்தகங்களும் உபகரணங்களும் அன்பளிப்பு. | 5168.27 |
| போட்டோ, அல்பம் செலவு | 710.00 |
| ரசீதுபுத்தகம் கவர் இதர செலவு | 137.50 |
| வங்கியிலும் கைவசமும் இருப்பு | 82359.83 |
| | 101154.15 |

மேற்படி கணக்கு கமிட்டி அங்கத்தவர்களால் 'சரி' என அங்கீகரிக்கப்பட்டது

தலைவர்

ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம்.

*With Best Compliments*

*From*

**K. M. KALIAPPA PILLAI & Co., Ltd.**

**263, SEA STREET,**

**COLOMBO – 11.**

*Telephone:* 31913.

*WITH THE BEST COMPLIMENTS*

*OF*

# Colombo Trade Agencies

"MANUFACTURERS OF POLYTHENE BAGS"

**296/16, Jampettah Street,**

**Colombo–13.**

Telephone: 35202.

Cable: DOLANKA

*With Best Compliments*

*From*



# ANANHA STORES

WHOALESALE DEALERS IN TEXTILES

105, Bankshall Street,

COLOMBO-11.

Phone **27643** Cable **"Vinayagar"**

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

# DECCA SAREE HOUSE

**121, Third Cross Street,**

**COLOMBO-11.**

WITH BEST COMPLIMENTS FROM

# Sri Lanka & International Traders

IMPORTERS WHOLESALERS & COMMISSION AGENTS

49 FOURTH CROSS STREET,

COLOMBO-11.

Agents and Distributors for

***NISCO BRAND AUTOMOTIVE LEAF SPRINGS***

MANUFACTURED BY

***MESSRS. NISSAN SPRINNGS PVT LTD.***

JABALPUR - INDIA.

*Telephone:* 24430 *Cable:* *SIVABROS*

SILENCE STRENGTHENS THOUGHT POWER

With Best Compliments

From

# RAVI JEWELLERS

115, SEA STREET,

COLOMBO-11.

HIGH PRICES ARE PAID FOR YOUR
OLD GOLD CARAT GOLD, SILVER
JEWELLERIES AND DIAMONDS

---

With Best Comliments

From

# DEVI JEWELLERS

No. 131, SEA STREET,

**COLOMBO-11.**

GET THE HIGHEST PRICE FOR YOUR
OLD GOLD CARAT SILVER
JEWELLERIES AND DIAMONDS

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

# MAITHILY'S
## JEWELLERS

**133/7, Sea Street,**

**COLOMBO-11.**

*With Best Compliments*

*From*

# KAMALA JEWELLERS

**Exclusive Jewellers**

**Pawn Brokers**

*A Reliable Place For Genuine Gold*

**84 SEA STREET**

**COLOMBO-11.**

Telephone: 27648

*WITH BEST COMPLIMENTS*

*OF*

# BALAGANESH'S

MANUFACTURING JEWELLERS

**156, SEA STREET,**

**COLOMBO-11.**

# பாலகணேஷ்

நகை தயாரிப்பாளர்

156, செட்டியார் தெரு, கொழும்பு-11.

*WITH THE BEST COMPLIMENTS*

*OF*

**NITHYAKALYANI JEWELLERS**

40, SEA STRFET

***COLOMBO-11.***

*Telephone:* 21617

With Best Compliments

From

V

# The Kalaimagal Company

**124, Sea Street,**

**Colombo-11.**

With Best Compliments

From

# Meena Textiles

**Second Cross St.**

**Colombo-11.**

*With Best Compliments*

*From*



**JAYA LALITHA**

**JEWELLERY MART**

**65, Sea Street,**

**COLOMBO-11.**

WITH BEST COMPLIMENTS

FROM

V

# VIJAYA CORPORATION

243, MAIN STREET,

COLOMBO-11.

Tele. 27359

With Best Compliments

From

VIJAYA LALITHA JEWELLERY MART

76 Sea Street,
COLOMBO-11

Phone: 26042

With Best Compliments

From

Letchumanan Textiles

78 SEA STREET,
COLOMBO-11

Phone: 33584

With Best Compliments

of

MANICK AUTOMOBILES

DEALERS IN MOTOR SPARES

23, JAYANTHA WEERASEKARA MAWATHA,

**Colombo–10.**

Telephone : 26313

With Best Compliments

of

# Jayalakshmi Stores

**91A, Maliban Street,**

**COLOMBO-11.**

*Telephone:* 26149

WITH BEST COMPLIMENTS

FROM

V

# SP. Perianna Pillai & Co.,

**TEXTILE MERCHANTS**

180, 2nd Cross Street,

COLOMBO-11.

Telephone: 25378

With Best Compliments

From

*The Famous Name in Jewellery*

# Jaya Chitra Jewellery Place

**No 109 SEA STREET,**

**COLOMBO-11.**

---

With Best Compliments

From

## NEW MUTHU MEENACHI JEWELLERY PALACE

No. 152, SEA STREET,

COLOMBO-11.

T'PHONE 33164

*WITH BEST COMPLIMENTS*

*OF*

# RANJANA STORES

**52, Bankshall Street,**

**Colombo—11.**

Tele. 25851

*With Best Compliments*

*From*

# RAJA ENTERPRISE

**92-1|4, SECOND CROSS STREET,**

**COLOMBO-11.**

Tele: 24298

With Best Compliments

From

# RIO JEWELLERS

**191, Sea Street,**

**Colombo-11.**

Telephone : 22927

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

# Jayatissa Brothers

MINI DEPT STORES

77, 2nd CROSS STREET,

COLOMBO-11.

*With Best Compliments*

*From*



# LALITHA JEWELLERY MART

JEWELLERS AND GEM MERCHANTS

99, 101, 103, 105, *Sea St.*

COLOMBO-11.

SRI LANKA.

*Telephone:* 23691

*Cable:* LALITHAS

WITH BEST COMPLIMENTS

OF

# S. PERIANNA PILLAI & Co.,

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

**228, KEYZER STREET,**
**COLOMBO–11.**

Telephone: ***28297.***    T'Grams: **BRINDA.**

*WITH COMPLIMENTS*

*FROM*

V

# MANIAM STORES

75, & 77, PRINCE STREET,

COLOMBO—11.

T'Phone: **25493.**

*WITH BEST COMPLIMENTS*

*OF*

# NEW LANKA STORES

DEALERS IN SUNDRY GOODS

**26, WOLFENDHAL STREET,**

**COLOMBO—13.**

Telephone: ***36442.***

WITH BEST COMPLIMENTS

OF

# PL. SV. Sevugan Chettiar

TIMBER MERCHANTS

**140, ARMOUR STREET,**

**COLOMBO—12.**

*Telephone:* **24629.**

*With Best Compliments*

*From*

# CEYLON STEEL CO,

HARDWARE MERCHANTS

**332, Old Moor Street,**

**Colombo-12.**

Phone: 34875

Cables: CEYSTCO

With Best Compliments

From

# Ceylon Chemical Suppliers

136, Wolfendhal Street

**COLOMBO-13**

*Telephone:* 35810
32117

With Best Compliments

From

NATHAN & CO.,

71, 4th Cross Street,

**Colombo-11.**

Telephone: 29241

*WITH THE BEST COMPLIMENTS*

*OF*

# RAJAH STORES

TEXTILE MERCHANTS

28, Galle Road, Wellawatte

COLOMBO-6.

Telephone: **82657**

*WITH BEST COMPLIMENTS*

*OF*

# JEYA GEM TEXTILES

95, MAIN STREET,

**COLOMBO-11.**

*Telephone*: 33771

*With Best Compliments*

*From*

# GEMINI STORES

**36, Trincomalee Street,**

**KANDY.**

*Phone:* 4119

COLOMBO Office:

63, Bankshall Street,

COLOMBO-11.

*With Best Compliments*

*From*

# Nanda Textiles

No 140, KEYZER STREET,

COLOMBO-11.

*With Best Compliments*

*From*

# MAHESH Trading Company

**127, Second Cross Street,**

**COLOMBO-11.**

Phone: 25811

SPACE DONATED

BY

**SIVAJINE**

111, Prince Street,

COLOMBO-11.

*With Best Compliments*

*From*

# Island Trade Centre

GENERAL HARDWARE MERCHANTS,

**437, OLD MOOR STREET,**

**COLOMBO—12.**

Tele. 31223

Telegrams: RAJAMUR

*WITH BEST COMPLIMENTS*

*OF*

# M. I. P. Fernando

**P. O. Box 429.**

**Colombo.**

WITH THE BEST WISHES

FROM

# General Trading Agency,

**152, 4th, Cross Street, Pettah.**

**G. T. A.**

*DEALERS IN AGRO PRODUCE*

Telephone: **29562.** T'Grams: **GENTRADES**

*WITH BEST COMPLIMENTS*

*OF*

**SIVASAKTHY STORES**

IMPORTERS GENERAL MERCHANTS & ESTATE SUPPLIERS

240, KEYZER STREET,

**COLOMBO-11.**

*Telephone:* 21636

*WITH COMPLIMENTS*

*FROM*

V

**MODERN HARDWARE CENTRE**

GENERAL HARDWARE MERCHANTS

43, *ABDULABBAR MAWATHA,*

**COLOMBO—12.**

Telephone: 35468

*With Best Complim-nts*

*From*

**ISLAND FORAGE STORES**

**205, Colombo Street,**

**KANDY.**

Dial: 3330

WITH BEST COMPLIMENTS

OF

# Ceylon
# Marine & Hardware Stores

GENERAL HARDWARE MERCHANTS

IMPORTERS & STOCKISTS of FACTORY & ESTATE REQUISITES

**353 & 261, OLD MOOR STREET,**

**COLOMBO—12.**

*Phone:* 32067.

*With Best Compliments*

*From*

# K. N. G. KANAPATHY & CO.

2, MAIN STREET,

**AVISSAWELLA.**

Phone ; 305

"நல்லோரை நாடு ஆனால்

அல்லோரை வெறுக்காதே"

# பீப்பிள்ஸ் ட்ரேட் & சப்ளைஸ்

143, மெலிபன் வீதி,
கொழும்பு-11.

112, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

தொலைபேசி: 23509, 25389

WITH BEST COMPLIMENTS

OF

# Siva Shanmugarajah & Co.,

General Merchants, Commission Agents and Export Suppliers

**No. 45, FOURTH CROSS STREET,**

**COLOMBO-11.**

*With Best Compliments*

*From*

# Kavitha Motors

**354, Sri Sangarajah Mawatha,**

**Colombo – 10.**

Telephone: ***31182.***

# K. SELVARAJAH

204, GAS WORKS STREET,

Colombo—11.

*Telephone:* ***32107***

*With Best Compliments*

*From*

# DESIGN TEXTILES

118C, Galle Road, Wellawatte,

COLOMBO-6.

*WITH BEST COMPLIMENTS*

***FROM***

# KALA TRADING CENTRE

111, Fourth Cross Street.

COLOMBO-11.

Telephone: 22584

*WITH BEST COMPLIMENTS*

*OF*

# MATHURAI STORES

IMPORTERS & EXPORTERS

DEALERS IN FANCY GOODS & TOYS.

**49, CHINA STREET,**

**COLOMBO–11.**

Telephone: ***24048.***

*WITH BEST COMPLIMENTS*

*OF*

# M. R. MARUTHA PILLAI

**No. 21, Deans Road,**

**Maradana**

**Colombo—10.**

Telephone: **93605.**

With Best Compliments

of

SRI AMBAL HOTEL

483 Maradana Road,

Colombo-10.

Phone: 92322

*With Best Compliments*

*From*

**SRI LANKA GENERAL STORES**

238, KEYZER STREET,

COLOMBO-11.

*Phone:* 22859

With Best Compliments

From

S. S. V. Peramanayagam Pillai

161, 5th Cross Street,
COLOMBO-11.

*Telephone:* 24577

WITH BEST COMPLIMENTS

FROM

# Eesan & Bros

General Merchants & Commission Agents

No 23, St John's Road,

COLOMBO-11.

T'PHONE :23321

With Best Compliments

Form

# Nathan Traders

GENERAL MERCHANTS

**No 18, St. John's Road,**

**COLOMBO-11.**

Telephone: 32415

With The Best Compliments

From

**K. MUTHUSAMY PILLAI & CO,**

**157, Sea Street,**

**Colombo-11.**

With The Best Compliments

From

**ANANDHA INDUSTRIES**

***222 1|1 Gasworks Street,***

***Colombo-11.***

With Best Compliments

From

v

# SANTHI TEX

DEALERS IN TEXTILES

119-1/7, PRINCE STREET,
COLOMBO-11.

T'Phone: **25424.**

With Best Compliments

From

# P.T.K. Ratnam & Co

General Merchants, Dealers in:

Sundry Goods, Stationery, Empty Bottles Corks
Sealing Wax, Brass, Copper, Leads, Metal Etc.

**No 37, Dam Street,**

**Colombo-12.**

Grams: "Ratnam" Phone: 33461

Bankers: National & Grindlays Bank

With Best Compliments

From

## GEVA ENTERPRISE

No. 308, SEA STREET.

COLOMBO-11.

*WITH BEST COMPLIMENTS*

*OF*

**KAVITHA**

**102 9/2, 3rd Cross Street,**

**COLOMBO-11**

With Best Compliments

From

# Rathna Mahal Jewellers

No. 97, SEA STREET,

COLOMBO-11.

Phone: 31357

*With Best Compliments*

*From*

# RAMSETHU & CO.

**65, 4th Cross Street,**

**COLOMBO-11**

**Phone: 23686**

ஓம்

ஸ்ரீ ஞானானந்தாய நம!

சகலவிதமான கட்டிட இரும்பு சாமான்கள்

"சிலோன் ஸ்டீல் கோர்ப்பரேஷன்" லிஸ்டு

விலைப்படி விற்பனை செய்கிறோம்

எவ்வளவு சிறிய ஆர்டர்

ஆனாலும் சிரத்தையுடன்

கவனிப்போம்

# ஜுப்பிட்டர் ஸ்டீல் கம்பெனி

இறக்குமதியாளர்கள்

**353, பழைய சோனக தெரு,**

**கொழும்பு-12**

போன்: 36443.

EVERY DESCRIPTION OF

**BUILDING HARDWARE MATERIALS**

**ARE SOLD AT LIST PRICE OF**

**Ceylon Steel Corporation**

Any Small or Large Orders

Will Receive Our

Careful Attention

# Jupiter Steel Company

IMPORTERS & DEALERS

**353, Old Moor Street,**

**COLOMBO - 12.**

*Telephone:* 36443

# *HOME SCIENCE CENTRE*

*ploma Course and Certified Course in*

* Cake making and Modern Cake Decoration, including Moulding, Modelling, gum paste etc.

(a) General Cookery including short-eats, Puddings, Courses, Savoury rice, Salads, Wines etc.

(b) Floristry-Making-Garlands-Hair-Sprays-Bouquets-Brides Flowers etc.

(c) Scientific Dressmaking.

(d) Painting: Fabric, silk, glass, canvas, Pen painting etc.

(e) Flower Making: Cloth, Wax & Paper.

(f) Flower Arrangement: Western and Japanese

(g) Handicrafts - Crochet, Tatting, Knitting, Mock Smocking etc.

(h) Batik Printing and Tie and Dye.

(i) Hair Styles

(j) Machine & Hand Embroidery.

*Further particulars can be had from:*

Mrs. HAIMA SOMASEKARAM

*Principal*

DIPLOMA HOLDER

TRAINED IN LONDON—MALASIA—INDIA.

"R R IPA"
?4, Pamankade Lane,
LOMBO 6.
..ne: 82744

ஓம்:

*With Best Compliments From:—*

# GEMINIA TRADERS

GENERAL MERCHANTS

*DEALERS IN*

**RADIOS, RADIO SPARES, & ELECTRICAL GOODS**

**80 | 15, PRINCE STREET,**

**COLOMBO–11.**

இச்சிறப்பு மலர் ஸ்ரீ ஞானனந்த சேவா சமாஜம் சார்பாக
திரு. P. கிருஷ்ணசாமி அவர்களால் தொகுக்கப்பட்டு, C. N. P. Ltd. அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.